# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023–2024

## மானியக் கோரிக்கை எண். 32


**திரு. சி.வி. கணேசன்**
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2023

**அட்டவணை**


| **வ. எண்** | **பொருளடக்கம்** | | **பக்க எண்** |
|---|---|---|---|
| **1. தொழிலாளர் துறை** | | | |
| *1.1.* | துறையின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் | | *03* |
| *1.2.* | நிர்வாக அமைப்பு | | *05* |
| *1.3.* | தொழிலாளர் சட்டங்கள் | | *06* |
| | *1.3.1.* | தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கம் உறுதி செய்தல் | *06* |
| | *1.3.2.* | குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் / மறுநிர்ணயம் செய்தல் மற்றும் உரிய நேரத்தில் ஊதியம் வழங்குவதை உறுதி செய்தல் | *19* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | *1.3.3.* | தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947-இன்கீழான தொழிலாளர் சட்டத் திருத்தங்கள் | *23* |
| | *1.3.4.* | உணவு நிறுவனங்களில் பணிநிலைமைகளை முறைப்படுத்துதல் | *27* |
| | *1.3.5* | மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், *1961*-இன் அமலாக்கம் | *28* |
| | *1.3.6.* | பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன் | *29* |
| | *1.3.7.* | பத்திரிக்கை நிறுவனங்களில் பணிநிலைமைகளை முறைப்படுத்துதல் | *30* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | *1.3.8.* | தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்களில் ஊதியத்துடன் விடுமுறை / இரட்டிப்பு ஊதியம் உறுதி செய்தல் | *31* |
| | *1.3.9.* | மகப்பேறு உதவிகள் உறுதி செய்தல் | *32* |
| | *1.3.10.* | பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல் | *33* |
| | *1.3.11.* | ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம், *1970*-இன் கீழ் பதிவு மற்றும் உரிமங்கள் | *34* |
| | *1.3.12.* | புலம் பெயரும் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாத்தல் | *35* |
| | *1.3.13.* | நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை அமல்படுத்துதல் | *37* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | *1.3.14.* | தோட்ட நிறுவனங்களில் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்துதல் | *41* |
| | *1.3.15.* | குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் முறைப்படுத்துதல் | *48* |
| | *1.3.16.* | கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் | *59* |
| | *1.3.17.* | தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பை வழங்கும் நீதிமுறைச் சார்புடைய நடைமுறைகள் | *68* |
| *1.4.* | சட்டபூர்வமான / சட்டபூர்வமற்ற வாரியங்களும், குழுக்களும் | | *71* |
| *1.5.* | தொழில் நடத்துவதில் எளிய முறை | | *73* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| 1.6. | தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் அறிமுகம் | | 78 |
| 1.7. | நல வாரியங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள் | | 80 |
| | 1.7.1. | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் | 80 |
| | 1.7.2. | 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் | 85 |
| | 1.7.3. | தமிழ்நாடு கட்டுமானக் கழகம் | 102 |
| | 1.7.4. | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் | 104 |
| | 1.7.5. | இஷ்ரம் | 110 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| **2. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்** | | | |
| *2.1.* | இயக்ககத்தின் நிர்வாக அமைப்பு | | *118* |
| | *2.1.1.* | தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு | *119* |
| | *2.1.2.* | கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவு | *120* |
| *2.2.* | இவ்வியக்ககத்தால் அமலாக்கப்படும் சட்டங்கள் | | *120* |
| | *2.2.1.* | தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு | *120* |
| | *2.2.2.* | கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவு | *125* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| *2.3.* | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் முக்கிய செயல்பாடுகள் | | *129* |
| | *2.3.1.* | தொழிற்சாலைகளில் தொழிலாளர் சட்டங்கள் அமலாக்கம் | *129* |
| | *2.3.2.* | தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வு திட்டம் | *130* |
| | *2.3.3.* | சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம் | *135* |
| | *2.3.4.* | தொழிற்சாலைகளில் அழுத்தக்கலன் செயல்பாட்டின் பாதுகாப்பினை உறுதி செய்தல் | *137* |
| | *2.3.5.* | தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு | *138* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 2.3.6. | தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவின் இதர பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகள் | 140 |
| | 2.3.7. | தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உடல் நல மேம்பாட்டு செயல்பாடுகள் | 142 |
| | 2.3.8. | தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் முறை அகற்றுதல் | 146 |
| | 2.3.9. | இடர்தரும் செயல் முறைகள் கொண்ட தொழிற்சாலைகளுக்கான வழிவகைகள் | 150 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| *2.4.* | பட்டாசு தொழிற்சாலைகளில் பணியிட பாதுகாப்பினை மேம்படுத்த சிறப்பு செயல்பாடுகள் | | *154* |
| | *2.4.1.* | பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வுகள் | *155* |
| | *2.4.2.* | பட்டாசு தொழிற்சாலைகளில் சிறப்பு குழு ஆய்வுகள் | *157* |
| | *2.4.3.* | பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகள் | *158* |
| | *2.4.4.* | பட்டாசு தொழிற்சாலைகளுக்கான நடமாடும் கண்காணிப்பு குழு | *163* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | *2.4.5.* | பட்டாசு தொழிற்சாலைகளுக்காக விருதுநகர் மாவட்டத்தில் செயல்படும் மாவட்ட அளவிலான பாதுகாப்பு குழு | *164* |
| | *2.4.6.* | ஆய்வு முறையில் திருத்தம் | *168* |
| | *2.4.7.* | பட்டாசு தொழிற்சாலைகளுக்கான தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் | *169* |
| | *2.4.8.* | தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியம் | *170* |
| | *2.4.9.* | பட்டாசு தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள் | *171* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| *2.5.* | தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம் | | *175* |
| | *2.5.1.* | மாநில பாதுகாப்பு விருதுகள் | *175* |
| | *2.5.2.* | உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் | *176* |
| *2.6.* | கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகள் | | *177* |
| | *2.6.1.* | கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கப்படுத்துதல் | *178* |
| | *2.6.2.* | கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வு திட்டம் | *179* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 2.6.3. | சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம் | 182 |
| | 2.6.4. | கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி | 183 |
| 2.7. | இவ்வியக்ககத்தின் பிற செயல்பாடுகள் | | 186 |
| | 2.7.1. | வெளிமாநில தொழிலாளர்களின் விவரங்களை வலைதளத்தில் பதிவு செய்தல் | 186 |
| | 2.7.2. | தமிழ்நாட்டில் எளிமையாக்கப்பட்ட தொழில் தொடங்கும் முனைப்பில் மேம்பாடு | 187 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| *2.8.* | இவ்வியக்ககத்தின் *01.04.2022* முதல் *31.01.2023* வரையிலான செயல்பாட்டு புள்ளி விவரங்கள் | | *191* |
| | *2.8.1.* | தொழிற்சாலை சட்ட அமலாக்க பிரிவின் செயல்பாடுகள் | *191* |
| | *2.8.2.* | *01.04.2022* முதல் *31.01.2023* வரையிலான காலத்தில் மருத்துவப் பிரிவின் செயல்பாடுகள் | *198* |
| | *2.8.3.* | 01.04.2022 முதல் *31.01.*2023 வரையிலான காலத்தில், கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்க பிரிவின் செயல்பாடுகள் | *200* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| *2.9.* | பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தினை மேம்படுத்த இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கைகள் | | *204* |
| | *2.9.1.* | கழிவு நீர்த் தொட்டி சுத்திகரிப்பின் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் / செயல்முறைகள் குறித்த குறும்படம் தயாரித்தல் | *204* |
| | *2.9.2.* | ஜவுளி ஆலைகளில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பின் சிறப்பு | *205* |
| | *2.9.3.* | ஓசூரில் "விபத்து தடுப்பு நோக்கிய பணி" என்ற தலைப்பிலான கருத்தரங்கம் | *205* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 2.9.4. | தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில், தொழிற் கூட்டமைப்புகள் / அரசு பொதுத்துறை நிர்வாகத்தினருக்காக 12.09.2022 அன்று நடைபெற்ற பணியிட பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம் | 206 |
| | 2.9.5. | எண்ணெய் மற்றும் எரிவாயு தொழிற்சாலைகளில் சட்ட செயலாக்கம் மற்றும் பாதுகாப்பு கருத்தரங்கம் | 207 |
| | 2.9.6. | தொழிற்சாலையில் உள்ள உணவகங்களில் கடைபிடிக்கப்பட வேண்டிய சட்ட வழிமுறைகள், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி | 208 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | *2.9.7.* | தொழிற்சாலை மருத்துவ அலுவலர்களுக்கான "தொழில்வழி உடல் நலம்" என்ற கருத்தரங்கம் | *209* |
| | *2.9.8.* | தொழிற்சாலைகளில் பணிபுரியும் பாதுகாப்பு அலுவலர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு | *210* |
| | *2.9.9.* | அபாயகரமான பணிகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான சிறப்பு மருத்துவ பரிசோதனை | *210* |
| *2.10.* | இவ்வியக்ககத்தின் எதிர்கால தொலைநோக்கு பார்வை | | *211* |
| **3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை** | | | |
| **வேலைவாய்ப்புப் பிரிவு** | | | |
| *3.1.* | துறையின் செயல்பாடுகள் | | *219* |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| *3.2.* | வேலைவாய்ப்பு இணையதளம் | *221* |
| *3.3.* | தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் | *222* |
| *3.4.* | தன்னார்வ பயிலும் வட்டங்கள் | *223* |
| *3.5.* | கல்லூரிகளில் இலவச பயிற்சி வகுப்புகள் | *226* |
| *3.6.* | மெய்நிகர்கற்றல் இணையதளம் | *226* |
| *3.7.* | மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் | *228* |
| *3.8.* | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் | *230* |
| *3.9.* | பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் | *231* |
| *3.10.* | வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகைத் திட்டம் | *232* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| *3.11.* | அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டம் | | *233* |
| *3.12.* | மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் | | *234* |
| *3.13.* | தனியார்துறை பணியமர்த்தல் | | *236* |
| *3.14.* | தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம் | | *238* |
| *3.15.* | கல்வித் தொலைக்காட்சி வாயிலாக போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் | | *239* |
| **பயிற்சிப் பிரிவு** | | | |
| *3.16.* | நிர்வாக அமைப்பு | | *243* |
| *3.17.* | கைவினைஞர் பயிற்சித் திட்டம் ***(CTS)*** | | *244* |
| | *3.17.1.* | அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் | *245* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | *3.17.2.* | பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி | *248* |
| | *3.17.3.* | மாற்றுத்திறனாளி மாணவர்களை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி | *251* |
| | *3.17.4.* | மாணவிகளை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி | *252* |
| | *3.17.5.* | சிறை வாசிகளுக்கு திறன் பயிற்சி | *253* |
| *3.18.* | மாணவர்களுக்கான நலத்திட்டங்கள் | | *253* |
| *3.19.* | அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்கள் | | *254* |
| *3.20.* | தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் | | *255* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| *3.21.* | தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மானியம் | | *256* |
| *3.22.* | தேசிய அளவிலான தொழிற் தேர்வு மற்றும் சான்றிதழ் | | *257* |
| *3.23.* | வளாகப் பணியமர்வு நிலவரம் | | *259* |
| *3.24.* | பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு ***(PPP)*** முறை மூலம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல் | | *260* |
| *3.25.* | தொழில் மதிப்பை மேம்படுத்துவதற்கான திறன்களை வலுப்படுத்துதல் (*STRIVE)* | | *262* |
| *3.26.* | மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக மேம்படுத்துதல் | | *270* |
| *3.27.* | தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம் ***(ATS)*** | | *271* |
| | *3.27.1.* | தொழிற் பழகுநர் பயிற்சி | *271* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 3.27.2. | தேசிய தொழிற் பழகுநர் பயிற்சி ஊக்குவிப்பு திட்டம் (**NAPS)** | 273 |
| | 3.27.3. | முறையான பயிற்சி பெறாதவர்களை நிறுவனங்களில் தொழிற்பழகுநர்களாக நியமித்தல் | 274 |
| | 3.27.4. | மாநில தொழிற்பழகுநர் பயிற்சி கண்காணிப்பு பிரிவு **(SAMC)** | 276 |
| 3.28. | சுயநிதி தனியார் தொழிற்பள்ளிகள் | | 277 |
| 3.29. | டாக்டர். இராதாகிருஷ்ணன் சிறந்த பயிற்றுநர் விருது | | 278 |
| 3.30. | மாநில திறன் பயிற்சி நிலையம் | | 279 |
| 3.31. | பயிற்றுநர்களுக்கு பயிற்சி | | 281 |
| 3.32. | குறுகிய கால பயிற்சி | | 284 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 3.33. | தொழிற்சாலைகளில் நேரடிப் பயிற்சி | 285 |
| 3.34. | இரட்டைப் பயிற்சி முறை | 286 |
| 3.35. | தமிழ் வழியில் பாடப் புத்தகங்கள் | 287 |
| 3.36. | தொழிற்பிரிவுகளை தேவைக்கேற்ப மாற்றியமைத்தல் | 288 |
| 3.37. | தகவல் தொழில்நுட்ப கண்காணிப்பு பிரிவு | 289 |
| 3.38. | அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை பிரபலப்படுத்துதல் | 290 |
| 3.39. | விளையாட்டு நிகழ்ச்சிகள் | 291 |
| 3.40. | தொழிற்பயிற்சி நிலையங்கள் இல்லாத இடங்களில் புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்குதல் | 292 |
| 3.41. | அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு நவீன இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் | 293 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| *3.42.* | அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில் *4.0* தொழில்நுட்ப மையங்களாக மாற்றுதல் | *294* |
| *3.43.* | தொழிற்சாலை மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இடையிலான நட்புறவு | *299* |
| **4. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)** | | |
| *4.1.* | தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள் | *305* |
| *4.2.* | திட்டத்தின் நிதி ஆதாரம் | *306* |
| *4.3.* | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் | *307* |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 4.4. | தமிழ்நாடு தொ.அ.ஈ. திட்ட நிர்வாக அமைப்பு | 308 |
| 4.5. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் ***(AYUSH)*** பிரிவுகள் | 309 |
| 4.6. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்கள் | 310 |
| 4.7. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் இதர உதவிகள் | 318 |
| 4.8. | மருத்துவமனை மேம்பாட்டுக் குழு | 320 |
| 4.9. | தொ.அ.ஈ. பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் மேற்கொண்ட மருத்துவ செலவினை மீளப்பெறுதல் | 321 |
| 4.10. | புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறப்பு | 322 |
| 4.11. | காப்பீட்டாளர்களுக்கு உயிர் காக்கும் மருந்துகள் வழங்குதல் | 323 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| *4.12.* | தொ.அ.ஈ மருத்துவமனைகளில் வசதிகள் வலுப்படுத்துதல் | *324* |
| *4.13.* | திட்ட செயலாக்கத் திட்டத்தின் (பிஜபி) கீழ் உபகரணங்கள் வாங்குதல் | *325* |
| *4.14.* | *100* படுக்கைகள் கொண்ட புதிய தொ.அ.ஈ. மருத்துவமனைகள் கட்டுதல் | *326* |
| *4.15.* | நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினம் | *326* |
| *4.16.* | தொ.அ.ஈ. கழகத்தின் கோவிட்-*19* நிவாரணத் திட்டம் | *327* |

# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

## 1. தொழிலாளர் துறை

தொழிலாளர் துறையானது தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துவதன் வாயிலாகவும், பல்வேறு சமூகப் பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்துவன் வாயிலாகவும், பரந்த மற்றும் பன்முகத்தன்மையுடைய அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா உழைக்கும் வகுப்பினரின் நலனை மேம்படுத்தும் நோக்கத்தில் பணியாற்றுகிறது.

### அரசியலமைப்பு ஏற்பாடு

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், தொழிலாளர் என்ற பொருள் பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது, எனவே ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு ஆகிய இரண்டிற்கும் சட்டமியற்ற அதிகாரம் உள்ளது.

பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள தொடர்புடைய விவரங்கள் பின்வருமாறு :

22. தொழிற்சங்கங்கள்; தொழில் மற்றும் தொழிற்தகராறுகள்

23. சமூக பாதுகாப்பு மற்றும் சமூக காப்பீடு; வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை.

24. பணி நிலைமைகள், வருங்கால வைப்புநிதி, வேலையளிப்போரின் பொறுப்புகள், பணியாளர் இழப்பீடு, செயல்பாடற்ற மற்றும் முதியோர் ஓய்வூதியம் மற்றும் மகப்பேறு நலன் உள்ளிட்ட தொழிலாளர்களின் நலன்.

33-A. தர நிர்ணயம் நீங்கலான பிற எடைகள் மற்றும் அளவைகள்.

## *1.1.* துறையின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள்

- தொழிலாளர்களை பாதுகாத்தல், நியாயமான, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடத்தை உறுதி செய்வதன் வாயிலாக உற்பத்தியை பெருக்குதல்.

- குறைந்தபட்ச ஊதிய சட்டம், 1948-இன் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள சில தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் உறுதி செய்தல்.

- ஒத்த தன்மையுடைய பணிக்கு, ஒரே மாதிரியான ஊதியம் என்பதை வேலையளிப்பவரிடம் வலியுறுத்துவதன் வாயிலாக சம வாய்ப்பினை வளர்த்தல் மற்றும் கட்டமைப்பு ரீதியிலான பாகுபாடுகளை தடுத்தல் அல்லது தடுக்கும் கொள்கைகளை உருவாக்குதல்.

- அனைத்து வடிவங்களிலும் உள்ள குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுதல் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை ஒழித்தல்.
- நுகர்வோர் பாதுகாப்பு தொடர்புடைய தொழிலாளர் சட்டங்களை அமலாக்குதல்,
- வேலையளிப்பவர், பணியாளருக்கு எதிராக சரியான காரணங்களின்றி தண்டனைக்குரிய நடவடிக்கை எடுப்பதை தடுத்திட, வேலையளிப்பவர் மற்றும் பணியாளரிடையேயான உறவினை சமரசத்தின் மூலம் சமநிலைப்படுத்துதல்.
- வேலையளிப்பவர் மற்றும் தொழிலாளர்களிடையேயான தொழிற்தகராறுகளை சமரச பேச்சுவார்த்தைகளால் முடிவிற்கு கொண்டு வருவதை ஊக்குவிப்பதன் மூலம்

மாநிலத்தில் தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்தல்.

- ❖ நீதிசார் பணிகள் மேற்கொள்ளுதல் மூலம் தொழிலாளர் நலன் பாதுகாத்தல்.
- ❖ பல்வேறு தொழிலாளர் நல வாரியங்கள் வாயிலாக, அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு பலவிதமான சமூகப் பாதுகாப்பு உதவிகள் வழங்குதல்.

## *1.2.* நிர்வாக அமைப்பு

தமிழ்நாட்டில், தொழிலாளர் துறையானது, 1920-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன் தலைமையிடம் சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள டி.எம்.எஸ் வளாகத்தில் அமைந்துள்ளது. இத்துறை ஒரு மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலரான, தொழிலாளர் ஆணையரால் தலைமை வகிக்கப்படுகிறது.

12 தொழிலாளர் கூடுதல் ஆணையர்கள், 16 தொழிலாளர் இணை ஆணையர்கள், 24 தொழிலாளர் துணை ஆணையர்கள், 103 தொழிலாளர் உதவி ஆணையர்கள், 2 உதவி மருத்துவர்கள் (தோட்டங்கள்), 1 கணக்கு அலுவலர் மற்றும் 1 மக்கள் தொடர்பு அலுவலர், 70 தொழிலாளர் துணை ஆய்வர்கள், 220 தொழிலாளர் உதவி ஆய்வர்கள், 101 முத்திரை ஆய்வர்கள் மற்றும் 1,299 பணியாளர்கள் உள்ளனர்.

## 1.3. தொழிலாளர் சட்டங்கள்

### 1.3.1. தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கம் உறுதி செய்தல்

மாநிலத்தில் பெருமளவிலான வேலைவாய்ப்புகளுக்கான பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்ய தொழில் அமைதி இன்றியமையாததாகிறது. தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்திட இத்துறையின் சமரச

அலுவலர்கள் தொழிற் தகராறுகளை தீர்த்து வைக்க தேவையான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

- ❖ **தொழிற்தகராறுகள் சட்டம், 1947-இன் கீழ் சமரச அலுவலர்கள் தொழிற்தகராறுகளை தீர்த்து வைத்தல்:**

  தொழிற்தகராறுகளை சமரசம் செய்து சுமூகத் தீர்வு காணும் பணி சமரச அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, *01.04.2022* முதல் *31.12.*2022 வரையிலான காலத்தில் 2,178 தொழிற்தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

- ❖ **வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புகளை தீர்த்து வைத்தல்:**

  வேலை நிறுத்தம் அல்லது கதவடைப்பிற்கான அறிவிப்பு கிடைக்கப் பெற்றதும், தொழிற்தகராறில் தொடர்புடைய

வேலையளிப்பவர் மற்றும் தொழிலாளர்களுக்கிடையே சமரச பேச்சு வார்த்தையினை ஏற்பாடு செய்து தொழிற் தகராறுகளை சமரச அலுவலர்கள் தீர்த்து வைக்க முயற்சிக்க வேண்டும்.

**தீர்வு காணப்பட்ட முக்கிய தொழிற்தகராறுகள்**

**(அ) இண்டோடெக் ட்ரான்ஸ்ஃபார்மர்ஸ் லிமிடெட் *(INDO TECH Transformers Ltd.)***

காஞ்சிபுரம் மாவட்டம், இலுப்பப்பட்டு கிராமம், இண்டோடெக் ட்ரான்ஸ்பார்மர்ஸ் லிமிடெட் நிறுவனம் *18* ஒப்பந்தத் தொழிலாளர்களை பணியாளர்களாக *(Staff)* பணியமர்த்தம் செய்யப்பட்டதற்கு எதிராக *02.11.2022* அன்று அந்நிறுவனத்தின் தொழிலாளர்கள் உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். திருப்பெரும்புதூர், தொழிலாளர் துணை

ஆணையரின் *(சமரசம்)-1* முன்னிலையில் *02.11.2022* அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தொழிலாளர்களின் உள்ளிருப்புப் போராட்டம் உடனடியாக விலக்கிக்கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் புதிய பணியாளர்களை பணியமர்த்துதல், ஊதிய உயர்வு, போனஸ் தொடர்பாக ஏற்புடைய அறிவுரை சமரச அலுவலரால் வழங்கப்பட்டு தொழிற்தகராறு தீர்த்து வைக்கப்பட்டது.

**(ஆ) இந்தியா யமஹா மோட்டார் பிரைவேட் லிமிடெட் *(India Yamaha Motor Private Limited)***

காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம் வடகல் கிராமத்தில் அமைந்துள்ள இந்திய யமஹா மோட்டார் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலையின் தொழிலாளர்களில் ஒரு

பிரிவினர், இந்தியா யமஹா மோட்டார் தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யு) தொழிற்சங்கத்தை நிர்வாகம், அங்கீகாரம் செய்யக் கோரி, *11.10.2022* முதல் உள்ளிருப்புப் போராட்டம் செய்தனர். இத்துறையின் சீரிய முயற்சியின் பயனாக சென்னை கூடுதல் தொழிலாளர் ஆணையரின் முன்னிலையில் கீழ்க்காணும் பொருள் குறித்த ஏற்புடைய அறிவுரை வழங்கப்பட்டது.

1. பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கத்தை அடையாளம் காணுவதற்கான நடைமுறை,

2. *2020-2021* மற்றும் *2021-2022*-ஆம் ஆண்டுகளுக்கான போனஸ் வழங்குதல்,

3. தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட 7 நாட்கள் ஊதியத்தை திரும்ப அளித்தல்.

மேற்கண்ட ஏற்பாட்டின்படி தொழிற்சங்கம் 20.10.2022 முதல் உள்ளிருப்பு வேலைநிறுத்தத்தை விலக்கிக்கொண்டது.

**(இ) தப்தி லெதர்ஸ் பிரைவேட் லிமிடெட் *(TAPTI Leathers Private Limited)***

காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரத்தில் செயல்பட்டு வரும் தப்தி லெதர்ஸ் பிரைவேட் லிமிடெட் தொழிலாளர்கள் 2021-2022-ஆம் ஆண்டிற்கு 18 சதவீத போனஸ் அளிக்கக்கோரி 27.09.2022 முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்த போராட்டம் செய்தனர். திருப்பெரும்புதூர், தொழிலாளர் துணை ஆணையர் (சமரசம்)-1 அவர்களின்

முயற்சியின் மூலம் நிர்வாகம் *2021-2022*-ஆம் ஆண்டிற்கு *16* சதவீத போனஸ் வழங்க ஒப்புக்கொண்டதில் 29.09.2022 அன்று உள்ளிருப்புப் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

- **ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் தீர்வுத் தொகை ஒப்பந்தம்**

அரசாணை (நிலை*)* எண்*. 171,* தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள்.28.12.2022-இன் மூலம் செங்கல்பட்டு மாவட்டம், சிங்கபெருமாள் கோவிலில் செயல்பட்டு வரும் போர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு 31.01.2023 அன்று முதல் ஆலை மூடுதலுக்கு அனுமதி வழங்கி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. போர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும்,

அதன் தொழிலாளர்களுக்கும் இடையே தீர்வுத் தொகை ஒப்பந்தம் *(severance settlement)* ஏற்படுத்தப்பட்டு அதன் வாயிலாக 2,592 தொழிலாளர்கள் ரூ.1,296 கோடி அளவில் பயன்பெற்றுள்ளனர்.

❖ **தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு**

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் அதைச் சார்ந்த இதர கோரிக்கைகள் குறித்து, 14-வது ஊதிய ஒப்பந்தத்திற்கான சமரச பேச்சுவார்த்தை, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகங்களுடன் நடைபெற்றது. தொழிற்தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 12(3)-இன் கீழ் 24.08.2022 அன்று சென்னை, தொழிலாளர் தனி இணை

ஆணையர் முன்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இந்த சமரச ஒப்பந்தத்தின் மூலம் *1.25* இலட்சம் போக்குவரத்து தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இவ்வொப்பந்தம் 4 ஆண்டு காலம் அமலில் இருக்கும்.

- **பீடி சுற்றும் தொழிலாளர்களின் புதிய ஊதிய ஒப்பந்தம்**

தமிழ்நாடு பீடித் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு தொடர்பாக *10.05.2022* முதல் *09.05.2025* வரை மூன்றாண்டு காலத்திற்கு தொழிற் தகராறுகள் சட்டம், *1947*, பிரிவு *12(3)*-இன் கீழ் புதிய ஊதிய ஒப்பந்தம் சென்னை, தொழிலாளர் தனி இணை ஆணையர் முன்பு *10.05.2022* அன்று ஏற்படுத்தப்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி பீடி சுற்றும் தொழிலாளர்கள் *1,000* பீடிகள் சுற்றுவதற்கு, சாதா பீடி-ரூ.*247.81/-* மற்றும்

ஜாதி பீடி-ரூ.248.01/- மறு நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியமாக, அகவிலைப்படியையும் சேர்த்து பெறுவார்கள். இந்த ஒப்பந்தம் காரணமாக தமிழ்நாட்டில் சுமார் 1,78,000 பீடி சுற்றும் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

- **தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு புதிய ஊதிய ஒப்பந்தம்**

சென்னை, தொழிலாளர் தனி இணை ஆணையர் முன்னிலையில் தோல் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 09.06.2022 அன்று மூன்று ஆண்டுகளுக்கான புதிய ஊதிய ஒப்பந்தம் தொழிற்தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 12(3)-இன் கீழ் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வொப்பந்தத்தின்படி 01.01.2022 முதல் உருப்படி வீதத்தில்

*(Piece rate)* தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அடிப்படை சம்பளத்துடன் நாளொன்றுக்கு ரூ.40/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது, இதனால் 5,000 தோல் பதனிடும் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

- **தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயங்கள்**

2022-ஆம் ஆண்டில் தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயங்கள் பெரும்பாலான வழக்குகளை முடித்து வைத்துள்ளன.

- **நிலையாணைகளுக்கு சான்று வழங்குதல்**

தொழிலக வேலை வாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946 சான்றளிக்கப்பட்ட நிலையாணையின் கீழ் தொழிலாளர்களின் வேலை நிபந்தனைகளை

தொழில் நிறுவனங்களின் வேலையளிப்போர் வரையறுக்க இச்சட்டம் வழிவகுக்கிறது. *01.04.2022* முதல் *31.12.2022* வரையிலான காலத்தில் *268* தொழில் நிறுவனங்களின் நிலையாணைகள் சம்பந்தப்பட்ட கூடுதல் தொழிலாளர் ஆணையர்களால் சான்றளிக்கப்பட்டுள்ளது. தொழிலக வேலை வாய்ப்பு (நிலையாணைகள்) தமிழ்நாடு திருத்த சட்டம், *2008* (தமிழ்நாடு சட்டம் எண்.*11/2016)*-ஐ அமல்படுத்துதல் தொடர்பாக பல்வேறு தொழில்களில் உள்ள தற்போதைய சூழ்நிலைகளை ஆராய்ந்து, பரிந்துரைகள் வழங்குவதற்காக தொழிலாளர் ஆணையர் தலைமையில் அரசால் அமைக்கப்பட்ட குழு அரசாணை (டி) எண்.*543*, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள்.*09.11.2022* மூலம் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

❖ **தொழிற்சங்கங்களை பதிவு செய்தல்**

தொழிற்சங்கங்கள் சட்டம், *1926*, கூட்டு பேரம் பேசுவதற்கு தொழிலாளர்களின் சட்டப்பூர்வமான அமைப்பை வழங்குவதற்கான நோக்கத்துடன் தொழிற்சங்க உறுப்பினர்களின் பதிவு, ஒழுங்குமுறை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை வழங்குகிறது. தொழில் அமைதியினை பாதுகாப்பதற்கு, வேலையளிப்பவர் மற்றும் தொழிலாளர்களுக்கிடையிலான தொழிற் தகராறுகளை கூட்டு பேரத்தின் வாயிலாக தீர்த்து வைப்பதில் தொழிற்சங்கங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இச்சட்டத்தின் கீழ் *01.04.2022* முதல் *31.12.2022* வரையிலான காலத்தில் *167* தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### *1.3.2.* குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் / மறுநிர்ணயம் செய்தல் மற்றும் உரிய நேரத்தில் ஊதியம் வழங்குவதை உறுதி செய்தல்

குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948, சம்பள பட்டுவாடா சட்டம், *1936*, சம ஊதியச் சட்டம், *1976* மற்றும் போனஸ் வழங்கல் சட்டம், 1965 ஆகிய தொழிலாளர் சட்டங்கள், குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் மறுநிர்ணயம் செய்திடவும், ஊதியமானது உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்திடவும், போனஸ் வழங்கிடவும் மற்றும் ஒத்த தன்மையுடைய வேலையில் ஈடுபட்டுள்ள ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு ஒரே மாதிரியான ஊதியம் வழங்கிடவும் வழிவகை செய்கின்றன.

- ❖ தமிழ்நாட்டில் 1948-ஆம் வருட குறைந்தபட்ச ஊதிய சட்ட அட்டவணையில் 94 தொழில் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றில், 83 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்

நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஊதியம் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறு நிர்ணயம் செய்யப்படுகிறது. 01.04.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் *31* தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் மறுநிர்ணயம் செய்து முதனிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது மற்றும் *36* தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் தொழில், விசைத்தறி தொழில், சினிமா தொழில் போன்ற அட்டவணைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் குறைந்தபட்ச ஊதியம் உயர்த்தப்பட்டதால் பயனடைந்துள்ளனர்.

❖ குறைந்தபட்ச ஊதியம் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக இத்துறை அமலாக்க அலுவலர்களால் சிறப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. *01.04.2022* முதல் *31.12.2022* வரையிலான காலத்தில் குறைந்தபட்ச ஊதியச் சட்டம், *1948*-இன் கீழ் அமலாக்க அலுவலர்களால் *24,994* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்வேறு முரண்பாடுகளுக்காக வேலையளிப்பவருக்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தால் ரூ.89,300/- அபராதம் விதிக்கப்பட்டு *58* வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. மேற்படி காலத்தில், குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் கீழ், அதிகாரிகளால் *760* கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய கேட்புத் தொகை ரூ.7,45,15,061/- வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ தொழிலாளர்களுக்கு, உடனடி மற்றும் உரிய நேரத்தில் ஊதியம் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக இத்துறையின் அமலாக்க அலுவலர்களால் *01.04.2022* முதல் *31.12.2022* வரையிலான காலத்தில் 10,809 ஆய்வுகள் சம்பள பட்டுவாடா சட்டம், 1936-இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீதிமன்றங்களால் *21* வழக்குகள் முடிக்கப்பட்டு பல்வேறு முரண்பாடுகளுக்காக வேலையளிப்பவர்களுக்கு ரூ.*98,000/-* அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் அதிகாரிகளால் *164* கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, ரூ.*2,52,68,461/-* தொழிலாளர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ அமலாக்க அலுவலர்கள் ஆய்வின் போது ஒத்த தன்மையுடைய வேலைக்கு ஆண் மற்றும்

பெண் தொழிலாளர்களுக்கு ஒரே மாதிரியான ஊதியம் வழங்கப்படுவதை உறுதி செய்கின்றனர்.

### 1.3.3. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947-இன் கீழான தொழிலாளர் சட்டத் திருத்தங்கள்

- **வேலை நேரத்தின் போது அமர்வதற்கான வாய்ப்பு**

ஒவ்வொரு நிறுவன வளாகங்களிலும் அனைத்து பணியாளர்களுக்கு இருக்கை வசதி வழங்குவதற்காக, தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) சட்டம், 2021–இன் கீழ், *22-A* என்ற புதிய பிரிவினை சேர்த்திட, தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் அறிவிக்கை எண்.465, வெளியிட்டுள்ளது. இதன்படி நின்றுகொண்டே பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் பணியிடையே

அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பினை பயன்படுத்தி அமரலாம். மேலும், அதன் மூலம் வேலை நேரம் முழுவதும் நின்று கொண்டிருக்கும் சூழலை தவிர்க்கலாம். கடைகள் மற்றும் நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு இருக்கை வசதிகளை உறுதி செய்யும் பொருட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 1,407 முரண்பாடுகள் கண்டறியப்பட்டன.

இதன் மூலம் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அமரும் உரிமையை கட்டாயமாக்கிய இந்திய மாநிலங்களுக்குள் தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாக திகழ்கிறது.

❖ **கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களை *24 x 7* மணி நேரமும் திறப்பது**

தமிழ்நாடு அரசு, மாநிலத்தில் உள்ள 10 மற்றும் அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிகின்ற கடைகள் மற்றும் நிறுவனங்கள், வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் *(24 x 7)* இயங்கும் வகையில் அரசாணை (நிலை) எண்.*61,* தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள்.*02.06.2022* மூலம் மேலும் மூன்றாண்டுகளுக்கு அனுமதியளித்துள்ளது.

*0*1.04.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் அமலாக்க அலுவலர்களால் இச்சட்டத்தின் கீழ் *99*,531 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, *4*,689 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இசைவுத் தீர்வு முறையில் இணைக்கக்

கட்டணமாக ரூ.10,43,700/- வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் 8 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு ரூ.52,200/- வேலையளிப்பவர்களுக்கு அபராதமாக விதிக்கப்பட்டது.

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டப்பிரிவு *41(2)*-இன் கீழ் பணியாளர்களை பணிநீக்கம் செய்வது தொடர்பான வழக்குகளை விசாரிக்க மண்டல தொழிலாளர் இணை ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 01.04.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 164 மேல்முறையீட்டு மனுக்கள் முடிக்கப்பட்டுள்ளன.

### *1.3.4.* உணவு நிறுவனங்களில் பணிநிலைமைகளை முறைப்படுத்துதல்

தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், *1958* உணவு நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகள் உட்பட பல்வேறு உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட வழிவகை செய்கிறது. *01.04.2022* முதல் 31.12.2022 வரையிலான காலத்தில், உணவு நிறுவன வேலையளிப்பவர்களிடமிருந்து, பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தக் கட்டணமாக ரூ.*1,02,34,390/-* வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், *5,777* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, *3,230* முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இசைவு தீர்வு முறையில் இணக்கக் கட்டணமாக ரூ.*6,13,750/-* வசூலிக்கப்பட்டுள்ளது.

### *1.3.5.* மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், *1961*-இன் அமலாக்கம்

மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் உள்ள மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தி அவர்களது நலனை உறுதி செய்திட மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், *1961* இயற்றப்பட்டுள்ளது. *01.04.2022* முதல் *31.12.2022* வரையிலான காலத்தில் *81* மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டு பதிவு மற்றும் புதிப்பித்தல் கட்டணமாக ரூ.*31,10,950/-* வசூல் செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட காலத்தில் *1,261* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு *393* முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இசைவுத் தீர்வு முறையில் இணைக்கக் கட்டணமாக ரூ.*1,10,300/-* வசூலிக்கப்பட்டுள்ளது.

### *1.3.6.* பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன்

பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நலன்களை வழங்கவும் அவர்களது பணி நிலைமையினை முறைபடுத்திட பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், *1966* வழிவகை செய்கிறது. 01.04.2022 முதல் *31.12.2022* வரையிலான காலத்தில் *1,059* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களால் *63* வழக்குகள் முடித்து வைக்கப்பட்டு ரூ.*21,000/-* அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தினை செயல்படுத்தும் தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள், பீடித் தொழிலாளர்களுக்கான பணி மற்றும் விடுப்பு அட்டைகளை பீடித் தொழில்

நிறுவனங்களிலிருந்து பெற்று வழங்குவதை உறுதி செய்கின்றனர்.

### *1.3.7.* பத்திரிக்கை நிறுவனங்களில் பணிநிலைமைகளை முறைப்படுத்துதல்

மாநிலத்தில் உள்ள 72 பத்திரிக்கை நிறுவனங்களில், 68 நிறுவனங்கள் 'மஜிதியா ஊதியக்குழுவின்' பரிந்துரைகளை முழுமையாக அமல்படுத்தியுள்ளன. மேலும், மீதமுள்ள நான்கு நிறுவனங்களில் மஜிதியா ஊதியக்குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதை உறுதி செய்திட இச்சட்டத்தின் கீழ் அமலாக்க அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், *1955*, பிரிவு 17(2)-இன் கீழ் மூன்று வழக்குகள் தொழிலாளர் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

**1.3.8. தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்களில் ஊதியத்துடன் விடுமுறை / இரட்டிப்பு ஊதியம் உறுதி செய்தல்**

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்) சட்டம், 1958-இன்படி தமிழ்நாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக அமலாக்க அலுவலர்களால் சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

01.04.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 27,105 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 3,549 முரண்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன, இணக்க கட்டணமாக ரூ.21,90,300/- வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், 19 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு வேலையளிப்பவருக்கு

பல்வேறு முரண்பாடுகளுக்காக அபராதம் ரூ.21,700/- விதிக்கப்பட்டது.

### 1.3.9. மகப்பேறு உதவிகள் உறுதி செய்தல்

மகப்பேறு நலச் சட்டம், 1961 பெண் தொழிலாளர்களின் மகப்பேறுக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலத்தில் பணி, ஊதியம் மற்றும் சில மகப்பேறு உதவிகள் வழங்கப்படுவதை முறைப்படுத்தி உறுதி செய்கிறது. இச்சட்டம் மகப்பேறு காலங்களில் குழந்தைப்பிறப்பு எதிர்பார்க்கப்படும் பிரசவ தினத்திற்கு முன் 8 வாரங்களுக்கு மிகாமல் மொத்தம் 26 வாரங்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கிட வழிவகுக்கிறது. இச்சட்டத்தின் படி ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் பெண்கள் கடந்த 12 மாதங்களில் குறைந்தது 80 நாட்களாவது பணிபுரிந்து இருக்க வேண்டும். 01.04.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில், இச்சட்டத்தின்

கீழ், *6,416* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் *9* வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு வேலையளிப்பவருக்கு பல்வேறு முரண்பாடுகளுக்காக ரூ.*7,500/-* அபராதம் விதிக்கப்பட்டது.

### *1.3.10.* பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல்

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல்) சட்டம், *1981*-இன்படி ஒரு தொழில் நிறுவனத்தில் *24* மாத காலத்தில், *480* நாட்கள் தொடர்பணிபுரிந்த தொழிலாளிக்கு நிரந்தரத் தகுதி வழங்க வகை செய்கிறது. தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம்) மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர்கள் (தோட்ட நிறுவனங்கள்) இச்சட்டத்தின் கீழ் அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின் கீழ் *228* பணிநிரந்தரம் கோரும் கேட்பு மனுக்கள்

முடிக்கப்பட்டு 01.04.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் *237* தொழிலாளர்களின் பணியினை நிரந்தரப்படுத்த வேலையளிப்போருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## *1.3.11.* ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம், *1970*-இன் கீழ் பதிவு மற்றும் உரிமங்கள்

- ஒப்பந்தத் தொழிலாளர் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒப்பந்தத்தின் மூலம் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் முறையாகும். *1970*-ஆம் வருட ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், *20* அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பொருந்தும் மற்றும் சில நிறுவனங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணியினை இச்சட்டம் முறைப்படுத்துகிறது.

❖ *187* பதிவுச்சான்றிதழ்கள் மற்றும் *207* உரிமங்கள், முறையே முதன்மை வேலையளிப்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு *01.04.2022* முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. பதிவு, புதுப்பித்தல் மற்றும் உரிமக் கட்டணமாக ரூ.95,10,000/- வசூல் செய்யப்பட்டுள்ளது.

### *1.3.12.* புலம் பெயரும் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாத்தல்

❖ சொந்த மாநிலங்களுக்கு வெளியே சேவையில் பயன்படுத்தப்படும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பணிநிலைமைகளை பாதுகாக்கவும், முறைப்படுத்தவும் மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி

நிபந்தனைகள்) சட்டம், *1979* வழிவகை செய்கிறது.

- இச்சட்டம் ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பணிபுரியும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பொருந்தும். மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்தே பணியில் இருப்பதாகக் கருதப்படுகிறது.

- *01.04.2022* முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் *6* பதிவுச் சான்றிதழ்களும் மற்றும் *5* உரிமங்களும் முறையே முதன்மை வேலையளிப்பவர்களுக்கும் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கும் இச்சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ளது.

- *28.02.2023* அன்றுள்ளவாறு, தொழிலாளர் துறையின் வெளிமாநிலத்

தொழிலாளர்களுக்கான வலைதளத்தில் *(https://labour.tn.gov.in/ism/)* *75,321* தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

### ***1.3.13***. நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை அமல்படுத்துதல்

### ***1.3.13.1.*** சட்டமுறை எடையளவுச் சட்டம், ***2009***

- இச்சட்டம் தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகளை அமல்படுத்துவதுடன் நுகர்வோர் நலனை பாதுகாக்கிறது. மேலும், எடை, அளவை அல்லது எண்ணிக்கையின் அடிப்படையில் விற்கப்படும் அல்லது விநியோகிக்கப்படும் பொருட்கள், எடைகள் மற்றும் அளவைகளை கொண்டு செயல்படும் வணிகம் மற்றும் வியாபாரத்தை முறைப்படுத்துகிறது.

- *01.04.2022* முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் *41,071* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, *6,604* முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இசைவு தீர்வு முறையில் இணக்கக் கட்டணம் மற்றும் நீதிமன்ற வழக்குகளில் அபராதமாக முறையே ரூ.*75.57* இலட்சம் மற்றும் ரூ.*5,000/-* விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது.

- 01.04.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் *713* எடையளவு தயாரிப்பாளர் / விற்பனையாளர் / பழுதுபார்ப்பவர் உரிமங்கள் வழங்கப்பட்டு / புதுப்பிக்கப்பட்டு, உரிமக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணமாக ரூ.*38.47* இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**இணையவழி முத்திரையிடுதல்**

பொதுமக்கள் மற்றும் நுகர்வோர் நலனை பாதுகாக்கும் பொருட்டு மற்றும் வணிகர்கள், எடையளவுகளை பரிசீலனை செய்து சான்று பெறும் நடைமுறையை எளிதாக்கும் வகையில் இணைய வழியில் முத்திரையிடும் பணி *23.02.*2022 அன்று முதல் அறிமுகப்படுத்தப்பட்டு சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 01.04.2022 முதல் 31.12.2022 முடிய உள்ள காலத்தில் *2,90,496* இணையவழி விண்ணப்பங்கள் பெறப்பட்டு, முத்திரைக் கட்டணமாக ரூ.52.66 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

### *1.3.13.2.* சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்*)* விதிகள், *2011*

- ❖ இவ்விதிகளின்படி பொட்டலப் பொருட்கள் தயாரிப்பாளர், பொட்டலமிடுபவர் மற்றும் இறக்குமதி செய்வோர் அனைவரும்

பொட்டலமிடும் பொருட்களின் மீது உற்பத்தியாளரின் பெயர் மற்றும் முகவரி, பொருட்களின் பொது அல்லது மரபு பெயர், நிகரஎடை, பொட்டலமிடப்பட்ட மாதம் மற்றும் வருடம், சில்லறை விற்பனை விலை உள்ளிட்ட விவரங்களை பொட்டலப் பொருட்களின் மீது அறிவிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு, அவர்கள் இவ்விதிகளின் கீழ் பொட்டலமிடுவதற்காக பதிவுச் சான்று பெற வேண்டும். அதிகபட்ச சில்லரை விற்பனை விலைக்கு அதிகமாக செலுத்துவதிலிருந்து நுகர்வேரை பாதுகாப்பது இதன் நோக்கமாகும். மேலும், பொட்டலப் பொருட்கள் குறித்த இதர தகவல்களை நுகர்வோர் அறியவும் இது வழிவகுக்கிறது.

- 01.04.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள் 2011-இன் கீழ் நீதிமன்ற வழக்குகள் மற்றும் இசைவுத் தீர்வு வழியாக 13,090 நிறுவனங்களில் ஆய்வு செய்யப்பட்டு 1,691 விதிமீறல்கள் கண்டறியப்பட்டு, தீர்வு செய்தவகையில் அபராதமாக ரூ.34,000/- மற்றும் இணக்கக் கட்டணமாக ரூ.75.83 இலட்சம் விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டுள்ளது. 1,099 பொட்டலமிடுபவர் / இறக்குமதியாளர் பதிவுச் சான்றுகள் வழங்கப்பட்டு, பதிவுக் கட்டணமாக ரூ.6.57 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

### *1.3.14.* தோட்ட நிறுவனங்களில் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்துதல்

- தமிழ்நாட்டில் 2,226 தோட்ட நிறுவனங்கள் 62,289 ஹெக்டேர் பரப்பளவில் உள்ளன,

இதில் 683 பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்கள் 54,654 ஹெக்டேர் பரப்பளவிலும், 1,543 பதிவு பெறாத தோட்ட நிறுவனங்கள் 7,635 ஹெக்டேர் பரப்பளவிலும் உள்ளன. தோட்ட நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 57,051 ஆகும். இவர்களில் 22,440 ஆண்களும் மற்றும் 34,611 பெண்களும் உள்ளனர்.

❖ தோட்டத் தொழிலாளர்களுக்கான நல வசதிகளை உறுதி செய்வதற்காக, 01.04.2022 முதல் 31.01.2023 வரையிலான காலங்களில் 2,155 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

*1951*-ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள நல வசதிகள் பின்வருமாறு:

**நல வசதிகள்**

*i.* **வீட்டு வசதி**

*1951*-ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ், தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காகவும் பயன்பாட்டிற்காகவும் தண்ணீர் வசதி, சிமெண்ட் தரை மற்றும் இணைந்த கழிவறை வசதிகளுடன் கூடிய வீடுகள் தோட்ட நிறுவன உரிமையாளர்களால் இலவசமாக தோட்டத் தொழிலாளர்களுக்கு கட்டித் தர வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தோட்டத் தொழிலாளர்களுக்கு இதுவரை மொத்தம் *41,*235 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. *01.04.2022* முதல் 31.01.2023 வரையிலான காலகட்டத்தில், *28* முரண்பாடுகள்

கண்டறியப்பட்டுள்ளன மற்றும் 10 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.33,500/- அபராதமாக வசூலிக்கப்பட்டது.

*ii.* **குழந்தைகள் காப்பகம்**

50 மற்றும் அதற்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணிபுரியும் தோட்ட நிறுவனங்களில் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் நலன் மற்றும் பயன்பாட்டிற்காகவும் குழந்தைகள் காப்பகம் அமைக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் மொத்தம் 227 குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன.

*iii.* **கல்வி வசதி**

ஒவ்வொரு தோட்ட நிறுவனத்திலும் 6 முதல் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 25 மற்றும் அதற்கு மேலும் இருந்தால்

அவர்களுக்கு தோட்ட நிர்வாகம் கல்வி வசதி ஏற்பாடு செய்து தருவது வேலையளிப்போரின் பொறுப்பு ஆகும். தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் மொத்தம் 162 பள்ளிக் கூடங்கள் உள்ளன.

***iv.*** **உணவகம்**

தோட்ட நிறுவனங்களில் 150 மற்றும் அதற்குமேல் தோட்டத் தொழிலாளர்கள் பணிபுரிந்தால் உணவகம் அமைக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் மொத்தம் 81 உணவகங்கள் உள்ளன.

***v.*** **குடிநீர் வழங்கல்**

தோட்டத் தொழிலாளர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது தோட்ட நிர்வாகத்தினரின் தலையாய கடமையாகும்.

இப்பாதுகாக்கப்பட்ட குடிநீர் சான்றிதழ் சுகாதார அலுவலர் அல்லது சான்றளிக்கப்பட்ட மருத்துவரிடம் அல்லது தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் பரிசோதனை ஆய்வகங்களிலிருந்தோ பெறப்பட்டிருக்க வேண்டும். மேற்படி காலகட்டத்தில் 38 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 20 வழக்குகள் முடிக்கப்பட்டு அபராதத் தொகையாக ரூ.1,11,500/- வசூலிக்கப்பட்டது.

**vi. குளிர்கால பாதுகாப்பு (வெப்ப ஆடை)**

தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குளிர் பாதுகாப்பிற்காக ஆண்டுக்கு ஒருமுறை ஒரு காட்டு கம்பளியும், இரண்டு ஆண்டிற்கு ஒருமுறை போர்த்தும் கம்பளியும் நிறுவனத்தால் வழங்கப்பட வேண்டும். மேற்படி காலகட்டத்தில்

*8* முரண்பாடுகள் கண்டறியப்பட்டது மற்றும் 6 வழக்குகள் முடிக்கப்பட்டு, அபராதத் தொகையாக ரூ.38,*500/-* வசூலிக்கப்பட்டது.

- **சுகாதார வசதிகள்**

***i.*** **மருத்துவ வசதி**

தோட்ட நிறுவனங்களின் நிர்வாகத்தினரால் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மருத்துவ வசதிகள் வழங்கப்பட வேண்டும். தோட்ட நிறுவனங்களில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் திறம்பட செயல்படுவதை உறுதிப்படுத்துவது உதவி மருத்துவரின் (தோட்டங்கள்) பணியாகும். தமிழ்நாட்டில் 143 தனி மருந்தகங்கள் மற்றும் தொகுதி மருந்தகங்களும், *31* தோட்ட மருத்துவமனைகள் மற்றும் 4 தொகுதி தோட்ட மருத்துவமனைகளும் உள்ளன.

**அமலாக்கம்**

01.04.2022 முதல் 31.01.2023 வரையிலான காலகட்டத்தில், *1951*-ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் மொத்தம் *2*,155 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 122 முரண்பாடுகள் கண்டறிப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு நீதிமன்றங்களில் 74 வழக்குகள் முடிக்கப்பட்டு முரண்பாடு கண்டறியப்பட்ட தோட்ட நிறுவன உரிமையாளர்களுக்கு எதிராக ரூ.4,*56,500/-* அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

### *1.3.15.* குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் முறைப்படுத்துதல்

குழந்தைத் தொழிலாளர் என்பது நமது சமூகத்தின் சிக்கலான சமூகப் பொருளாதார கட்டமைப்பில் வேர்களைக் கொண்ட ஒரு சமூக

தீமையாகும். தமிழ்நாடு அரசு, குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல், வளரிளம் பருவ தொழிலாளர்களை அபாயகரமற்ற தொழில்களில் பணி முறைப்படுத்துதல் ஆகியவற்றை முக்கிய இலக்காக கொண்டு தமிழ்நாடு அரசு இந்த அச்சுறுத்தலை அகற்றுவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதலில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கிறது.

- 1986-ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986-ஆம் ஆண்டு குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டமாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

- 14 வயதிற்குட்டபட்ட குழந்தைகளை எந்தவித தொழிலிலும் / செயல் முறையிலும் பணியமர்த்த அனுமதிக்க கூடாது.

- வளரிளம் பருவத்தினரை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அபாயகரமான தொழில்களில், பணியமர்த்தவோ அல்லது வேலை செய்ய அனுமதிக்கவோ கூடாது.

- இச்சட்ட விதிகளை மீறுவோருக்கு 6 மாதங்களுக்கு குறையாமல் மற்றும் இரண்டு ஆண்டு வரை சிறை தண்டனை அல்லது ரூ.*20,000/-* முதல் ரூ.*50,000/-* வரை அபராதம் அல்லது இவை இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

- குழந்தைகளை பணிக்கு அமர்த்திய குற்றத்திற்காக, குற்றவாளியாக கருதப்பட்ட பெற்றோர் / பாதுகாவலர் மீண்டும் அதேகுற்றம்

செய்யும் நேர்வில் அவர்களுக்கு ரூ.10,000/- வரை அபராதம் விதிக்கப்படும்.

**தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் நிலை**

*2001*-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் *4.19* இலட்சமாக இருந்த குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2011-ஆம் ஆண்டு *1.51* இலட்சம் ஆகும். தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்ட கடுமையான சட்ட அமலாக்கம், மறுவாழ்வு மற்றும் மேம்பாட்டு முயற்சிகள் காரணமாக குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மேற்படி காலத்தில் கணிசமாக குறைந்துள்ளது. ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின் மூலம் எடுக்கப்பட்ட 2021-ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் கட்டாயத்தின் பேரில் வருவாய் ஈட்டுதலுக்கு பள்ளி செல்லா குழந்தைகளின் எண்ணிக்கை *1,091* மட்டுமே ஆகும். குழந்தைத் தொழிலாளர்களை மீட்பதற்கும் மறுவாழ்வு அளிப்பதற்கும் ஒரு விரிவான மாநில

செயல் திட்டத்தை *(SAP)* உருவாக்கியதில் மாநிலங்களுக்குள் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது. இதனைத் தவிர குழந்தைத் தொழிலாளர்களை மீட்பதற்கும் மறுவாழ்வு அளிப்பதற்கும் பல்வேறு துறைகளின் பங்களிப்பு குறித்தும் நிலையான இயக்க நடைமுறைகளும் *(SOP)* வெளியிடப்பட்டுள்ளது.

**சட்ட அமலாக்கம்**

- குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் மற்றும் வளரிளம் பருவ தொழிலாளரை பல்வேறு தொழில்கள் / செயல்களில் பணி முறைப்படுத்துதலில் சட்டஅமலாக்கம் என்பது ஒரு முக்கியமான பங்கு வகுக்கிறது. சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்தும் பொருட்டு, மாவட்ட அளவிலான தடுப்புக் குழு அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மாவட்ட தடுப்பு குழுக்கள் அரசாணை *(2டி)* எண்*.2*, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்*. 11.01.2021*-இன் மூலம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

- ❖ குழந்தைகளை பணியமர்த்துவதைத் தடை செய்திட, *1986*-ஆம் ஆண்டு குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர்கள் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் தொடர்புடைய சட்டங்கள், மாநில அளவில் தொழிலாளர் துறை அமலாக்க அலுவலர்கள் மற்றும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

- ❖ *01.04.2022* முதல் *31.01.2023* வரையிலான காலத்தில், மாவட்ட அளவிலான தடுப்புப் படையால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பாய்வுகளையும் சேர்த்து *47,200* ஆய்வுகள்

மேற்கொள்ளப்பட்டன. 222 முரண்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, 285 குழந்தை / வளரிளம் பருவத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 83 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, 176 வழக்குகளில் (முந்தைய ஆண்டு நிலுவையும் சேர்த்து) தண்டனை வழங்கப்பட்டு, ரூ.42,23,000/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**மறுவாழ்வு**

- மீட்கப்பட்ட குழந்தைகள், முறையான கல்வியினை பெறும் பொருட்டு, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்தில் இணைக்கப்பட்டு அவர்கள் கல்விபெறும் உரிமையை பெறுகின்றனர்.
- 1986-ஆம் ஆண்டு குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர்கள் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் குழந்தைத்

தொழிலாளரை பணிக்கமர்த்திய உரிமையாளர்களிடமிருந்து ரூ.20,000/- முதல் ரூ.50,000/- வரை அபராதத் தொகை வசூலிக்கப்படுகிறது. அபாயகரமான தொழில்களிலிருந்து மீட்கப்படும் குழந்தை / வளரிளம் பருவ தொழிலாளர் ஆகியோர்களுக்கு ரூ.15,000/- தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக வழங்கப்படுகிறது. அபராத தொகையினையும், அரசு பங்குத் தொகையினையும் சேர்த்து, மீட்கப்பட்ட குழந்தை அல்லது வளரிளம் பருவ தொழிலாளர் பெயரில் வங்கியில் நிரந்தர வைப்பு நிதியாக முதலீடு செய்யப்பட்டு, 18 வயதுக்கு பிறகு இத்தொகை குழந்தை / வளரிளம் பருவத்தினருக்கு அளிக்கப்படுகிறது. 2021-2022 வரையிலான காலத்திற்கு 12 குழந்தைத் தொழிலாளர்களுக்கு ரூ.1.80 இலட்சம் அரசின் பங்குத் தொகையாக

*2021-2022*-ஆம் ஆண்டில் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

**விழிப்புணர்வு உருவாக்குதல்**

- ❖ பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் *12*-ஆம் நாள் “உலக குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம்” ஆக கடைபிடிக்கப்படுகிறது. அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு அரசு அலுவலகங்களில் உறுதிமொழி எடுத்தல், ஊர்வலங்கள், மனிதச்சங்கிலிகள் மற்றும் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- ❖ மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 10.06.2022 அன்று

அண்ணாநகர் கோபுர பூங்காவில் மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி அனுசரிக்கப்பட்டது. அன்றைய தினம் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு வாசகங்கள் அடங்கிய பலூன்களை பறக்கவிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தின உறுதிமொழி எடுத்தல், விழிப்புணர்வு பேரணி, வீதி நாடகம், குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிராக கையெழுத்து இயக்கம் ஆகியவை நடத்தப்பட்டன.

**பயிற்சிகள்**

❖ தொழிலாளர் துறை அமலாக்க அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய பிற துறைகளான வருவாய்த் துறை, சமூக பாதுகாப்பு துறை, பள்ளிக் கல்வி துறை, காவல் துறை,

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சேர்ந்த அமலாக்க அதிகாரிகளுக்கு *1986*-ஆம் ஆண்டு குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், தொடர்பான மண்டல அளவிலான பயிலரங்கம் *24.01.2023*, *02.02.2023*, *07.02.2023* மற்றும் *14.02.2023* ஆகிய தினங்களில் சென்னை, அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியால் நடத்தப்பட்டது.

**அரசின் முக்கிய குறிக்கோள்**

- **குழந்தைத் தொழிலாளர் அதிகம் காணப்படும் மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர்களை கண்டறிய கணக்கெடுப்பு நடத்த செயல் திட்டம் உருவாக்குதல்.**

- *2025*–ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை "குழந்தைத் தொழிலாளர் அற்ற மாநிலம்" ஆக அறிவித்தல்.

### *1.3.16.* கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல்

மாநில அரசினால் கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவித்தல், மீட்டெடுத்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் தொடர்பாக மாநில செயல்திட்டம் மற்றும் நிலையான இயக்க நடைமுறைகள் பல்வேறு துறைகளின் பங்குதாரர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கி, *1976*-ஆம் ஆண்டு கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டத்தினை சீரிய முறையில் அமல்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது.

**மீட்பு மற்றும் விடுவித்தல்**

வருவாய் கோட்டாட்சியர், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) மற்றும் தொழிலகப்

பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், காவல் துறை, சுகாதாரத் துறை மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் தொடர்புடைய துறை அலுவலர்களுடன் இணைந்து கொத்தடிமைத் தொழிலாளர் முறை தொடர்பான புகார்களை பெற்ற *24* மணி நேரத்திற்குள் புகார் குறித்து முதற்கட்ட விசாரணை நடத்தி, புகாரின் உண்மைத் தன்மையைக் கண்டறிய வேண்டும். மீட்கப்பட்ட *24* மணி நேரத்திற்குள் மீட்கப்பட்ட ஒவ்வொரு கொத்தடிமைத் தொழிலாளருக்கும் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் என கண்டறியப்பட்ட குழந்தை குடும்பத்துடன் இருந்தாலும் ஒன்றிய அரசின் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட உரிய படிவத்தில் விடுதலை சான்றிதழை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் வழங்க வேண்டும்.

**மறுவாழ்வு அளித்தல்**

- ❖ கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்விற்காக தேவைக்கேற்ப மாவட்டந்தோறும் நிரந்தர நிதி மூலதனம் ஏற்படுத்த அரசானது ரூ.*121* இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

- ❖ கொத்தடிமைத் தொழிலாளர் முறையிலிருந்து விடுவிக்கப்படும் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.*30,000/-* வழங்கப்பட்டு வருவதோடு, குடும்ப அட்டை, சாதிச் சான்றிதழ், வேலைவாய்ப்பு, கல்வி, தொழிற்திறன் பயிற்சி, சுய உதவி குழுக்களில் உறுப்பினராக சேர்த்தல் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் அவர்கள் பணிபுரியும் தொழில்களுக்கு ஏற்ப, உரிய அமைப்புசாரா

தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்டு உரிய திட்டங்களின் கீழ் தகுதியான திட்டப் பயன்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

- *2021*-ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டத்தின்படி ஆண் தொழிலாளர்களுக்கு ரூ.*1.00* இலட்சம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ரூ.*2.00* இலட்சம் மற்றும் இதர ஒதுக்கப்பட்ட சிறப்பு பிரிவு தொழிலாளர்களுக்கு ரூ.*3.00* இலட்சம் தொகையும் நீதிமன்ற முடிவிற்குப் பின் இறுதி நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

- *01.04.2022* முதல் *31.12.2022* வரையிலான காலக்கட்டத்தில் *132* மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.*41,40,00/-*

வழங்கப்பட்டுள்ளது.

**விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

- ❖ அனைத்து மாவட்டங்களிலும் கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பு தினத்தையொட்டி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக மாநில அரசு ரூ.*3.80* லட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

- ❖ *2023*, பிப்ரவரி *9*-ஆம் தேதி அன்று அனுசரிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பு தினத்தின் போது, துண்டு பிரசுரங்கள் விநியோகம், பொது இடங்களில் பதாகைகளை காட்சிபடுத்தல், கையெழுத்து இயக்கம், வீதி நாடகம், பொது இடங்கள், பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்களை ஒட்டுதல் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- ❖ மாநில அளவிலான கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பு தின நிகழ்ச்சி பிப்ரவரி *9, 2023* அன்று சென்னை, ஓட்டல் பாம்குரோவில் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராக, சென்னை அமெரிக்க தூதரகத்தின் அரசியல் / பொருளாதாரத் தலைவர் திருமதி. விர்சா பெர்கின்ஸ் பங்கேற்றார். பல்வேறு துறைகளை சேர்ந்த அலுவலர்களும் பங்கேற்றனர்.

- ❖ கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பில் சிறப்பாகப் பணியாற்றிய அமலாக்க அதிகாரிகளுக்கான விருதுகள், காவல்துறை, வருவாய்த் துறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் மற்றும் தொழிலாளர் துறைக்கு வழங்கப்பட்டன.

**தமிழ்நாடு அரசின் முயற்சிகள்**

**கணக்கெடுப்பு**

கொத்தடிமைத் தொழிலாளர் அதிகம் காணப்படும் 11 மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், நாமக்கல், ஈரோடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் கணக்கெடுப்புப்பணி நடத்தப்பட்டது. அரசாணை (டி) எண்.130, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள்.17.02.2023 வாயிலாக 27 மாவட்டங்களில் கணக்கெடுப்புப் பணி நடத்த ரூ.1,21,50,000/-ஐ அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**சிறந்த மாவட்ட ஆட்சியர் விருது**

கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் மாவட்ட நிர்வாகத்தை முழுமையாக ஈடுபடுத்தும் பொருட்டு, மாவட்ட ஆட்சியர்களை ஊக்கப்படுத்தும்

வகையில், சிறப்பாக பணியாற்றிய மாவட்ட ஆட்சியருக்கு சிறந்த மாவட்ட ஆட்சியருக்கான விருது வழங்க அரசாணை (நிலை) எண்.150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள்.15.11.2022-இல் ஆணையிட்டுள்ளது.

**கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினம்**

கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை அகற்றிடவும் மற்றும் தமிழ்நாட்டை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்கிடவும், ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 9-ஆம் நாள் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினமாக அனுசரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

**கட்டணமில்லா தொலைபேசி எண்**

கொத்தடிமைத் தொழிலாளர் குறித்த புகார்களை தெரிவிக்க கட்டணமில்லா தொலைபேசி எண்.1800 4252 650 (Toll Free Helpline) உருவாக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் எளிதாக

நினைவில் வைத்துக் கொள்ளும் பொருட்டு, சுருக்க எண்.155214 வழங்கப்பட்டுள்ளது.

**அரசின் குறிக்கோள்**

2030-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்க தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது.

**தமிழ்நாடு அரசின் சிறப்பு முயற்சி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் புத்தகங்கள் வெளியீடு**

அனைத்து பங்குதாரர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கொத்தடிமை எனும் தீமைக்கெதிராக உணர்வூட்டவும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சமீபத்தில் பின்வரும் இரண்டு புத்தகங்களை தயாரித்துள்ளது.

*i.* “குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் - தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்”

*ii.* “கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் - தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்”

இப்புத்தகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் *23*.02.2023 அன்று வெளியிடப்பட்டன.

## ***1.3.17.*** தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பை வழங்கும் நீதிமுறைச் சார்புடைய நடைமுறைகள்

- *1923*-ஆம் வருட பணியாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழான ஆணையர்கள் / மண்டல இணை ஆணையர்கள் பணியின்போது அல்லது பணி செய்யும் போது ஏற்படும் விபத்தினால் நிகழும் வழக்குகளை விசாரித்து, விபத்து தொடர்பான வழக்குகளுக்கு மரணமடைந்த பணியாளர்களை சார்ந்தவர்களுக்கும் மற்றும் விபத்து ஊனம்

தொடர்பான வழக்குகளுக்கு ஊனமடைந்த பணியாளர்களுக்கும் இழப்பீட்டு உத்தரவு பிறப்பிக்கின்றனர். *01.04.2022* முதல் *31.12.2022* வரையிலான காலத்தில் *2,371* வழக்குகள் *10* மண்டல தொழிலாளர் இணை ஆணையர்களால் முடிக்கப்பட்டு, மொத்தம் ரூ.*69,90,57,857/-* இழப்பீட்டுத் தொகையாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

- *1972*-ஆம் வருட பணிக்கொடை பட்டுவாடா சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு அலுவலர்களாக உள்ள மண்டல தொழிலாளர் இணை ஆணையர் அலுவலக தொழிலாளர் துணை ஆணையர்களால் தொழிலாளர்களின் பணிக்கொடை கேட்பு மனுக்கள் மீது விசாரணை செய்யப்பட்டு தகுதியின் அடிப்படையில் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. *01.04.2022* முதல்

*31.12.2022* வரையிலான காலத்தில் *1,*563 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு பணிக்கொடை தொகையாக ரூ.*10,76,65,863/-* கேட்பு மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

- ❖ மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள் / மேல் முறையீட்டு அலுவலர்கள் பணிக்கொடை பட்டுவாடா சட்டம், 1972-இன் கீழ் *01.04.2022* முதல் *31.12.2022* வரையிலான காலத்தில் தங்கள் முன்பு தாக்கல் செய்யப்பட்ட *210* மேல்முறையீட்டு மனுக்களை தீர்வு செய்துள்ளனர்.

- ❖ *1981*-ஆம் வருட பிழைப்பூதிய வழங்கல் சட்டத்தின் கீழான அதிகாரிகளால் *01.04.2022* முதல் *31.12.2022* வரையிலான காலத்தில், *66* கேட்பு மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.*60,64,449/-* பிழைப்பூதியமாக

வழங்க உத்தரவிடப்பட்டுள்ளன. மேலும், மேல்முறையீட்டு அதிகாரிகளால் *10* மேல்முறையீட்டு மனுக்கள் தீர்வு காணப்பட்டுள்ளன.

## *1.4.* சட்டபூர்வமான / சட்டபூர்வமற்ற வாரியங்களும், குழுக்களும்

- ❖ மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரின் தலைமையில் மறு சீரமைக்கப்பட்ட மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம் *27.10*.2022 அன்று அதன் 69-வது மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டத்தை நடத்தியது.

- ❖ தொழிலாளர் ஆணையர் தலைமையில் குறைந்தபட்ச ஊதிய (மாநில) ஆலோசனை வாரியக் குழுவின் *80*-வது கூட்டம்

18.08.2022 அன்று சென்னையில் நடைபெற்றது.

- *25.07.2022* அன்று அரசு தலைமைச் செயலாளர் முன்னிலையில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்த மாநில பொறுப்பாண்மைக் குழு கூட்டம் மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்திற்கான மாநில அளவிலான கண்காணிப்புக் குழு கூட்டம் ஆகியவை நடைப்பெற்றன.

- *1976*-ஆம் வருட கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டத்தினை சீரிய முறையில் அமல்படுத்தும் நோக்கில், *25.07.2022* அன்று அரசு தலைமைச் செயலாளர் முன்னிலையில் மாநில அளவிலான உயர்மட்ட கண்காணிப்புக் குழு கூட்டம் நடைபெற்றது.

❖ அரசாணை *(டி)* எண்*574*, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நாள்.*28.11.2022* மூலம் மாநில ஒப்பந்த தொழிலாளர் ஆலோசனை வாரியம் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ அரசாணை *(டி)* எண்.*555*, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நாள்.*14.11.2022* மூலம் சமஊதியச் சட்ட ஆலோசனைக் குழு மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

## *1.5.* தொழில் நடத்துவதில் எளிய முறை

"தொழில் நடத்துவதில் எளிய நடைமுறைகள்" செயல்படுத்திட பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் பதிவு, உரிமம், புதுப்பித்தல், திருத்தம், மாற்றம் மற்றும் மூடுதல் முதலிய சேவைகளும் ஆய்வு ஒதுக்கீடு செய்யும் பணியும் முறையாக

ஒருங்கிணைக்கப்பட்டு தொழிலாளர் துறையின் வலைதளத்தில் ***https://labour.tn.gov.in/*** இத்துறை வழங்குகிறது. மேலும், கட்டணம் செலுத்தும் வசதி, சான்றிதழ் மற்றும் உரிமங்கள் பதிவிறக்கம் செய்தல் ஆகிய சேவைகள் மின்னணு முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழிலாளர் துறைக்கான *41* மின்னணு சேவைகளில், *37* சேவைகள் இணைய வழி செயல்பாட்டில் உள்ளன. மீதமுள்ள *4* சேவைகள் விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ளன.

**இணைய வழி வாயிலாக ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்தல்**

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் பல ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்வதை தவிர்த்திடவும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் காகிதமில்லா இணையதள செயல்முறையின் மூலம் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை தாக்கல் செய்யும்

முறை பின்வரும் சட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதிகள், *1959.*
- தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர்கள் விதிகள், *1955.*
- தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள், *1965.*
- தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள், *1968.*

**எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த பதிவேடுகள்**

பல்வேறு பதிவேடுகள் மற்றும் படிவங்களை பராமரிக்கும் சுமையினை குறைத்திடும் வகையில் ஒருங்கிணைந்த எளிமைப்படுத்தப்பட்ட பதிவேடு

முறை பின்வரும் விதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதிகள், *1959.*
- தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள், *1965.*
- தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு தொழிலார்கள் (பணி நிலைமைகள்) விதிகள், *1968.*
- தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகள், *1948.*
- தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர்கள் விதிகள், *1955.*

**பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களில் நீதிமன்ற தண்டனைக்குரிய குற்றங்களை இசைவுத் தீர்வு குற்றமாக குறைக்க முயற்சிகள்**

பின்வரும் நீதிமன்ற தண்டனைக்குரிய குற்றங்களை இசைவுத் தீர்வு குற்றமாக குறைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், *1958.*
- தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், *1981.*
- தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல்*)* சட்டம், *1981.*

- தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (பணி மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், *1982.*

## *1.6.* தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் அறிமுகம்

தற்போது நடைமுறையிலுள்ள 29 தொழிலாளர் நலச் சட்டங்களை உள்வாங்கி பின்வரும் நான்கு சட்டத் தொகுப்புகளாக உருவாக்க ஒன்றிய அரசால் திட்டமிடப்பட்டு, அந்நான்கு சட்டத் தொகுப்புகளும் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு அதன்பின் மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

*i.* ஊதியங்கள் சட்டத்தொகுப்பு, 201*9*

*ii.* தொழில் உறவுகள் சட்டத்தொகுப்பு, *2020*

*iii.* சமூக பாதுகாப்பு சட்டத்தொகுப்பு, 2020

*iv.* தொழிலக பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் சட்டத்தொகுப்பு, 2020

அதே வேலையில், ஒன்றிய அரசு இந்நான்கு சட்டத் தொகுப்புகளுக்கும் ஒன்றிய விதிகளை இயற்றி அவற்றை அரசிதழிலும் வெளியிட்டுள்ளது.

இந்நான்கு சட்டத் தொகுப்புகளையும் மாநிலங்களில் அமல்படுத்த ஒவ்வொரு மாநிலமும் அதற்கான மாநில சட்டவிதிகளை இயற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு, ஊதிய சட்டத் தொகுப்பு, தொழில் உறவுகள் சட்டத் தொகுப்பு மற்றும் தொழிலக பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிநிபந்தனைகள் சட்டத் தொகுப்பு ஆகிய சட்டத் தொகுப்புகளுக்கு வரைவு விதிகள் தயாரிக்கப்பட்டு, *11.04.2022* அன்று வெளியிடப்பட்டது. தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள், வேலையளிப்பவர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து இவ்வரைவு விதிகளின் மீது ஆட்சேபனைகளும் ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளது. மேற்படி

மூன்று சட்டத் தொகுப்புகளும் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. சமூக பாதுகாப்பு சட்டத் தொகுப்பிற்கான மாநில சட்ட வரைவு விதிகள் தற்போது தயாரிக்கப்பட்டு, விரைவில் வெளியிடப்படவுள்ளது. மேற்படி வரைவு விதிகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களுடனும் கலந்தாலோசிக்கப்பட்டு அதன் பின்னரே முடிவு செய்யப்படும்.

## *1.7.* நல வாரியங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள்

### *1.7.1.* தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

- தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972 அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துவதற்காக இயற்றப்பட்டது. இந்நோக்கத்துடன் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1975-ஆம் ஆண்டில்

உருவாக்கப்பட்டது. தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களிடமிருந்தும், வேலையளிப்பவரிடமிருந்தும் பெறப்படும் தொழிலாளர் நல நிதி பங்குத் தொகையின் மூலம் பல்வேறு நலத் திட்ட பயன்கள் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

- ஒவ்வொரு தொழிலாளியும் ஆண்டொன்றுக்கு ரூ.20/-ம், வேலையளிப்பவர் ஒரு தொழிலாளிக்கு ரூ.*40/*-ம், அரசு ஒரு தொழிலாளிக்கு ரூ.20/- என்ற வீதத்திலும் தொழிலாளர் நல நிதி செலுத்தி வருகின்றனர். தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமல் நிறுவனங்களிடம் உள்ள கொடுபடாத் தொகை,

தொழிலாளர் நலச் சட்டம் மற்றும் விதிகளை மீறியமைக்காக வேலையளிப்பவர் மீது நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் அபராதம் மற்றும் அமலாக்க அலுவலர்களால் விதிக்கப்படும் இணைக்கக் கட்டணம் ஆகியவை தொழிலாளர் நல நிதியில் சேர்க்கப்படுகிறது.

❖ பின்வரும் நலத் திட்டங்களுக்காக தொழிலாளர் நல நிதி செலவிடப்படுகிறது.

- திருமண உதவித் தொகை
- கல்வி உதவித் தொகை மற்றும் கல்வி ஊக்கத் தொகை
- பாடநூல் உதவித்தொகை
- அடிப்படை கணினிப் பயிற்சி உதவித் தொகை
- தையல் இயந்திரம் வாங்க உதவித் தொகை
- மூக்குக் கண்ணாடி உதவித் தொகை

- *10*-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்களுக்கு விலையில்லா மாதிரி வினாத்தாள் கையேடு
- நுழைவுத் தேர்வு பயிற்சி வகுப்பு உதவித் தொகை
- விளையாட்டுப் போட்டிகளுக்கான நிதியுதவி
- இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்கிற்கான உதவித் தொகை.
- விபத்து மரணம் மற்றும் ஈமச் சடங்கிற்கான உதவித் தொகை.

❖ தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் குறைந்த வாடகையில் விடுமுறையை மகிழ்ச்சியுடன் கழித்திட, மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன.

- ❖ தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்கு வசதியாக "ஜீவா இல்லம்" சென்னையில் கட்டப்பட்டுள்ளது.

- ❖ தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் பயன்பெறும் வகையில் முக்கிய நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் தொழிலாளர் நலன் சம்பந்தமான கட்டுரைகள் அடங்கிய "உழைப்பவர் உலகம்" எனும் தமிழ் மாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

**_01.04.2022_ முதல் _31.12.2022_ வரையான காலத்தில் பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் உதவித் தொகை விவரம்**

| வ. எண். | திட்டங்கள் | பயனாளிகள் | தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|
| *1.* | கல்வி உதவித் தொகை | *325* | *9.63* |
| *2.* | பாடநூல் உதவித் தொகை | *4* | *0.08* |
| *3.* | திருமண உதவித் தொகை | *567* | *56.70* |

| வ. எண். | திட்டங்கள் | பயனாளிகள் | தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|
| *4.* | மூக்குக் கண்ணாடி உதவித் தொகை | *180* | *1.67* |
| *5.* | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை | *185* | *55.50* |
| *6.* | விபத்து மரண உதவித் தொகை மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை | *48* | *50.40* |
| *7.* | உழைப்பவர் உலகம் மாத இதழ் | *4,195* (மாதந்தோறும்) | *4.76* |
| *8.* | ஓய்வில்லம், விடுமுறை இல்லங்களின் பராமரிப்பு மற்றும் நிர்வாக செலவினம் | *5454* | *44.98* |
| | **மொத்தம்** | ***10,958*** | ***223.72*** |

### *1.7.2. 18* அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்

கல்வி, திருமணம், மகப்பேறு, இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம், மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகிய சமூக பாதுகாப்பு நல உதவிகள் வழங்குவதற்கான சட்டத்தை

இயற்றியதன் மூலம் தமிழ்நாடு ஏனைய மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், *1982* மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட திட்டங்கள், சட்டத்தின் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள *70* தொழில்களில் மற்றும் *54* கட்டுமான தொழில்களில் ஈடுபடும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு, சமூக பாதுகாப்பு மற்றும் நல உதவிகளை வழங்குகிறது.

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் பின்வரும் *18* அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களை அரசு அமைத்துள்ளது**

| வ. எண் | வாரியங்களின் பெயர் |
|---|---|
| *1.* | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| *2.* | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் |

| வ. எண் | வாரியங்களின் பெயர் |
|---|---|
| 3. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியம் |
| 4. | தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 5. | தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம் |
| 6. | தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 7. | தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 8. | தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 9. | தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 10. | தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 11. | தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம் |
| 12. | தமிழ்நாடு பொற்கொல்லர்கள் நல வாரியம் |
| 13. | தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 14. | தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம் |
| 15. | தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம். |
| 16. | தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம். |
| 17. | தமிழ்நாடு சமையல் மற்றும் உணவகத் தொழிலாளர்கள் நலவாரியம் |
| 18. | தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியம். |

**அமைப்புசாரா நல வாரியங்களின் செயல்பாடுகள்**

பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் வழங்கப்படும் பலன்கள் தகுதியான பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் வாரியங்களின் செயல்பாடுகள் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. சிக்கல் ஏதுமற்ற இவ்வேற்பாட்டின் காரணமாக அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவு, புதுப்பித்தல் மற்றும் திட்டங்களின் பலன்களுக்கு இணையத்தின் வாயிலாக விண்ணப்பிக்க இயலும். தொழிலாளர்கள் அவர்களது வீடுகள் அல்லது அருகாமையில் உள்ள சேவை மையங்களிலிருந்து விண்ணப்பிக்க இயலும் என்பது அவர்களது வாழ்க்கையை எளிதாக்கியுள்ளது.

பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு பலன்கள் உரிய காலத்தில் வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட கண்காணிப்புக் குழு கண்காணிக்கிறது. நலத்திட்ட உதவிகள்

பயனாளிகள் / பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களின் வங்கிக் கணக்கிற்கு மின்னணு பரிமாற்றத்தின் மூலம் நேரடியாக வழங்கப்படுவதினால், நல உதவிகள் உரிய பயனாளிகளுக்கு விரைவாக சென்றடைகின்றன.

**அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களின் பதிவு முன்னேற்றம்**

*07.05.2021* முதல் *31.01.2023* வரையிலான காலத்தில் *8,40,951* கட்டுமானத் தொழிலாளர்களும், *3,16,234* அமைப்புசாரா தொழிலாளர்களும் பல்வேறு நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், *61,626* அமைப்புசாரா தொழிலாளர்கள், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**நலத்திட்ட உதவிகள்**

கூரிய கண்காணிப்பின் காரணமாக *07.05.2021* முதல் *31.01.2023* வரையிலான காலத்தில் *8,97,668* பயனாளிகளுக்கு ரூ.*679,64,47,600/-* மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் ரூ.*476,81,42,801/-* ஓய்வூதியத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

**தரவுகள் தூய்மை நடவடிக்கை**

நலத்திட்ட உதவிகள் தகுதியான பயனாளிகளுக்கு மட்டுமே சென்றடைய வேண்டும் என்பதை உறுதி செய்யும் நோக்குடன், தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் *(TNeGA)* உதவியோடு தரவுகள் தூய்மை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எந்தவொரு தகுதியற்ற பயனாளியை நீக்குவதற்கு முன்பாக அனைத்து கள அளவிலான சரிபார்ப்புகளும் கவனமுடன் மேற்கொள்ளப்பட்டன.

**தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியத்திற்கான நிரந்தர நிதியம் *(Corpus Fund)***

பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தி தொழிலில் ஈடுபடும் அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கும் பொருட்டு *2020*-ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வரசின் சீரிய முயற்சியின் பலனாக விருதுநகர் மாவட்ட பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கங்கள், இவ்வாரியத்தின் நிரந்தர ஆதார நிதிக்கு தங்களின் பங்களிப்புத் தொகையாக ரூ.*5.02* கோடிக்கான காசோலையினை *04.02.2023* அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கின.

**சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் உருவாக்கம் மற்றும் மேம்பாடு**

அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பு நடவடிக்கையாக வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் காலத்தின் தேவைக்கேற்ப புதியதாக அறிமுகப்படுத்தப்படுகின்றன. அவ்வகையில், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற *85,000* தொழிலாளர்களுக்கு ரூ.*12.75* கோடி மதிப்பில் பாதுகாப்புப் பெட்டகங்கள் வழங்கப்பட்டன. மேலும், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் இதர *17* நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகள் *6*-ஆம் வகுப்பு முதல் *9*-ஆம் வகுப்பு வரை பயில்வதற்கான கல்வி உதவித் தொகை வழங்கும் புதிய நலத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடையும் நேர்வில் அன்னாரது குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த நல உதவி ரூ.20,000/-ல் இருந்து ரூ.50,000/- ஆகவும், விபத்து மரணம் அடையும் நேர்வில் வழங்கப்பட்டு வந்த நல உதவி ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ.2.00 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

அதே போன்று, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடையும் நேர்வில் அன்னார்களது குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த நல உதவி ரூ.20,000/-ல் இருந்து ரூ.30,000/- ஆகவும், விபத்து மரணம் அடையும் நேர்வில் வழங்கப்பட்டு

வந்த நல உதவி ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ.1.25 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

2021-2022-ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி திட்டத்தை மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார். தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் வீடு கட்டுவதற்கு / தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளை வாங்குவதற்கு நிதி உதவியாக ரூ.4.00 இலட்சம் வரை வழங்கிடும் வீட்டு வசதி திட்டத்தை அறிமுகப்படுத்தி அரசாணை (நிலை) எண்.7, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள்.10.01.2022-இன் வாயிலாக அரசு

ஆணையிட்டுள்ளது. இத்திட்டம் 15.11.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. 31.01.2023 அன்றுள்ளவாறு, இத்திட்டத்தின் கீழ் 120 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள்**

பின்வரும் நலத் திட்ட உதவிகள் 18 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களால் வழங்கப்படுகின்றன:

| வ. எண் | நலத்திட்டங்கள் | | வழங்கப்படும் நலத்திட்ட உதவித் தொகை (ரூ.) | | |
|---|---|---|---|---|---|
| | | | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள் | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியம் |
| 1. | விபத்து நிவாரணத் திட்டம் | | | | |
| | அ. | விபத்து மரணம் | 2,00,000 | 1,25,000 | 2,00,000 |
| | ஆ | விபத்து ஊனம் (ஊனத்தின் தன்மைக்கேற்ப) | 1,00,000 வரை | 1,00,000 வரை | 1,00,000 வரை |
| | இ. | செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி | மாற்றுத்திறனாளிகள் நலத் துறையால் நெறிமுறை மற்றும் நிர்ணய விகிதத்தின் அடிப்படையில் வழங்கப்படும். | | |

| வ. எண் | நலத்திட்டங்கள் | வழங்கப்படும் நலத்திட்ட உதவித் தொகை (ரூ.) | | |
|---|---|---|---|---|
| | | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள் | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியம் |
| | ஈ. பணிபுரியும் இடத்தில் விபத்து மரணம் மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின் மரணம் (பணியின் போது / பதிவு பெறாத தொழிலாளர்களுக்கும்) | 5,00,000 | - - - - | - - - - |
| 2. | இயற்கை மரண உதவித்தொகை | 50,000 | 30,000 | 50,000 |
| 3. | ஈமச்சடங்கு உதவித்தொகை | 5,000 | 5,000 | 5,000 |
| 4. | திருமண உதவித்தொகை | 20,000 | 5,000 (பெண்) | 5,000 (பெண்) |
| | | | 3,000 (ஆண்) | 3,000 (ஆண்) |
| 5. | மகப்பேறு உதவித்தொகை | 18,000 | 6,000 | 6,000 |
| | மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு / கருச்சிதைவு | 3,000 | 3,000 | 3,000 |
| 6. | கல்வி உதவித் தொகை | | | |
| | அ. 6-ஆம் வகுப்பு முதல் 9 –ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு | 1,000 | 1,000 | 1,000 |

| வ. எண் | நலத்திட்டங்கள் | | வழங்கப்படும் நலத்திட்ட உதவித் தொகை (ரூ.) | | |
|---|---|---|---|---|---|
| | | | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள் | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியம் |
| | ஆ | 10 - ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கு | 2,400 | 1,000 | 1,000 |
| | இ. | 10 - ஆம் வகுப்பு தேர்ச்சி | 2,400 | 1,000 | 1,000 |
| | ஈ. | 11 - ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கு | 3,000 | 1000 | 1000 |
| | உ. | 12 - ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கு | 3,000 | 1,500 | 1,500 |
| | ஊ | 12 - ஆம் வகுப்பு தேர்ச்சி | 3,000 | 1,500 | 1,500 |
| | எ. | முறையான பட்டப்படிப்பு | 4,000 | 1,500 | 4,000 |
| | | விடுதியில் தங்கி படிப்பவர் | | 1,750 | |
| | ஏ. | முறையான பட்ட மேற்படிப்பு | 4,000 | 4,000 | 4,000 |
| | | விடுதியில் தங்கி படிப்பவர் | 5,000 | 5,000 | 5,000 |
| | ஐ. | தொழில் நுட்பப் பட்டப்படிப்பு | 4,000 | 4,000 | 4,000 |
| | | விடுதியில் தங்கி படிப்பவர் | 6,000 | 6,000 | 6,000 |

| வ. எண் | நலத்திட்டங்கள் | வழங்கப்படும் நலத்திட்ட உதவித் தொகை (ரூ.) | | |
|---|---|---|---|---|
| | | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள் | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியம் |
| | ஓ. தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்பு | *6,000* | *6,000* | *6,000* |
| | விடுதியில் தங்கி படிப்பவர் | *8,000* | *8,000* | *8,000* |
| | ஓ. ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | *3,000* | *1,000* | *1,000* |
| | விடுதியில் தங்கி படிப்பவர் | | *1,200* | *1,200* |
| *7.* | கண் கண்ணாடி வாங்கிட உதவித் தொகை | *500* வரை | *500* வரை | *500* வரை |
| *8.* | அ. ஓய்வூதியம் (ஒவ்வொரு மாதமும்) | *1,000* | *1000* | *1000* |
| | ஆ குடும்ப ஓய்வூதியம் (ஒவ்வொரு மாதமும்) | *500* (மாதந்தோறும்) | - | - |
| *9.* | வீட்டு வசதி திட்டம் | *4,00,000* வரை | - | - |

## நிதி ஆதாரங்கள்

கட்டுமானம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட கட்டடம் அல்லது கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டு தொகையில் ஒரு சதவிகிதத்தை

பங்களிப்பாக தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் பெறுகிறது. 2022-2023-ஆம் ஆண்டில் (01.04.2022 முதல் 31.01.2023 வரை) ரூ.652.39 கோடி பங்களிப்பு தொகையாக பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்பு சட்டம், 1974-இன் கீழ் பயணிகள் அல்லது சரக்குகள் ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு வர்த்தக மோட்டார் வாகனங்களுக்காக வசூலிக்கப்படும் 1 சதவீதம் கூடுதல் வரியை தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் பெறுகிறது. 01.04.2022 முதல் 31.01.2023 வரை ரூ.18.67 கோடி கூடுதல் வரியாகப் பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள், நலத் திட்ட உதவிகளை

செயல்படுத்துவதற்கு அரசு மானியங்களை பெறுகின்றன. 2022-2023-ஆம் ஆண்டிற்கு அரசால் ரூ.166.66 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒன்றாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளுக்கு ரூ.125.00 கோடி நிதி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. (01.04.2022 முதல் 31.01.2023).

## 18 அமைப்புசாரா நல வாரியங்களின் சாதனைகள்

**அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் துவங்கப்பட்ட நாள் முதல் 31.01.2023 வரை பதிவு மற்றும் வழங்கப்பட்ட நலத் திட்ட உதவித் தொகை விவரங்கள்**

| வ. எண். | நல வாரியம் | பதிவு (இலட்சத்தில்) | பயனாளிகள் (இலட்சத்தில்) | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | 21.55 | 24.19 | 1259.37 |

| வ. எண். | நல வாரியம் | பதிவு (இலட்சத்தில்) | பயனாளிகள் (இலட்சத்தில்) | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 2. | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள் | 17.48 | 36.71 | 1343.96 |
| 3. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் | 1.66 | 1.71 | 70.75 |
| **மொத்தம்** | | ***40.69*** | ***62.61*** | ***2674.08*** |

## *01.04.2022* முதல் *31.01.2023* வரை பதிவு மற்றும் வழங்கப்பட்ட நலத் திட்ட உதவித் தொகை விவரங்கள்

| வ. எண். | நல வாரியம் | பதிவு | பயனாளிகள் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | 2,65,840 | 3,85,131 | 242.27 |

| வ. எண். | நல வாரியம் | பதிவு | பயனாளிகள் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| *2.* | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர *15* நல வாரியங்கள் | *1,02,199* | *1,84,543* | *122.62* |
| *3.* | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் | *24,047* | *23,184* | *12.94* |
| **மொத்தம்** | | ***3,92,086*** | ***5,92,858*** | ***377.83*** |

## *1.7.3.* தமிழ்நாடு கட்டுமானக் கழகம்

❖ கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் திறன், ஆற்றல் மற்றும் அறிவு ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு "தமிழ்நாடு கட்டுமானக் கழகம்" அமைக்கப்பட்டுள்ளது.

- ❖ தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநகரத்தால் *(DET)* அனுமதிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்நுட்ப பயிற்சி மையங்களின் வாயிலாக கட்டுமான தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

- ❖ இப்பயிற்சி இலவசமாக அளிக்கப்படுகிறது. பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின்னர் பயிற்சி பெற்றவர்களுக்கு தேசிய தொழில் நெறிக் கல்விப் பயிற்சி *(National Council of Vocational Training)* சான்றிதழ் வழங்கப்படுகிறது.

- ❖ தமிழ்நாடு கட்டுமானக் கழகம் *(TAC)*, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் *(TNSDC)* மற்றும் கட்டுமானத் தொழில் வளர்ச்சி குழுமத்துடன்

*(CIDC)* இணைந்து *08.11.2019* முதல் *31.12.2022* முடிய *3,099* தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### *1.7.4.* தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

❖ தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் *1973*-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டது. பின்னர் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, *1988*-லிருந்து சங்கமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் இக்கல்வி நிலைய ஆட்சிமன்றக் குழுவின் தலைவராவார். இக்கல்வி நிலையம் தற்போது சென்னையில், அம்பத்தூர், தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் நிர்வாக அலுவலகம்

மற்றும் தங்கும் விடுதியுடன் செயல்பட்டு வருகிறது.

- இக்கல்வி நிலையம், தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமாகும்.

- இக்கல்வி நிலையத்திற்கு *2022-2023*-ஆம் நிதியாண்டிற்கான மானியமாக ரூ.*3,33,18,000/-* தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

- இக்கல்வி நிலையம், கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் போன்றவற்றை, தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள், நிர்வாகிகள், மற்றும் தொழிற்சங்கத்தினர், தொழிலாளர் துறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரக அலுவலர்கள் ஆகியோர்களின்

தேவை கருதி, காலமுறையில் நடத்தி வருகிறது.

❖ மேலும், இக்கல்வி நிலையம், புது டெல்லி, சர்வதேச தொழிலாளர் அமைப்பு *(ILO)* மற்றும் நொய்டாவிலுள்ள வி.வி. கிரி தேசிய தொழிலாளர் கல்வி நிலையத்துடன் இணைந்து கருத்தரங்குகள் / பயிற்சிகளை நடத்தி வருகிறது.

**கருத்தரங்குகள்**

| கருத்தரங்குகளின் விவரம் | நடைபெற்ற கருத்தரங்குகளின் எண்ணிக்கை | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|
| தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும் தொழிலாளர் நலச்சட்டங்கள்" என்னும் இரண்டு நாள் கருத்தரங்கு | *6* | *1,000* |
| கடைகள், வர்த்தக, உணவு மற்றும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களும் தொழிலாளர் நலச் சட்டங்களும்" எனும் ஒரு நாள் கருத்தரங்கு | *2* | *239* |

| கருத்தரங்குகளின் விவரம் | நடைபெற்ற கருத்தரங்குகளின் எண்ணிக்கை | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|
| தோட்ட நிறுவனங்களுக்குப் பொருந்தும் தொழிலாளர் நலச் சட்டங்கள் | *2* | *165* |

**கல்விப் பணிகள்**

இக்கல்வி நிலையம் தொழிலாளர் மேலாண்மையியலில் இளங்கலை பட்டப்படிப்பு பி.ஏ. - (தொழிலாளர் மேலாண்மை), முதுகலை பட்டப்படிப்பு எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) ஆகியவற்றை சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தி வருகிறது. இக்கல்வி நிலையம் தொழிலாளர் மேலாண்மையில் முழு நேர மற்றும் பகுதி நேர ஆராய்ச்சி (பி எச்.டி.) படிப்பு நடத்துவதற்கு சென்னைப் பல்கலைக்கழகத்தால் ஓர் ஆராய்ச்சி நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கல்வி நிலையம் ஓராண்டு பகுதி நேர (மாலை) "தொழிலாளர் நிர்வாகத்தில் முதுகலை பட்டயப்படிப்பு"

(பி.ஜி.டி.எல்.ஏ) மற்றும் "தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும்" என்ற ஓராண்டு (பகுதி நேர - வார இறுதி நாட்கள் - சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) பட்டயப் படிப்பு பணி புரிவோருக்காக நடத்தி வருகிறது.

## *2022-2023*-ஆம் கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கை விவரம்

| **வ. எண்** | **படிப்பு விவரம்** | ***1*-ஆம் ஆண்டு** | ***2*-ஆம் ஆண்டு** | ***3*-ஆம் ஆண்டு** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| *1.* | பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) | *59* | *58* | *59* | *176* |
| *2.* | எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) | *44* | *49* | *0* | *93* |
| *3.* | பி.ஜி.டி.எல்.ஏ. | *85* | *0* | *0* | *85* |
| *4.* | டி. எல்.எல். ஏ. எல்., | *85* | *0* | *0* | *85* |
| *5.* | பிஎச்.டி | *0* | *0* | *0* | *3* |
| **மொத்தம்** | | | | | ***442*** |

**வேலைவாய்ப்பு**

இக்கல்வி நிலையத்தின் மூலம் போதிய வேலை வாய்ப்புகளை தேடித்தரும் பொருட்டு "நியோ மானேஜர்ஸ் கைடன்ஸ் பீரோ" என்ற பணியமர்வு வழிகாட்டுக்குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் மேலாண்மையில் பி.ஏ. மற்றும் எம்.ஏ. படிக்கும் மாணவர்களுக்கான வளாகத் தேர்வு மற்றும் பணியமர்த்தல் ஆகியவற்றுக்கு இக்குழு ஏற்பாடு செய்கிறது.

இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்கள் அரசு / பொதுத்துறை நிறுவனங்கள் / தனியார் நிறுவனங்களில் பணிபுரிகின்றனர். இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்கள் தொழிலாளர் துறை மற்றும் பின்வரும் பொதுத்துறை நிறுவனங்களில் உயர் அலுவலர்களாக பணிபுரிந்து வருகின்றனர். ஓ.என்.ஜி.சி, ஸ்டீல் அதாரிட்டி ஆப்

இந்தியா லிமிடெட், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் ட்டி.சி.எஸ்., எச்.சி.எல்., காக்னிசன்ட், ஜி.இ. பைனான்ஸ், அப்பல்லோ மருத்துவமனை, ஹுண்டாய், ஜி.ஆர்.ட்டி கிராண்ட் டேஸ், யூனியன் பாங்க் ஆப் இந்தியா, டாஃபே *(TAFE)* மற்றும் பல. மேலும், 2022-*2023*-ஆம் கல்வியாண்டில் *50* மாணவர்கள் பயனடைந்தனர்.

### *1.7*.5. இ-ஷ்ரம்

மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றத்தின் 29 ஜூன் 2020 தேதியிட்ட தன்னார்வ நீதிப்பேராணை மனு எண்.06/*2020*-இல் வழங்கிய கட்டளைகளின் படி ஒன்றிய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், அமைப்புசாரா தொழிலாளர்கள் / புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பதிவுக்காக இ-ஷ்ரம் (*e-SHRAM)* வலைப்பக்கத்தை *(http://eshram.gov.in)* உருவாக்கி, *26* ஆகஸ்ட் 2021 அன்று துவக்கியது.

தமிழ்நாட்டில் 28 பிப்ரவரி 2023 நிலவரப்படி, *83,82,699* அமைப்புசாரா தொழிலாளர்கள் இ-ஷ்ரம் வலைப்பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

### *2.* தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்


இந்நாட்டின் தொழில்துறையின் ஆற்றல் மையமாகவும், மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில் இரண்டாவது மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது. இங்கு நிலவும் சுமூகமான சூழல், சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் திறமை வாய்ந்த, அறிவுத்திறன் மற்றும் அர்பணிப்புடன் பணிபுரியும் தொழிலாளர்கள் அமையப் பெற்றதன் காரணமாக பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி அலகுகளை நிறுவிட முன்னுரிமை அளிக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. சுலபமாக தொழில் துவங்க அரசால் மேற்கொள்ளப்படும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளினாலும், தொழில் முதலீடுகளை ஈர்க்க பின்பற்றப்படும் எளிதாக்கப்பட்ட வெளிப்படைத் தன்மையுடனான நடைமுறைகளினாலும் அந்நிய முதலீடுகள் அதிகளவில் ஈர்க்கப்பட்டு, தமிழ்நாட்டில் நிலையான மற்றும் தொடர்ச்சியான தொழில் வளர்ச்சி

ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் நிலவும் தொழிலக பாதுகாப்பு மற்றும் தொழில் அமைதியின் காரணமாக திறன்மிகு தொழிலாளர்கள் அதிகளவில் அமையப் பெற்றுள்ள மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதால் இங்கு பெருமளவில் தொழில் முதலீடுகள் ஈர்க்கப்படுகிறது.

இந்தியாவிலுள்ள மாநிலங்களிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே பெரும்பான்மையான மாவட்டங்களில் தொழிற் பூங்காக்கள் அமையப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் வாகனம் மற்றும் வாகனம் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், பொறியியல் தொழிற்சாலைகள், மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள், ஆயத்த ஆடைகள், நூற்பாலைகள், தோல் மற்றும் தோல் பொருட்கள், இரசாயனம், சிமெண்ட், பட்டாசு மற்றும் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகள் என பல தரப்பட்ட உற்பத்தி முறைகளை மேற்கொள்ளும் தொழிற்சாலைகள் அமையப் பெற்றுள்ளன.

இந்தியாவிலேயே பல தரப்பட்ட உற்பத்தி முறைகளை கொண்ட மாநிலங்களில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.மேலும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

**தமிழ்நாட்டில், தொழிற்சாலை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை**



தொழிலாளர்களின் பணியிடப் பாதுகாப்பே தொழிற்சாலை வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்ற காரணத்தினால், நிர்வாகத்தினர் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு வழிமுறைகளை கடைபிடிப்பதையும், தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு நடைமுறைகளை தொடர்ச்சியாக மேம்படுத்துவதையும் அரசு கட்டாயமாக்கியுள்ளது.


சுலபமாக தொழில் தொடங்கும் நடைமுறையை மேம்படுத்துவதன் மூலம் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதை ஈர்க்க, பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் வழங்கப்படும் சேவைகளுக்கான கால வரம்பினை நிர்ணயித்தல், அச்சேவைகளை இவ்வியக்கக வலைதளத்தின் வாயிலாக வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சட்டபூர்வமான

பதிவேடுகள் பராமரித்தலை எளிமையாக்கும் பொருட்டு பல்வேறு சட்டங்களின் கீழ் தனித்தனியே பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகளை ஒருங்கிணைத்து எளிதாக்கி, பல பதிவேடுகள் குறைக்கப்பட்டுள்ளன. பதிவேடுகள் மின்னணு படிவத்திலும் பராமரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய சீர்திருத்தங்களால் நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளது.

கட்டுமானத் துறையானது வேலைவாய்ப்பினை அதிகமாக உருவாக்குவதன் மூலம், மாநிலத்தின் ஒட்டுமொத்த தொழிலாளர் நலச் சட்டங்களை கட்டுமானப் பணியிடங்களில் அமலாக்கம் செய்வதோடு, கட்டுமானத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் உடல் நலனை பாதுகாக்க இந்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதிகரித்து வரும் உள்கட்டமைப்பு வளர்ச்சி காரணமாக கட்டுமானத்

துறை அதிவேக முன்னேற்றம் கண்டுள்ளதால், ஆண்டுதோறும் அதிகப்படியான கட்டுமான நிறுவனங்கள் தொழிலாளர் சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாட்டில் கட்டட மற்றும் கட்டுமான தொழிலாளர் சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கட்டுமான நிறுவனங்கள்**



## *2.1.* இயக்ககத்தின் நிர்வாக அமைப்பு

தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதார மற்றும் நல வசதிகளை உறுதிசெய்யும் நோக்கோடு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை திறம்பட அமலாக்கம் செய்து வருகிறது.

இவ்வியக்ககம் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. இவ்வியக்ககத்தில் தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு, கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவு ஆகிய இரண்டு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

### 2.1.1. தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவு

தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கம் செய்ய ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், 6 கூடுதல் இயக்குநர்கள், 31 இணை இயக்குநர்கள், 55 துணை இயக்குநர்கள், 46 உதவி இயக்குநர்களைக் கொண்டு தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு இயங்கி வருகிறது. இது மட்டுமல்லாமல், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளவும் தொழிலாளர்களின் உடல் நலனை கண்காணிக்கவும் இயக்குநர் அவர்களின் தலைமையில் ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் தொழிற்சாலைகள் சட்டம், 1948 - இன்படி சான்றளிக்கும் மருத்துவர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ள 8 உதவி அறுவை மருத்துவர்களுடன் கூடிய ஒரு மருத்துவ பிரிவு செயல்பட்டு வருகிறது.

### *2.1.2.* கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு

கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில், கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், *1996* மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கம் செய்ய ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், *2* இணை இயக்குநர்கள், *8* துணை இயக்குநர்கள் மற்றும் *16* உதவி இயக்குநர்கள் ஆகியோரைக் கொண்டு இப்பிரிவு இயங்கி வருகிறது.

### *2.2.* இவ்வியக்ககத்தால் அமலாக்கப்படும் சட்டங்கள்

### *2.2.1.* தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவு

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்கள் தொழிற்சாலைகள் சட்டம், 1948-இல் உள்ள சட்ட வரையறைகளை அமலாக்கம் செய்வதன்

மூலம் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலவசதிகளை பாதுகாத்து வருகின்றனர்.

நாட்டிலேயே தொழிலாளர் சட்டங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்டமாக உள்ள தொழிற்சாலைகள் சட்டம், *1948*-இல் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலவசதிகள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்வது, வேலை நேரம், வார விடுமுறை, வளரிளம் பருவத்தினர் மற்றும் பெண் தொழிலாளர்களின் பணி நிலைமைகள் ஆகியவற்றை முறைப்படுத்துவது தொழிற்சாலைகள் சட்டம், *1948*-இன் முக்கிய நோக்கமாகும். மேலும், அபாயகரமான தொழிற்சாலைகளிலுள்ள செயல்முறைகளினால் பெரும் விபத்து ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் அங்கு பணிபுரியும்

தொழிலாளர்களின் உடல் நலனை பாதுகாக்கும் பொருட்டும் தொழிற்சாலைகள் சட்டத்தில் கூடுதல் பாதுகாப்பு வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் சட்டம், 1948-ஐ அமலாக்கம் செய்வது மட்டுமல்லாமல் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் இதர நல வசதிகளை உறுதி செய்யும் பொருட்டு, இவ்வியக்ககத்தால் பின்வரும் இதர தொழிலாளர் நலச்சட்டங்களும் அமலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

1. ஒப்பந்தத்தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், *1970* மற்றும் தமிழ்நாடு விதிகள், 1975.
2. மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணிநிலைமைகள் முறைப்படுத்துதல்)

சட்டம் 1979, மற்றும் தமிழ்நாடு விதிகள், 1983.

3. சம்பளப்பட்டுவாடா சட்டம், 1936 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1937.

4. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1953.

5. குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1994.

6. மகப்பேறு நலச்சட்டம், 1961 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1967.

7. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள்) சட்டம் ,1958 மற்றும் விதிகள், 1959.

8. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர தகுதி வழங்கல்) சட்டம், 1981 மற்றும் விதிகள், 1981.

9. சம ஊதியச்சட்டம், 1976 மற்றும் விதிகள், 1976.

10. தமிழ்நாடு பிழைப்பூதியச் சட்டம், 1981 மற்றும் விதிகள், 1981.

11. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச்சட்டம், 1972, மற்றும் விதிகள், 1973.

12. தொழிலாளர் நலச்சட்டங்கள் (சில நிறுவனங்களுக்கு எளிமையாக்கப்பட்ட ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்) சட்டம், 1988.

13. பணிக்கொடை பட்டுவாடா சட்டம், 1972 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1973.

14. போனஸ் வழங்கும் சட்டம், 1965 மற்றும் விதிகள், *1975.*

15. உற்பத்தி, சேமிப்பு மற்றும் ஆபத்தான இரசாயனப் பொருட்கள் இறக்குமதி விதிகள், *1989.*

16. தமிழ்நாடு தொழிலக பெரும்விபத்து ஆபத்துகளை கட்டுப்படுத்தும் விதிகள், 1*994.*

### **2.2.2. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவு**

இந்த இயக்ககம், கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், *1996*-ஐ அமலாக்கம் செய்து வருகிறது.

தொழிலாளர் நலச் சட்டமான கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி

முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996, கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் நல வசதிகளை வழங்கும் நோக்கில் இயற்றப்பட்டுள்ளது.

கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் சட்ட விதிகளை சிறப்பாக அமலாக்கம் செய்யும் அவசியத்தை கருத்தில் கொண்டு, இவ்வியக்ககத்தில் கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு, உரிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைக் கொண்டு 2013-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996-ஐ அமலாக்கம் செய்வது மட்டுமல்லாமல், கட்டடம் மற்றும் இதர கட்டுமான

தொழிலாளர்களுக்கான அடிப்படை பாதுகாப்பு மற்றும் நல வசதிகளை உறுதி செய்யவும், ஒப்பந்த தொழிலாளர்கள் மற்றும் வெளிமாநில தொழிலாளர்களது பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் இவ்வியக்ககத்தால் பின்வரும் தொழிலாளர் நலச் சட்டங்களும் கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் அமலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

1. ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970 மற்றும் தமிழ்நாடு விதிகள், *1975.*

2. மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணிநிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் 1979, மற்றும் தமிழ்நாடு விதிகள், *1983.*

3. சம்பளப்பட்டுவாடா சட்டம், 1936 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1937.

4. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1953.

5. குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் தமிழ்நாடு விதிகள், *1994.*

6. மகப்பேறு நலச்சட்டம், 1961 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1*967.*

7. சம ஊதியச் சட்டம், 1976 மற்றும் விதிகள், *1976.*

8. போனஸ் வழங்கும் சட்டம், *1965* மற்றும் விதிகள், 1*975*

## 2.3. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் முக்கிய செயல்பாடுகள்

கீழ்க்கண்டவை இவ்வியக்ககத்தின் முக்கியமான செயல்பாடுகள் ஆகும்.

### 2.3.1. தொழிற்சாலைகளில் தொழிலாளர் சட்டங்கள் அமலாக்கம்

தொழிற்சாலைகளில் தொழிற்சாலைகள் சட்டம், *1948* மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களை அமலாக்கம் செய்யவும் அவற்றை உறுதி செய்யவும் காலமுறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. இடர் அளவீட்டின் அடிப்படையில், இவ்வியக்கக வலைதளம் மூலமாக தொழிற்சாலைகள் ஆய்விற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அலுவலர்களால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முறை ஆய்வுகள் மட்டுமல்லாமல், விபத்துகள் மற்றும் புகார்கள் அடிப்படையில், சிறப்பு ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர்களை முற்றிலும் அகற்றிடவும் கொத்தடிமை தொழிலாளர் முறையை கண்டறியவும், குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், ஏதேனும் தொழில்துறை தொடர்புடைய குறிப்பிட்ட பிரச்சனைகள் இவ்வியக்ககத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்படும் நேர்வில் சிறப்பு குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பிரச்சனைகளுக்கு சரியான முறையில் தீர்வு காணப்படுகிறது.

### *2.3.2.* தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுத் திட்டம்

ஆய்வுகளில் வெளிப்படைத் தன்மையை மேலும் அதிகரிக்கும் விதமாக **இடர் அளவீட்டின் அடிப்படையில் இணையவழி மூலமாக**, அலுவலர்கள் ஆய்வுக்கென தொழிற்சாலைகள் ஒதுக்கீடு செய்யும்

முறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வுகளில் வெளிப்படைத் தன்மையை ஊக்குவிக்கும் வகையில், இந்த ஆய்வு திட்டத்தில் கீழ்காணும் கொள்கைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

*(i)* ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையில் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் ஒரே சமயத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

*(ii)* ஒரே அலுவலர் ஒரே தொழிற்சாலையை இரண்டு முறை தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளக்கூடாது.

*(iii)* அனைத்து வகையான ஆய்வுகளுக்குமான ஆய்வறிக்கை ஆய்வு முடிந்த *24* மணிநேரத்திற்குள், இயக்ககத்திற்கும் மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் சமர்பிக்கப்பட வேண்டும்.

தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி முறையின் அடிப்படையிலும், அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், தொழிற்சாலைகள் **அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்** என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

***i)* அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்**

*100* தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் அபாயகரமான தொழில் முறை கொண்ட தொழிற்சாலைகளும் (தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு *87* மற்றும் விதி *95*ன் கீழ் வகைபடுத்தப்பட்டவை*)* ஊறு விளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகளும் (தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு *2 (cb)*-ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை*)* மற்றும் அபாயகரமான

இரசாயனங்கள் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள் 1989-ல் வரையறுக்கப்பட்ட அனைத்து பெருவிபத்து இடர் தரும் தொழிற்சாலைகள் ஆகியவை“ அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்” என வகைபடுத்தப்பட்டுள்ளது. அனைத்து பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளும் அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**ii) நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்**

100 தொழிலாளர்கள் வரை பணிபுரியும் பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகள் தவிர்த், அபாயகரமான தொழில் முறை கொண்ட தொழிற்சாலைகளும் (தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 87 மற்றும் விதி 95-இன் கீழ் வகைபடுத்தப்பட்டவை), ஊறு விளைவிக்கும் செயல்முறை கொண்ட

தொழிற்சாலைகளும் (தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு *2 (cb)*-இன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) மற்றும் *250* தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் அபாயகரமான தொழில் முறைகள் மற்றும் ஊறு விளைவிக்கும் செயல்முறைகள் அல்லாத தொழிற்சாலைகளும் “நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்” என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**iii) குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்**

அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் மற்றும் நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்ட தொழிற்சாலைகள் தவிர்த்து இதர அனைத்து தொழிற்சாலைகளும் “குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்” என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் வருடத்திற்கு ஒரு முறையும், நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும், குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்படும்.

### ***2.3.3.*** சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்

#### *i.* சுயசான்றிதழ் திட்டம்

அபாயகரமான தொழில்முறை மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை அல்லாத நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகளுக்கும், குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கும் சுய சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்

கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கு நேரடி ஆய்விலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் குறிப்பற்ற முறையில் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும்.

***ii.*** **எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள்**

தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு பயனளிக்கும் விதமாகவும் நடைமுறைகளை எளிதாக்கவும் அரசாணை *(*நிலை*)* எண்*.15*, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள்*.31.01.2018*, மூலம் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் *1950*-இன்

விதி *100*-இன்படி ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையினை படிவம் எண் *22*-இல் தொழிற்சாலை நிர்வாகத்தினர் சமர்ப்பிக்க வேண்டும். பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் ஆண்டறிக்கைகள் இணைய வழியாக ஒரே படிவத்தில் சமர்பிக்கப்படுவதால் பல்வேறு சட்டங்களின் கீழ் தனித்தனியாக ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

### *2.3.4.* தொழிற்சாலைகளில் அழுத்தக்கலன் செயல்பாட்டின் பாதுகாப்பினை உறுதி செய்தல்

தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தகலன்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு அவற்றை “சோதனை செய்யும் அலுவலர்களாக“ இவ்வியக்கக அலுவலர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்திய கொதிகலன்கள் சட்டத்தின் கீழ் வரும் நீராவி கொதிகலன்களைத்

தவிர்த்து, வாயு மண்டல காற்று அழுத்தத்திற்கு மேல் *(above atmospheric pressure)* செயல்படும் அனைத்து அழுத்தக்கலன்களும் இவ்வியக்கக அலுவலர்களால் சோதனை செய்யப்படுகிறது. அழுத்தக்கலன்களில் *6* மாதங்களுக்கு ஒரு முறை வெளிப்புற சோதனையும், ஆண்டுக்கு ஒரு முறை உட்புற சோதனையும் அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீரழுத்த சோதனையும் அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நுண்ணொலி சோதனையும் இவ்வியக்கக அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## ***2.3.5.*** தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

### ***2.3.5.1.*** பாதுகாப்பு பயிற்சி

தொழிற்சாலைகளில் பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுவதன் அவசியம் குறித்து தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும்,

தொழிற்சாலைகளில் விபத்துகளை தடுப்பதற்கு கடைப்பிடிக்க வேண்டிய சட்டப்படியான பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து தொழிலாளர்களுக்கு கற்பித்திடவும் கால முறைப்படி பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் இவ்வியக்கக அலுவலர்களால் தொழிற்சாலை வளாகத்திலேயே நடத்தப்படுகின்றன.

### *2.3.5.2.* பாதுகாப்பு பிரச்சாரக் குழுக்கள்

பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் மட்டுமல்லாமல், பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்களும், இவ்வியக்கக அலுவலர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் மூன்று பாதுகாப்பு பிரச்சாரக் குழுக்கள் இவ்வியக்ககத்தில் உருவாக்கப்பட்டு, இக்குழுக்கள் இரசாயனம், பட்டாசு, தோல் பதனிடும் மற்றும் வெளுத்தல் தொழிற்சாலைகள் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்கு கால முறையடிப்படையில் சென்று

அத்தொழிற்சாலைகளின் பாதுகாப்பு வழிமுறைகளை திறனாய்வு செய்து, அத்தொழிற்சாலைகளிலுள்ள அபாயங்கள் குறித்தும், அத்தொழிற்சாலைகளில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், தொழிலாளர்களுக்கு எடுத்துரைக்கின்றன.

### *2.3.6.* தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவின் இதர பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகள்

இவ்வியக்ககமானது, பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகளில் ஈடுபட்டு வரும் அரசுசாரா தன்னார்வ நிறுவனங்களான, "தேசிய பாதுகாப்பு குழுமம்", "தேசிய உற்பத்தி குழுமம்" ஆகியவற்றுடன் இணைந்து, தொழிற்சாலை நிர்வாகத்தினர், முறையான தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பாதுகாப்பு கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. இவ்வகையான பாதுகாப்பு

மேம்பாட்டு செயல்பாடுகளின் வாயிலாக தொழிலாளர்களிடையே பாதுகாப்பு கலாச்சாரம் ஏற்படுத்தப்படுகிறது.

தொழிலகப் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, தொழிலாளர்களுக்கு முறையான பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்துவது மட்டுமல்லாமல், விபத்துகள் அதிகம் நிகழக்கூடிய பட்டாசு, தீப்பெட்டி, இரசாயனம், உருக்காலை, சிமெண்ட் தொழிற்சாலை போன்ற குறிப்பிட்ட தொழிற் பிரிவுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், அதன் நிர்வாகத்தினருக்கும், அத்தொழில் சார்ந்த குறிப்பான பாதுகாப்பு பயிற்சிகள் இவ்வியக்ககத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இத்தகைய பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகள் தொழிலாளர்களிடையே நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி தமிழ்நாட்டில் விபத்துகளை குறைப்பதற்கு பெரிதும் வழிவகுத்துள்ளது.

### *2.3.7.* தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உடல் நல மேம்பாட்டு செயல்பாடுகள்

இவ்வியக்ககத்தின் கீழ் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் தொழிற்சாலைகள் சட்டம், *1948*-இன்படி "சான்றளிக்கும் மருத்துவர்கள்" என அறிவிக்கப்பட்டு, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடற்தகுதியை உறுதி செய்ய ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றனர். இரத்த அழுத்தம் காட்டும் கருவி, நுண்கதிர் காட்சிப்பெட்டி, ஸ்டெதாஸ்கோப் ஆகிய உபகரணங்கள் மருத்துவ ஆய்வுகளுக்காகவும், நுரையீரலின் செயல்பாட்டினை பரிசீலனை செய்ய ஸ்பைரோமீட்டர் சாதனமும் மருத்துவ அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### *2.3.7.1.* தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகள்

இவ்வியக்ககச் சான்றளிக்கும் மருத்துவர்கள், அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், வளரிளம் பருவ தொழிலாளர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு காலமுறைப்படி மருத்துவப் பரிசோதனை செய்து உடற்தகுதிச் சான்றிதழ் வழங்குகின்றனர். மருத்துவ பரிசோதனையில் தொழிலாளி பணி செய்ய உடற்தகுதி இல்லாத நேர்வில், குறிப்பிட்ட அப்பணியில் இருந்து விடுவிக்கப்பட்டு அதற்குப்பதிலாக வேறு இடத்தில் பணிபுரிய மருத்துவ அலுவலரால் பரிந்துரைக்கப்படுகிறது. அத்தொழிலாளியின் உடல் நிலை தொடர்ந்து மருத்துவ அலுவலரால்

கண்காணிக்கப்பட்டு, அப்பணிக்கு அவர் முழுமையான உடற்தகுதி பெற்ற பின்னரே மீண்டும் பணியமர்த்த அனுமதிக்கப்படுவார். மேலும் தொழில் வழி நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள மருத்துவ மற்றும் இதர தடுப்பு முறைகள் குறித்தும் தொழிலாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

### *2.3.7.2.* சுகாதார அளவீடு

அபாயகரமான தொழிற்முறைகளில் பணிபுரியும் தொழிலாளர்களிடையே தொழில் வழி நோய் கண்டறிவது குறித்து இவ்வியக்கக தலைமை மருத்துவ அலுவலரால் அபாயகரமான செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் சுகாதார அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய அளவீடுகளின் போது தொழிலாளர்களுடைய மருத்துவ பதிவேடுகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, அசாதாரணமான உடல்

பாதிப்புகள் காணப்படும் நேர்வுகளில், தொழிலாளர்களின் உடல்நலத்தை பாதுகாக்கும் பொருட்டு, உரிய பரிந்துரைகள் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு எடுத்துரைக்கப்படுகிறது. இது தவிர பணியிட சூழல் குறித்த அளவீடுகள் அபாயகரமான தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

### *2.3.7.3.* இரைச்சலின் அளவினை கண்காணித்தல்

தொழிற்சாலைகளில் நிலவும் அதிகப்படியான இரைச்சலால் தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய உடல் நலக் கேடுகளைத் தடுக்க, இவ்வியக்ககம் சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. ஒலி அளப்பான் மூலம் இரைச்சலை அளவிட்டு, தொழிலாளர்களை அதிகப்படியான இரைச்சலின் பாதிப்பிலிருந்து பாதுகாத்திட நடவடிக்கை எடுத்து வருகிறது. அதிக இரைச்சல் உள்ள பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பணி சுழற்சி முறையில் பணி

வழங்கப்படுகிறது. தேவைப்பட்டால் சம்பந்தப்பட்ட அரசு மருத்துவக் கல்லூரி வல்லுநர்களின் கருத்துக்கள் பெறப்படுகின்றன. ஆய்வுகளின் போது இது சம்பந்தமாக தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்படுவதுடன், தேவைப்படும் நிகழ்வுகளில் சட்ட ரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது.

### *2.3.8.* தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் முறை அகற்றுதல்

இந்த மாநிலத்தை, *2025*-ஆம் ஆண்டிற்குள் குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற அரசின் நோக்கத்தினை நிறைவேற்ற இவ்வியக்ககம் சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

*14* வயது நிரம்பாத குழந்தைகளை தொழிற்சாலைகளில் பணியமர்த்துவதை,

தொழிற்சாலைகள் சட்டம், *1948*, பிரிவு *67* மற்றும் குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 19*86* சட்டப் பிரிவு *3* தடை செய்கிறது. மேலும் இச்சட்டம், 14 வயது முடிவடைந்த ஆனால் 18 வயது முடிவடையாத வளரிளம் பருவத்தினரை அனைத்து இடர்தரும் தொழிற்சாலைகளில் பணிபுரிவதை தடை செய்கிறது மற்றும் இடர்தரும் செயல்முறை தொழில்களைத் தவிர்த்து மற்ற தொழிற்சாலைகளில் வளரிளம் பருவத்தினரின் பணிநிலைமைகளை ஒழுங்குபடுத்துகிறது.

குழந்தைத்தொழிலாளர் முறை இல்லா மாநிலமாக மாற்றும் அரசின் நோக்கத்தினை நிறைவேற்ற குழந்தைத் தொழிலாளர்களை பணியமர்த்துவதை கண்டறியவும் இடர்தரும் செயல்பாடுகளில் பணிபுரியும் வளரிளம் பருவத்தினரை கண்டறியவும் காலமுறைப்படி ஆய்வுகள்

தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு, சட்ட முரண்பாடுகளுக்கு நிர்வாகத்தினர் மீது சட்ட பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

மாநிலத்தின் செயல் திட்டத்தினை நிறைவேற்ற மாவட்ட வாரியாக சிறப்பு பணிக்குழுக்கள் அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியர் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிக்குழுவில் சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் இணை இயக்குநர்கள் உறுப்பினர் செயலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். குழு ஆய்வுகள் காலமுறைப்படி தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்துவதை தடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்றன. குழந்தைத் தொழிலாளர்களின் வயதினை உறுதி செய்யும் பொருட்டு இவ்வியக்ககத்தின் சான்றளிக்கும் மருத்துவர்களும் இக்குழு ஆய்வில் பங்கு பெறுகின்றனர்.

01.04.2022 முதல் 31.01.2023 வரை 6,238 முறை ஆய்வுகளும், 1,329 குழு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு, 15 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட காலத்தில், கொத்தடிமைத் தொழிலாளர்களை கண்டறிய 2,806 தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 11 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

குழந்தைத் தொழிலாளர்கள் முறை மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் முறையை அகற்றுதலில் ஈடுபட்டுள்ள பல்வேறு துறைகளின் பயன்பாட்டிற்காகவும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காகவும் "கொத்தடிமைத் தொழிலாளர்கள் முறை ஒழித்தல் – தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்" மற்றும் "குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் – தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்" ஆகிய இரண்டு

புத்தகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.02.2023 அன்று வெளியிடப்பட்டது.

### *2.3.9.* இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளுக்கான வழிவகைகள்

தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட உற்பத்தி பணிகளில் கையாளப்படும் மூலப்பொருட்கள், இடைநிலை பொருட்கள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் அல்லது அவற்றின் கழிவுகள் ஆகியவற்றினால் அதில் ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கும், உடல்நலத்திற்கும் ஊறு விளைவிக்கக் கூடியதாகவும் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தக் கூடியதாகவும் உள்ள தொழிற்சாலைகள், இடர்தரும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் என தொழிற்சாலைகள் சட்டம், *1948* பிரிவு *2(cb)* - இன் கீழ் வகைபடுத்தப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு *2(cb)*-இன் கீழ் முதல் அட்டவணையில் *29* செயல்முறைகள், இடர்தரும் தொழில் செயல்முறைகளாக பட்டியலிடப்பட்டுள்ளன.

இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யவும் அதனை சுற்றியுள்ள பொது மக்களை பாதுகாக்கவும் பல்வேறு சிறப்பு வழிமுறைகள் *1987* ஆண்டில் திருத்தப்பட்ட தொழிற்சாலைகள் சட்டத்தில் (தொழிற்சாலைகள் சட்டம், *1948)* பிரத்யேகமாக கொண்டு வரப்பட்டுள்ளது.

### *2.3.9.1.* பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள்

ஊறுவிளைவிக்கும் இரசாயனங்களின் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள், *1989*-இன் அட்டவணை-*3*-இல் குறிப்பிட்டுள்ள இரசாயனங்களின் அதிகபட்ச

அளவுக்கு மேல் சேமித்து மற்றும் கையாளும் தொழிற்சாலைகள் பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் என வகைபடுத்தப்பட்டுள்ளது.

அவசர காலகட்டத்தில் ஏற்படக் கூடிய நடைமுறைப் பிரச்சனைகளை சரியாக அளவீடு செய்யும் பொருட்டும் அவசர காலங்களில் நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்களது தயார் நிலையினை மதிப்பீடு செய்யவும், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களின் மேற்பார்வையில், இத்தொழிற்சாலைகளில் உள்வளாக அவசர நிலை ஆயத்த திட்ட மாதிரி ஒத்திகைகள் ஆறு மாத காலத்திற்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன.

தொழிலாளர்களால் பொதுவாக கடைபிடிக்க தவறும் முக்கிய பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் அதனால் ஏற்படக்கூடிய விபத்து அல்லது அவசர நிலை குறித்து சித்தரிக்கப்பட்டு அக வளாக அவசர

கால தயார்நிலை மற்றும் புற வளாக அவசர கால தயார் நிலை குறித்த இரண்டு தனித்தனி பாதுகாப்பு காணொலிகள் இவ்வியக்ககத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் அவை பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளின் போது அவசரகால சூழ்நிலையை சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் திரையிடப்படுகிறது.

### *2.3.9.2.* மனை மதிப்பீட்டுக் குழு

இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகள் துவக்குவதற்கு அல்லது விரிவாக்கம் செய்வதற்கு அனுமதி கோரி தொழிற்சாலை நிர்வாகத்தினரால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மீது அரசுக்கு ஆலோசனை வழங்க, தொழிற்சாலைகள் சட்டம், *1948*-இன் *(*திருத்தப்பட்ட சட்டம், *1987)* பிரிவு *41*ஏ-இன் கீழ் வரையறுக்கப்பட்டவாறு

‘மனை மதிப்பீட்டுக் குழு’ ஒன்று மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்வதோடு, பாதுகாப்பான சூழ்நிலை மற்றும் பாதுகாப்பான பணி செயல்முறைகளுடன் துவக்க நிலையிலிருந்தே இயங்குவதற்கு உரிய வழிமுறைகள் குறித்து இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு அறிவுரை வழங்குகிறது.

## ***2.4.*** **பட்டாசு தொழிற்சாலைகளில் பணியிட பாதுகாப்பினை மேம்படுத்த சிறப்பு செயல்பாடுகள்**

பட்டாசு உற்பத்தியில் நாட்டிலேயே மிகப் பெரிய மாநிலமாக விளங்கும் தமிழ்நாடு, பட்டாசு உற்பத்தியில் *90* சதவிகித பங்களிப்பினை அளித்து வருகிறது.

பட்டாசு உற்பத்தியில் கையாளப்படும் பெரும்பாலான இரசாயனங்கள், இடைப்பட்ட உற்பத்தி பொருட்கள், இறுதியாக தயாரிக்கப்படும் பட்டாசுகள்

ஆகிய அனைத்தும் மிகவும் அபாயகரமான தன்மையுடையவை என்பதால் உரிய பாதுகாப்பு வழிமுறைகள் சீரிய முறையில் கடைபிடிக்கப்படாவிடில், அவை தொழிலாளர்களின் உயிருக்கும், பாதுகாப்பிற்கும் ஊறு விளைவிப்பதாக அமைந்துவிடும். பல்வேறு அபாயகரமான இரசாயனங்கள் கையாளப்படுவதால், பட்டாசு உற்பத்தியில் ஆபத்துகள் நிறைந்துள்ள போதிலும் இவ்வியக்ககத்தின் சட்ட அமலாக்கம் மற்றும் பல்வேறு பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகள் ஆகியவற்றின் மூலம் பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகள் நிகழ்வது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

### *2.4.1.* பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வுகள்

பட்டாசு தொழிற்சாலைகள் அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் என அரசாணை (நிலை) எண்.*9*, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நாள்.*31.01.2023*

மூலம் வகைப்படுத்தப்பட்டு *6* மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. பட்டாசு தொழிற்சாலைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய, தொழிற்சாலைகள் சட்டம், *1948* மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், *1950*-இன் கீழ் வலியுறுத்தியுள்ளவாறு பாதுகாப்புத் தரங்களுக்கு இணங்க, காலமுறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாதுகாப்பு விதிமுறைகளை மீறும் பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்களின் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்கும் வகையில் கடும் முரண்பாடுகள் காணப்படும் தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி தடையாணைகள் இவ்வியக்கக அலுவலர்களால் வழங்கப்படுகின்றன.

### *2.4.2.* பட்டாசு தொழிற்சாலைகளில் சிறப்பு குழு ஆய்வுகள்

விருதுநகர் மாவட்டத்தில், தீபாவளி பண்டிகையை ஒட்டிய காலங்களில் பட்டாசு உற்பத்தி அதிகமாக இருக்கும் என்பதால் மாநிலத்தின் மற்ற பகுதியிலிருக்கும் இணை இயக்குநர்களை கொண்டு சிறப்பு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இந்த காலக்கட்டத்தில் மேற்கொள்ளப்படும் அதிகப்படியான உற்பத்தியின் காரணமாக முக்கிய பாதுகாப்பு வழிமுறகள் மீறப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும் பட்டாசு தொழிற்சாலைகளில் அபாயகரமான பொருட்களை சேமித்தல் மற்றும் கையாளுதல் ஆகியவற்றில் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுவதை கண்காணிக்கவும் இச்சிறப்பு குழுக்களால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. விதி மீறல்கள் காணப்படும் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் மீது சட்ட

ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அத்தொழிற்சாலைகளில் கண்டறியப்படும் கடும் விதி மீறல்களுக்கு, உற்பத்தி தடையாணைகள் வழங்கப்படுகின்றன.

தீபாவளி பண்டிகை காலத்தில் செயல்படும் இச்சிறப்பு குழு ஆய்வுகள் மட்டுமல்லாமல், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இவ்வியக்கக அலுவலர்கள், மாவட்ட வருவாய்த்துறை அலுவலர்களால் நடத்தப்படும் தினசரி குழு ஆய்வுகளில் இணைந்து பட்டாசு தொழிற்சாலைகளில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு அம்சங்கள் குறித்து கண்காணித்து வருகின்றனர்.

### *2.4.3.* பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகள்

பட்டாசு தொழிற்சாலைகள் அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களை பணியமர்த்தி செயல்படும் உற்பத்தி பிரிவு என்பதாலும்,

பெரும்பாலான செயல் முறைகள் முழுமையாக தொழிலாளர்களை சார்ந்துள்ளதாலும் அதிக விபத்துகள் நிகழ வாய்ப்புள்ள தொழிற்சாலைகள் ஆகும். பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெரும்பாலான தொழிலாளர்கள் இரசாயனங்களை பாதுகாப்பாக கையாளும் முறை மற்றும் அபாயகரமான இரசாயனங்களின் தன்மைகள் குறித்து முழுமையாக அறியாதவர்களாக இருப்பதே விபத்துகள் நிகழ்வதற்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது. எனவே, விபத்துகளை குறைக்கும் பொருட்டு, பாதுகாப்பு வழிமுறைகள் கடைபிடிப்பதன் அவசியம் குறித்து தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்திட பல்வேறு பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகள் இவ்வியக்ககத்தின் மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

### *2.4.3.1.* பட்டாசு தொழிற்சாலைகளுக்கான பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொழிற்சாலை வளாகத்திலேயே பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகளில் பட்டாசு உற்பத்தியின் போது தொழிலாளர்களால் கடைபிடிக்கப்பட வேண்டிய முக்கிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து, இவ்வியக்கக அலுவலர்களால் எடுத்துரைக்கப்படுகிறது.

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு தனித்தனியாக பாதுகாப்பு காணொளிகள் இவ்வியக்ககத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றில் தொழிலாளர்கள், நிர்வாகத்தினர் மற்றும்

விற்பனையாளர்களது பொறுப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து வசதிகளுடன் கூடிய பிரத்தியேக நடமாடும் பிரச்சார வாகனம் மூலம் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகளில் பாதுகாப்பு காணொளிகள் திரையிடப்பட்டு தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது.

மேற்கூறிய நிகழ்ச்சிகள் தவிர, மேலும் ஒரு பாதுகாப்பு பிரச்சார குழு, மதுரை இணை இயக்குநர் (பதிவு) தலைமையில் அமைக்கப்பட்டு, பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு விபத்துக்களை குறைக்கும் பொருட்டு பாதுகாப்பு குறித்த சிறப்பு பயிற்சிகளை அளித்து வருகிறது.

### ***2.4.3.2.*** பட்டாசு தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஃபோர்மேன்கள் / மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பட்டாசு தயாரிப்பின் போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிவகாசியில் பிரத்தியேகமாக ஒரு பாதுகாப்பு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சியும், ஃபோர்மேன் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகியோர்களுக்கு ஒரு மாத பயிற்சி வகுப்பும் நடத்தப்படுகின்றன. இம்மையத்தில் பின்வரும் பாதுகாப்பு அம்சங்கள் குறித்த சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- இரசாயனங்களின் தன்மை
- இரசாயனங்களை கையாளுதல்
- இரசாயனங்கள் சேமித்தல்

- இரசாயனங்களின் வேதி வினை
- பட்டாசு பொருட்களை கையாளுதல் மற்றும் சேமித்தல் தொடர்பான பாதுகாப்பான செயல்முறைகள்

மேலும், இப்பயிற்சி மையமானது வருவாய் துறை அலுவலர்கள், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோருக்கு பட்டாசு தொழிற்சாலைகளுக்கான பல்வேறு பாதுகாப்பு சட்ட வழிமுறைகள் குறித்து பயிற்சி அளித்து வருகிறது.

### *2.4.4.* பட்டாசு தொழிற்சாலைகளுக்கான நடமாடும் கண்காணிப்பு குழு

விருதுநகர் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் பட்டாசு தொழிற்சாலைகள் இயங்கி வருவதால், பட்டாசு தொழிற்சாலைகளை ஆய்வு செய்யும் பொருட்டு தொழிலகப் பாதுகாப்பு மற்றும்

சுகாதார கூடுதல் இயக்குநர் தலைமையில், பிரத்தியேகமாக நடமாடும் கண்காணிப்பு குழு உருவாக்கப்பட்டுள்ளது. பட்டாசு தொழிற்சாலைகளில் கூடுதல் முனைப்புடன் பாதுகாப்பு வழிமுறைகளை அமலாக்கம் செய்யவும், பாதுகாப்பு பணிமுறைகளை உறுதி செய்யவும் இக்குழுவானது உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு, தொழிலாளர்களது பணி பாதுகாப்பை உறுதி செய்ய தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதோடு, அங்குள்ள தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு பாதுகாப்புடன் பணிபுரியும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைக்கிறது.

### *2.4.5.* பட்டாசு தொழிற்சாலைகளுக்காக விருதுநகர் மாவட்டத்தில் செயல்படும் மாவட்ட அளவிலான பாதுகாப்பு குழு

பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துக்களை குறைக்கும் விதமாக, பட்டாசு தொழிற்சாலைகளில்

கடைபிடிக்கப்படும் பாதுகாப்பு வழிமுறைகளை காலமுறைப்படி திறனாய்வு செய்ய, விருதுநகர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான பாதுகாப்பு குழு *2020*-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் இக்குழுவின் உறுப்பினர் ஒருங்கிணைப்பாளராக உள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் இக்குழு இதுவரை *12* கூட்டங்களை நடத்தியுள்ளது. மாவட்ட அளவிலான பாதுகாப்பு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பின்வரும் கூடுதல் வழிமுறைகள் பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளை தடுக்க எடுக்கப்பட்டு வருகிறது.

1. இவ்வியக்கக அலுவலர்கள், வருவாய்த் துறை, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை ஆகிய அரசுத் துறைகளை உள்ளடக்கிய சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு

இக்குழுக்கள், தொழிற்சாலைகளில் ஆண்டு முழுவதும் திடீர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன.

2. கிராமங்களில் சட்ட விரோதமாக பட்டாசு தயாரிக்கப்படுவதை தடுப்பதற்கு குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. “குழந்தைத் தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்படவில்லை” என்ற வாசகம், அனைத்து பட்டாசுப் பெட்டிகளின் மீது அச்சடிக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

4. பல்வேறு அரசு துறைகளால் பட்டாசு தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்யப்படும் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் பாதுகாப்பு செயல்முறைகளை பட்டாசு உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்களால் கடைபிடிக்கப்பட வேண்டியது குறித்து விழிப்புணர்வு

ஏற்படுத்துவதற்கு *"PYRO"* புத்தகம் வெளியிடப்பட்டது.

5. சிவகாசி பயிற்சி மையத்தில் வழங்கப்படும் பாதுகாப்பு பயிற்சியானது, வருவாய்த் துறை மற்றும் காவல் துறை அலுவலர்களுக்கும், இரசாயனங்கள் கலக்குதல் மற்றும் நிரப்புதல் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும், பட்டாசு தொழிற்சாலை வேலையளிப்போர் / உரிமையாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. மேலும், மாவட்ட ஆட்சியர் உரிமம் பெற்ற பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்களுக்கும் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

6. பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களையும் வருங்கால வைப்பு நிதி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் பதிவு செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 2.4.6. ஆய்வு முறையில் திருத்தம்

பட்டாசு தயாரிப்பில் உள்ள அபாயகரமான தன்மையை கருத்தில் கொண்டும், இதர தொழிற்சலைகளில் ஏற்பட்ட மொத்த விபத்துகளுடன் ஒப்பிடும் போது பட்டாசு தொழிற்சாலைகளில் அதிகமான விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வு முறையினை அதிகரிக்கும் வகையில் திருத்தங்களை மேற்கொண்டு அரசு ஆணையிட்டுள்ளது.

அதன்படி, அனைத்து பட்டாசு தொழிற்சாலைகளும் அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைபடுத்தப்பட்டு, ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## *2.4.7.* பட்டாசு தொழிற்சாலைகளுக்கான தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்

மாண்புமிகு உச்சநீதிமன்ற ஆணையின்படி, தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்தில் மரணமடையும் தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு நிவாரணமாக ரூ.*50,000/-* வழங்க வகை செய்யும் புதிய தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டமானது தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான பிரீமியத் தொகை, பல்வேறு காப்பீட்டு நிறுவனங்கள், பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் ஆகியோருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் பிரீமியம் செலுத்த வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பு என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. பணியாளர் இழப்பீட்டு சட்டம் / தொழிலாளர் அரசு ஈட்டுறுதி

திட்டம் *(E.S.I Scheme)* கீழ் வழங்கப்படும் இழப்பீடு / நிவாரணங்கள் மட்டுமல்லாமல் இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணமானது கூடுதலாக அளிக்கப்படுகிறது.

### *2.4.8.* தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியம்

பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு பல்வேறு நல வசதிகளை வழங்கும் பொருட்டு, **தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியம்** என்ற பெயரில் பிரத்யேகமான நல வாரியம் ஒன்று தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், *1982*, பிரிவு *6(1)*–இன் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இந்நலவாரியத்திற்கு ரூபாய் *5.02* கோடி நிதியமாக *(Corpus fund)*

பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தினரால் பங்களிப்பாக அளிக்கப்பட்டுள்ளது.

### *2.4.9.* பட்டாசு தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள்

### *2.4.9.1.* பட்டாசு தொழிற்சாலைகளுக்கான பாதுகாப்பு விழிப்புணர்வு

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் செயலாளர் மற்றும் டாக்டர் திரு.*V.*திருப்புகழ், இ.ஆ.ப. (ஓய்வு), ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி விருதுநகர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் *31.05.2022* அன்று பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளை தடுக்கும் முறைகள்" என்ற தலைப்பின்கீழ் ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

### ***2.4.9.2.*** **பட்டாசு தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து அரசு தலைமை செயலர் அவர்களின் திறனாய்வு**

"விருதுநகர் மாவட்டத்திலுள்ள பட்டாசு தொழிற்சாலைகளில் நிகழும் விபத்துக்களை தடுப்பதற்கான செயல் திட்டம்" குறித்த திறனாய்வு கூட்டம் *28.09.2022* அன்று, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துக்களை தடுப்பதற்கான முக்கிய குறிப்புகள், பட்டாசு தொழிற்சாலை தொழிலாளர்களது பாதுகாப்பு, உடல் நலம் மற்றும்

நல வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

### *2.4.9.3.* விருதுநகரில் பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம்

விருதுநகர் மாவட்டத்தில், பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு குறித்து கருத்தரங்கம், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோரது தலைமையில் 12.12.2022 அன்று நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் "**தொழிலக பாதுகாப்பு - தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்**" என்ற தலைப்பில் ஒரு கையேடு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்களால் வெளியிடப்பட்டது. பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் கடைபிடிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு

வழிமுறைகளின் முக்கியத்துவம் குறித்தும் பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்கள் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளின் பங்கு மற்றும் பொறுப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

### *2.4.9.4.* பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சிகள்

பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் விபத்துக்களை குறைக்க, மேலும் ஒரு முன்னெடுப்பாக, பட்டாசு உற்பத்தியில் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு, சிறப்பு பாதுகாப்பு பயிற்சி நிகழ்ச்சிகளை விருதுநகர் மாவட்ட பட்டாசு தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரூ.25 லட்சம் செலவில் நடத்த அரசு ஆணையிட்டது. இதுவரை 3 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 300 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## ***2.5.*** **தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம்**

### ***2.5.1.*** **மாநில பாதுகாப்பு விருதுகள்**

தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைளை மேற்கொள்ளும் நிர்வாகத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டும் அவர்களின் முயற்சிகளை அங்கீகரித்து விபத்து நிகழ்வுகளை குறைக்கும் நிர்வாகத்தினருக்கு மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் *10* வெவ்வேறு வகை உற்பத்தி முறைகளுக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது. தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மூன்று வகைப்பாடு தொழிற்சாலைகளுக்கு மூன்று வெவ்வேறு திட்டத்தின் கீழ் *90* முதல் மற்றும் இரண்டாம் பரிசுகள் வெள்ளி கேடயங்களாக

வழங்கப்படுகிறது. மூன்றாம் பரிசு சான்றிதழாக தொழிற்சாலை நிர்வாகத்திற்கு வழங்கப்படுகிறது.

### *2.5.2.* உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்

தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் தொழிற்சாலைகளில் உற்பத்தி திறனை உயர்த்துதல், பணி சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் ஆகியவை குறித்து பயன்மிக்க கருத்துகள் தரும் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் "தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்" வழங்கப்பட்டு வருகிறது. விருதுகளை தேர்வு செய்ய அமைக்கப்பட்ட குழு தொழிலாளர்களால் வழங்கப்பட்ட சிறந்த ஆலோசனைகளுக்கு ஏற்ப ரொக்க பரிசுகள் வழங்கப்படுகிறது. ரூ.5000/- ரொக்கமாக 5 முதல் பரிசுகளும், ரூ.3000/- ரொக்கமாக 10 இரண்டாம் பரிசுகளும், ரூ.1000/- ரொக்கமாக 28 மூன்றாம் பரிசுகளும் வழங்கப்படுகிறது.

## ***2.6.*** கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகள்

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், *1996* மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களை சிறப்பாக அமலாக்கம் செய்வதன் மூலம் கட்டுமான தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலவசதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதே கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவின் முதன்மை நோக்கமாகும். சட்ட அமலாக்க நடவடிக்கைகள் தவிர, அலுவலர்களால் கட்டுமான தொழிலாளர்களுக்கிடையே பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த காலமுறைப்படி பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

### *2.6.1.* கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கப்படுத்துதல்

கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்க பிரிவு அலுவலர்களால் காலமுறை தோறும் கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விதிமுறைகளை மீறி செயல்படும் கட்டுமான நிறுவனங்களின் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முறை ஆய்வுகளை தவிர பதிவு பெறாத கட்டுமானங்களை இச்சட்ட வரையறைக்குள் அதிக எண்ணிக்கையில் பதிவு செய்யவும் கட்டுமான தொழிலாளர்களது அடிப்படை நல வசதிகளை கண்காணிக்கவும் குழு ஆய்வுகள் முறைப்படி நடத்தப்படுகின்றன.

### *2.6.2.* கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வு திட்டம்

கட்டடம் மற்றும் இதர கட்டுமானங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் இடர் அளவீட்டு திட்டத்தின் கீழ் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் கட்டுமானங்களின் தன்மையின் அடிப்படையிலும் கட்டுமான பணியிடங்கள் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

*i.* **அதிக அபாயகரமான கட்டுமானங்கள்**

கட்டுமான பணியிடங்களில் 500 மற்றும் *500*-க்கு மேல் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள், தொழிலாளர்களின் எண்ணிக்கையினை

கணக்கில் கொள்ளாது ஐந்து மற்றும் அதற்கு மேற்பட்ட தளங்கள் கொண்ட கட்டுமானங்கள், இரயில்வே கட்டுமானங்கள், மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கட்டுமான பணிகள், அணை கட்டுமானம் போன்ற அபாயங்கள் நிறைந்த அனைத்து கட்டுமானங்களும் அதிக அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளது.

*ii.* **நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள்**

*50* தொழிலாளர்களுக்கு மேல் *500* தொழிலாளர்களுக்குள் பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள் மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கையினை கணக்கில் எடுக்காமல் *2* முதல் *5* தளங்களுக்கு குறைவான அனைத்து கட்டுமானங்கள் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளது.

### *iii.* குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள்

அதிக அபாயகரமான கட்டுமானங்கள் மற்றும் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்ட கட்டுமானங்களைத் தவிர மற்ற அனைத்து கட்டுமானங்களும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளது.

அதிக அபாயகரமான கட்டுமானங்கள் குறிப்பற்ற முறையில் வருடத்திற்கு ஒரு முறையும், நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

### *2.6.3.* சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்

#### *2.6.3.1.* சுய சான்றிதழ் திட்டம்

"சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்" பின்வரும் கட்டட மற்றும் இதர கட்டுமான நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அ. நடுத்தர அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள்

ஆ. குறைந்த அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள்

சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான கட்டுமான நிறுவனங்களுக்கு நேரடி ஆய்விலிருந்து விலக்களிக்கப்படும். மேற்படி திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான கட்டுமான

நிறுவனங்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை குறிப்பற்ற முறையில் ஆய்வு செய்யப்படும்.

### *2.6.4.* கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி

கட்டுமான சட்ட அமலாக்கம் மட்டுமல்லாமல் இப்பிரிவு அலுவலர்கள் கட்டுமான பணியில் பாதுகாப்பினை மேம்படுத்தி விபத்தினை குறைக்க கட்டுமான பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகளை கட்டுமான பணியிடங்களிலேயே நடத்தி வருகின்றனர்.

கட்டுமான துறையானது அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைச் சார்ந்தது என்பதால், விபத்துகள் நிகழும் அபாயங்களை உள்ளடக்கிய கட்டுமானங்களான பலதரப்பட்ட

கட்டமைப்புகள் கொண்ட பல மாடி கட்டடங்கள், சாலைகள், பாலங்கள், நிலத்தடி கழிவுநீர் கட்டுமானங்கள், சுரங்கங்கள் ஆகியவற்றை கொண்டதாக உள்ளது. பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து அதிகமான விழிப்புணர்வு இல்லாத வெளி மாநில தொழிலாளர்களை அதிகளவில் பணியமர்த்தும் இடங்களாக கட்டுமான பணியிடங்கள் இருப்பதாலும், கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ள இத்தொழிலாளர்களுக்கு அவர்களது பணியிடங்களிலேயே அவர்களது தாய்மொழியிலேயே பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது.

அதிக உயரங்களில் வேலை செய்தல் மற்றும் மின்சார பாதுகாப்பு குறித்த பாதுகாப்பு காணொளிகள் தமிழ் மற்றும் இந்தி மொழிகளில் இயக்ககத்தால் உருவாக்கப்பட்டு, பாதுகாப்பு பயிற்சிகளின் போது

தொழிலாளர்களுக்கு திரையிட்டுக் காண்பிக்கப்படுகிறது.

கட்டுமான பணியிடங்களில் விபத்துக்களை மேலும் குறைக்கும் பொருட்டு, கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் கனிமச் சுரங்க தொழிலாளர்களுக்கென பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சிகளை வழங்கிட அரசு ரூபாய் 50 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை 96 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் இவ்வியக்கக அலுவலர்களால் நடத்தப்பட்டு, 12,908 கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் 283 கனிமச் சுரங்க தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## 2.7. இவ்வியக்ககத்தின் பிற செயல்பாடுகள்

### 2.7.1. வெளிமாநில தொழிலாளர்களின் விவரங்களை வலைதளத்தில் பதிவு செய்தல்

தேவைப்படும் நேர்வுகளில் உபயோகப்படுத்திக் கொள்ள தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும் வெளிமாநில தொழிலாளர்களின் தரவுகளை சேகரித்து ஒருங்கிணைக்கும் பணியில் இவ்வியக்கக அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றனர். வெளிமாநில தொழிலாளர்களின் அனைத்து விவரங்களும் இதற்கென உருவாக்கப்பட்ட ***https://tn.labour.gov.in/ism*** என்ற பிரத்தியேக வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை, தொழிற்சாலைகளில் பணிபுரியும் 2,38,539 வெளிமாநில தொழிலாளர்கள் மற்றும் கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும் 63,239 வெளிமாநில தொழிலாளர்களின்

விவரங்களும் மேற்படி வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

### *2.7.2.* தமிழ்நாட்டில் எளிமையாக்கப்பட்ட தொழில் தொடங்கும் முனைப்பில் மேம்பாடு

தொழில் முனைவோருக்கு சுலபமாக தொழில் தொடங்கும் வசதிகளை *(Ease of Doing Business)* வழங்கும் பொருட்டு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் உருவாக்கப்பட்டுள்ள வலைதளத்தின் மூலம் பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஒப்புதல்கள் இணையதளம் வழியாகவே கட்டணம் செலுத்தி இவ்வியக்கக அலுவலர்களின் மின்கையொப்பத்துடன் *(Digital Signature)* பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வியக்ககத்தின் கீழ்கண்ட சேவைகள் இணைய வழியாக https://dish.tn.gov.in என்ற வலைதளத்தின் மூலம் பெற இயலும்.

- தொழிற்சாலைகள் சட்டம், *1948*-இன் கீழ் உரிமம் வழங்குதல் மற்றும் உரிமம் புதுப்பித்தல்
- தொழிற்சாலைகள் சட்டம், *1948*-இன் கீழ் வரைபடங்கள் ஒப்புதல் அளித்தல்.
- ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், *1970*-இன் கீழ் பதிவுச்சான்று வழங்குதல்.
- ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், *1970*-இன் கீழ் உரிமம் வழங்குதல் மற்றும் உரிமம் புதுப்பித்தல்.
- மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்)

சட்டம், *1979*-இன் கீழ் பதிவுச்சான்று வழங்குதல்.

- ❖ மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், *1979*-இன் கீழ் உரிமம் வழங்குதல் மற்றும் உரிமம் புதுப்பித்தல்.

- ❖ தொழிற்சாலைகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்தல்.

- ❖ கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணிமுறைப்படுத்துதல் மற்றும் பணிநிலைமைகள்) சட்டம், *1996*-இன் கீழ் கட்டுமான நிறுவனங்களுக்கு பதிவுச் சான்று வழங்குதல்.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் 2021-ஆம் ஆண்டு முதல் தானாகவே உரிமங்கள் புதுப்பிக்கப்படுகிறது. நிர்வாகத்தினர் இவ்வியக்கக வலைதளத்தின் வாயிலாக உரிய உரிம கட்டணம் செலுத்தி ஒப்புதல் வழங்கும் அலுவலர்களுடனான நேரடி தொடர்பு இன்றி உரிமத்தினை தானாகவே பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### *2.7.2.1.* இவ்வியக்கக இணைய தளத்தில் மாற்றம் மற்றும் மேம்பாடு

இவ்வியக்ககத்தின் இணைய தளத்தினை மாற்றம் மற்றும் மேம்படுத்துவதற்காக அரசால் ரூ.1.73 கோடி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## ***2.8.*** **இவ்வியக்ககத்தின் *01.04.2022* முதல் *31.01.2023* வரையிலான செயல்பாட்டு புள்ளி விவரங்கள்**

### ***2.8.1.*** **தொழிற்சாலை சட்ட அமலாக்க பிரிவின் செயல்பாடுகள்**

#### ***2.8.1.1.*** **பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் விவரங்கள்**

தமிழ்நாட்டில், *31.01.2023* அன்றுள்ளவாறு தொழிற்சாலைகள் சட்டம், 194*8*-இன் கீழ் *49,325* தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு *25,19,796* தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். *01.04.2022* முதல் *31.01.2023* வரை *1,846* தொழிற்சாலைகள் புதிதாக இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### *2.8.1.2.* பல்வேறு தொழிலாளர் சட்டங்கள் தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்யப்பட்ட விவரம்

01.04.2022 முதல் 31.01.2023 வரையிலான காலகட்டத்தில், தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது கண்டறியப்பட்ட பல்வேறு வகையான விதிமீறல்களுக்காக மொத்தம் *1,740* வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களால் ரூ.*2,88,64,750/-* அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. சட்ட வாரியான அமலாக்க விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | சட்டம் | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | குற்றம் நிரூபணம் செய்யப்பட்ட வழக்குகள் | அபராத தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| *1* | தொழிற்சாலைகள் சட்டம், *1948* | *1,459* | *1,170* | *2,76,86,250* |
| *2* | சம்பளப்பட்டுவாடா சட்டம், *1936* | *30* | *22* | *1,01,000* |

| வ. எண் | சட்டம் | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | குற்றம் நிரூபணம் செய்யப்பட்ட வழக்குகள் | அபராத தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 3 | தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள்) சட்டம், 1958 | 20 | 38 | 98,000 |
| 4 | குழந்தை மற்றும் வளரிளம் பருவத்தினர் தொழிலாளர் சட்டம் (தடுத்தல் மற்றும் முறைபடுத்துதல்), 1986 | 19 | 24 | 4,22,000 |
| 5 | தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர தகுதி வழங்கல்) சட்டம், 1981 | 10 | 12 | 39,000 |
| 6 | ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970 | 37 | 57 | 1,30,250 |
| 7 | தொழிலாளர் நலச்சட்டங்கள் (சில நிறுவனங்களுக்கு எளிமையாக்கப் பட்ட ஆண்டறிக்கைகள் | 91 | 46 | 2,68,750 |

| வ. எண் | சட்டம் | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | குற்றம் நிரூபணம் செய்யப்பட்ட வழக்குகள் | அபராத தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| | சமர்ப்பித்தல் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்) சட்டம், 1988. | | | |
| 8 | குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 | 23 | 28 | 28,500 |
| 9 | மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர்கள் (வேலை முறைபடுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979. | 45 | 32 | 76,000 |
| 10 | தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972, | 6 | 15 | 15,000 |
| | **மொத்தம்** | 1,740 | 1,444 | 2,88,64,750 |

### *2.8.1.3.* தொழிற்சாலைகளில் ஆய்வுகள்

தொழிற்சாலைகளில் 01.04.2022 முதல் 31.01.2023 உடன் முடிவடைந்த காலத்தில்,

6,238 முறை ஆய்வுகளும், 115 சோதனை ஆய்வுகளும், 2,933 குழு ஆய்வுகளும், 51 திடீர் ஆய்வுகளும், 4,247 பதிவு செய்யப்படாத தொழிற்சாலை ஆய்வுகளும், 35 விடுமுறை ஆய்வுகளும், 2,939 சிறப்பு ஆய்வுகளும், 391 பிற ஆய்வுகளும் மொத்தமாக 16,949 ஆய்வுகள் தொழிற்சாலைகள் பிரிவு அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2.8.1.4. தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு (பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரம்)**

01.04.2022 முதல் 31.01.2023 வரையிலான காலத்தில் 275 பயிற்சி வகுப்புகள் தொழிற்சாலை வளாகத்தில் நடத்தப்பட்டு 12,324 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இதே காலகட்டத்தில், பாதுகாப்பு பிரச்சாரக் குழுவினால் பட்டாசு தொழிற்சாலைகளில்

46 முகாம்களும், இரசாயனத் தொழிற்சாலைகளில் 9 முகாம்களும், ஆயத்த ஆடை உற்பத்தி மேற்கொள்ளும் தொழிற்சாலைகளில் 25 முகாம்களும், வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளில் 15 முகாம்களும் நடத்தப்பட்டு மொத்தம் 95 பாதுகாப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 6,450 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.8.1.5. பெரும் விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள்

31.01.2023 அன்றுள்ளவாறு, தமிழ்நாட்டில் 174 தொழிற்சாலைகள் பெரும் விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் எனக் கண்டறியப்பட்டுள்ளன.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களின் மேற்பார்வையில், 01.04.2022 முதல் 31.01.2023 வரையிலான காலகட்டத்தில் அவசரகால ஆயத்த நிலையினை மதிப்பீடு செய்ய 106 உள்வளாக அவசரகால மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன.

### *2.8.1.6.* பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வுகள்

*01.04.2022* முதல் *31.01.2023* உடன் முடிவடைந்த காலத்தில், *781* பட்டாசு தொழிற்சாலைகயில் முறை ஆய்வு செய்யப்பட்டு, பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினரின் விதிமீறல்களுக்கு எதிராக *496* வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.*42,34,000/*-ம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில், நடமாடும் கண்காணிப்பு குழுவால் *253* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, *44* வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இதே காலகட்டத்தில் *01.04.2022* முதல் *31.01.2023* வரை தீபாவளி பண்டிகைகளின் போது பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பாக இயங்குவதை உறுதி செய்ய சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு, *261* பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

### ***2.8.1.7.*** பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கான தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்

*01.04.2022* முதல் *31.01.2023* வரையிலான காலகட்டத்தில் மரணமடைந்த ஐந்து தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.*2,50,000/-* இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

### ***2.8.2.*** ***01.04.2022*** முதல் ***31.01.2023*** வரையிலான காலத்தில் மருத்துவ பிரிவின் செயல்பாடுகள்

### ***2.8.2.1.*** தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் மருத்துவ பரிசோதனை

**அ. இக்காலகட்டத்தில் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்**

*01.04.2022* முதல் *31.01.2023* வரையிலான காலகட்டத்தில், மருத்துவ அலுவலர்கள்,

அபாயகரமான மற்றும் இடர்தரும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 1,58,529 தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை சான்றிதழ், உணவக தொழிலாளர்களுக்கு 17,808 மருத்துவ சான்றிதழ், 15,250 உடற்தகுதிச் சான்றிதழ்கள் வளரின பருவத்தினருக்கும் வழங்கியுள்ளனர்.

உடல் நல குறைவால் பணி மேற்கொள்ள உடற்தகுதியில்லாத தொழிலாளர்களுக்கு மாற்றுப் பணி வழங்க பரிந்துரைக்கப்படுகிறது. பணி மேற்கொள்ள தகுதியானவரென்று அறிந்த பிறகே அவர்கள் பணிபுரிய அனுமதிக்கப்படுகின்றனர்.

### 2.8.2.2. சுகாதார அளவீடு

01.04.2022 முதல் 31.01.2023 வரையிலான காலகட்டத்தில், இவ்வியக்கக தலைமை மருத்துவ அலுவலரால் காற்றின் தன்மை மற்றும் ஒலி அளவீட்டினை கண்காணிக்க 8 சுகாதார அளவீடுகள்

இடர்தரும் செயல்முறை தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்கண்ட அளவீடுகளில் தொழிலாளர்களுக்கிடையே பரவலாக தொழில்வழி நோய் இருப்பது ஏதும் கண்டறியப்படவில்லை.

**_2.8.3._ 01.04.2022 முதல் 31.*01.2023* வரையிலான காலத்தில், கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகள்**

**_2.8.3.1._ பதிவு செய்யப்பட்ட கட்டுமான பணியிடங்களின் விவரங்கள்**

31.01.2023 அன்றைய நிலையில், *15,803* கட்டுமான நிறுவனங்கள் கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் *1996*-இன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

*01.04.2022* முதல் *31.01.2023* உடன் முடிவடைந்த காலத்தில், *584* கட்டுமான நிறுவனங்கள்

மேற்காணும் சட்டத்தின் கீழ் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன. *31.01.2023* அன்றைய நிலையில் *3,451* கட்டுமான நிறுவனங்களில் *4,36,883* தொழிலாளர்களை பணியமர்த்தி கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ***2.8.3.2.*** **கட்டட மற்றும் இதர கட்டுமானப் பணிகளில் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் அமலாக்கம்**

*01.04.2022* முதல் *31.01.2023* வரை கட்டுமானப் பணியிடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது சட்டவிதிகளை மீறி செயல்பட்ட கட்டுமான நிர்வாகத்தின் மீது *230* வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ரூ.*3,87,000/-* அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. சட்டவாரியான அமலாக்க

விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **சட்டம்** | **பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை** | **குற்றம் நிரூபணம் செய்யப்பட்ட வழக்குகள்** | **அபராத தொகை (ரூபாய்)** |
|---|---|---|---|---|
| *1* | கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், *1996* | *178* | *95* | *3,59,000* |
| *2* | ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970 | *23* | *12* | *12,000* |
| *3* | மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர்கள் (வேலை முறைபடுத்துதல் மற்றும் பணிநிலைமைகள்) சட்டம், *1979.* | *29* | *14* | *16,000* |
| | **மொத்தம்** | ***230*** | ***121*** | ***3,87,000*** |

**2.8.3.3. கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்**

01.04.2022 முதல் 31.01.2023 வரையிலான காலகட்டத்தில், இவ்வியக்கக கட்டட மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்கப் பிரிவு அலுவலர்களால் கட்டுமானப் பணியிடங்களில் 1,201 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2.8.3.4. கட்டுமானப் பணியிடங்களில் நடத்தப்பட்ட பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள்**

01.04.2022 முதல் 31.01.2023 உடன் முடிவடைந்த காலத்தில், 78 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் கட்டுமானப் பணியிடங்களில் நடத்தப்பட்டு 7,656 கட்டுமான தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**2.9. பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தினை மேம்படுத்த இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கைகள்**

**2.9.1. கழிவு நீர்த் தொட்டி சுத்திகரிப்பின் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் / செயல்முறைகள் குறித்த குறும்படம் தயாரித்தல்**

“கழிவு நீர் தொட்டி சுத்திகரிப்பின்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் / செயல்முறைகள்“ குறித்த குறும்படம் இவ்வியக்ககத்தால் தயாரிக்கப்பட்டு *11.05.2022* அன்று சென்னையில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

### *2.9.2.* ஜவுளி ஆலைகளில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பின் சிறப்பு

ஜவுளி ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கென **"ஜவுளி ஆலைகளில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பின் சிறப்பு"** என்ற தலைப்பில் பிரத்தியேகமான கருத்தரங்கம் திண்டுக்கல்லில் *27.05.2022* அன்று தேசிய பாதுகாப்பு குழுமத்துடன் சேர்ந்து நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில், *240* பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### *2.9.3.* ஓசூரில் "விபத்து தடுப்பு நோக்கிய பணி" என்ற தலைப்பிலான கருத்தரங்கம்

*09.07.2022* அன்று ஓசூரில், தேசிய பாதுகாப்பு குழுமமும், இவ்வியக்ககமும் ஒருங்கிணைந்து நடத்திய "விபத்து தடுப்பு நோக்கிய பணி" என்ற தலைப்பிலான கருத்தரங்கில், கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களைச் சேர்ந்த

283 தொழிற்சாலைகளின் நிர்வாகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### **2.9.4. தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில், தொழிற் கூட்டமைப்புகள் / அரசு பொதுத்துறை நிர்வாகத்தினருக்காக 12.09.2022 அன்று நடைபெற்ற பணியிட பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம்**

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களது தலைமையில், 12.09.2022 அன்று சென்னையில் நடைபெற்ற தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில் பாதுகாப்பான பணியிடம் என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இவ்வியக்ககத்தால் பாதுகாப்பு அம்சங்களை நடைமுறைபடுத்துவதில் உள்ள பல்வேறு இடர்பாடுகள் குறித்து தொழிற்சாலை மற்றும் கட்டுமான நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு தொழிற்சாலை சங்க

உறுப்பினர்களுடன் விவாதிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், *105* முக்கிய நபர்கள் மற்றும் பல்வேறு தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான சங்க பிரதிநிதிகள், பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### *2.9.5.* எண்ணெய் மற்றும் எரிவாயு தொழிற்சாலைகளில் சட்ட செயலாக்கம் மற்றும் பாதுகாப்பு கருத்தரங்கம்

எண்ணெய் மற்றும் எரிவாயு தொழிற்சாலைகளில் சட்ட செயலாக்கம் மற்றும் பாதுகாப்பு என்ற கருத்தரங்கம், எண்ணெய் மற்றும் எரிவாயு தொழிலக பிரிவு உயர் அலுவலர்களுக்கு பல்வேறு தொழிலாளர் சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள சட்ட வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த 13.03.2023 அன்று அரசு கூடுதல் தலைமை செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அவர்களின்

தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு எண்ணெய் மற்றும் எரிவாயு தொழிற்சாலைகளிலிருந்து 122 நிர்வாக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இப்பிரிவுகளைச் சார்ந்த நிர்வாகிகள் பயனடையும் வகையில், "எண்ணெய் மற்றும் எரிவாயு தொழிற்சாலைகளில் சட்ட அமலாக்கம் மற்றும் பாதுகாப்பு" என்ற கையேடு இக்கருத்தரங்கில் வெளியிடப்பட்டது.

### *2.9.6.* தொழிற்சாலையில் உள்ள உணவகங்களில் கடைபிடிக்கப்பட வேண்டிய சட்ட வழிமுறைகள், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி

காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளைச் சார்ந்த நிர்வாகப் பிரதிநிதிகளுக்கும், தொழிற்சாலை உணவகங்களின் பிரதிநிதிகளுக்கும், தொழிற்சாலையில் உள்ள உணவகங்களில்

கடைபிடிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு சட்ட வழிமுறைகள் மற்றும் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி சென்னையில் 15.11.2022 அன்று நடைபெற்றது. *100* நிர்வாகங்களிலிருந்து 300 பிரதிநிதிகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### ***2.9.7.*** **தொழிற்சாலை மருத்துவ அலுவலர்களுக்கான "தொழில்வழி உடல் நலம்" என்ற கருத்தரங்கம்**

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், மணலி தொழிற்சாலைகள் சங்கங்களுடன் இணைந்து திருவொற்றியூர் மண்டலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கான" தொழில்வழி உடல் நலம்" குறித்த ஒரு நாள் கருத்தரங்கு *27.12.*2022 அன்று நடத்தப்பட்டது. இதில் 97 தொழிற்சாலைகளின் மருத்துவ அலுவலர்கள் பங்கேற்றனர்.

### *2.9.8.* தொழிற்சாலைகளில் பணிபுரியும் பாதுகாப்பு அலுவலர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு

தொழிற்சாலைகளில் பணியாற்றும் பாதுகாப்பு அலுவலர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு *02.02.2023* அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடத்தப்பட்டது.

"பாதுகாப்பு அலுவலர்களின் முக்கிய பங்கு" என்ற தலைப்பின்கீழ் ஒரு பாதுகாப்பு கையேடு தொழிற்சாலைகளின் பாதுகாப்பு அலுவலர்களின் பயன்பாட்டிற்கு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களால் வெளியிடப்பட்டது.

### *2.9.9.* அபாயகரமான பணிகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான சிறப்பு மருத்துவப் பரிசோதனை

மணலி பகுதியில் அமைந்துள்ள ஊறுவிளைவிக்கும் செயல்முறை

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்ளுக்கான, சுகாதார அளவீடு மற்றும் சிறப்பு மருத்துவ பரிசோதனைகள் *16.02.2023* முதல் *23.02.2023* வரை பிற மாவட்டங்களில் பணியாற்றும் சான்றளிக்கும் மருத்துவர்களைக் கொண்டு நடத்தப்பட்டது. மணலி பகுதியில் அமைந்துள்ள *6* ஊறுவிளைவிக்கும் செயல்முறை தொழிற்சாலைகள் இந்த சுகாதார அளவீடுகளுக்கு தேர்வு செய்யப்பட்டு, மருத்துவப் பரிசோதனை முடிவில் கண்டறியப்பட்டதன் அடிப்படையில், தக்க மருத்துவ ஆலோசனைகள் இத்தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினருக்கு வழங்கப்பட்டது.

## ***2.10.*** இவ்வியக்ககத்தின் எதிர்கால தொலைநோக்கு பார்வை

தொழிலாளர் நலச் சட்டங்களை நடைமுறைக்கு ஏற்ற வகையில் சிறப்பாக அமல்படுத்தி மாநிலத்தில் விபத்தில்லாத,

ஆரோக்கியமான மற்றும் அமைதியான தொழிலக சூழலைப் பராமரிப்பதே தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் முதன்மையான நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைய எதிர்வரும் ஆண்டுகளில் பின்வரும் உத்திகள் நடைமுறைப்படுத்தப்படும்.

- "எதிர்வரும் ஆண்டுகளில் பணியிட விபத்துகளே இல்லை" என்ற நிலையை அடைய தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில் தொழிலாளர் சட்டங்களை திறம்பட அமலாக்கம் செய்யவும் தொழிலாளர்களுக்கு போதுமான பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சிகள் வழங்க இவ்வியக்ககம் முயற்சிகளை மேற்கொள்ளும்.

- காலமுறை மருத்துவ பரிசோதனைகள், காலமுறை சுகாதார ஆய்வுகள், பணியிட இடர் மதிப்பீடுகள் மூலம் அபாயங்களை கண்டறிந்து,

அவற்றை சரிபடுத்தும் நடவடிக்கைகளை செயல்படுத்துதல், ஆகியவற்றின் மூலமாக அபாயகரமான தொழிற்சாலை மற்றும் ஊறு விளைவிக்கும் செயல்முறைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடல் நலம், சுகாதாரம் ஆகியவற்றிற்கு சிறப்பு கவனம் வழங்கப்படும்.

- பணி தொடர்பான பாதுகாப்பு அம்சங்கள் குறித்து தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கும் பொருட்டு, சென்னையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பயிற்சிப் பிரிவை நவீன தொழிற்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பயிற்சி மையமாக மேம்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படும். மாநிலத்தில் உள்ள அனைத்து பெரும்பான்மையான தொழிற் பிரிவுகளுக்கும், தொழில் குறித்த பாதுகாப்பு பயிற்சி வழங்குவதற்கு ஏற்றபடி தேவையான

உட்கட்டமைப்பு வசதிகள் இப்பயிற்சி மையத்திற்கு ஏற்படுத்தப்படும்.

- இவ்வியக்ககமானது பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பயிற்சி வகுப்புகள் மற்றும் சீரிய அமலாக்க நடவடிக்கைகள் வாயிலாக, விபத்தில்லா தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்கள் என்ற இலக்கினை அடைய சீரிய முயற்சிகளை மேற்கொள்ளும்.

- இவ்வியக்ககம் மூலம் வழங்கப்படும் இணைய வழி சேவைகள் அனைத்தும், குறித்த நேரத்தில், தடையில்லாமல் நேரடி தொடர்பின்றி பெறும் வகையில் இவ்வியக்ககத்தின் அனைத்து செயல்பாடுகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும்.

## *3.* வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை

### வேலைவாய்ப்புப் பிரிவு

மாநிலத்தில் உள்ள அனைத்து இளைஞர்களது வேலைபெறும் திறனை மேம்படுத்துவதே இத்துறையின் முக்கிய பணியாகும். வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மறுசீரமைக்கப்பட்டு, *2019* முதல் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக செயல்பட்டு வருகின்றன.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின், வேலைவாய்ப்புப் பிரிவின் கீழ் இயங்கும் இம்மையங்கள் வேலையற்ற இளைஞர்களின் வேலைபெறும் திறனை பல்வேறு நடவடிக்கைகளின் வாயிலாக மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றன. பதிவு செய்தல், பதிவை இற்றைப்படுத்துதல், பொதுத்துறை பணிகளுக்கு வேலைநாடுநர்களை பரிந்துரை செய்தல், தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை

வழங்குதல், போட்டித்தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல், கல்வி தொலைகாட்சி வாயிலாக அனைத்து வகை போட்டித் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகளை ஒளிபரப்புதல், தனியார் துறை வேலைவாய்ப்புகளுக்காக தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துதல் போன்ற பணிகள் இத்துறையின் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக உள்ளது.

**வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாக கட்டமைப்பு**


வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் தலைவரான ஆணையர், இந்திய ஆட்சிப்பணியின் மூத்த அலுவலர் ஆவார். ஆணையருக்கு உதவி புரிய இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), இணை இயக்குநர் (தொழில்நெறி வழிகாட்டல்), நான்கு துணை இயக்குநர்கள், ஒரு முதன்மை கணக்கு அலுவலர், மூன்று உதவி இயக்குநர்கள்

மற்றும் ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் தலைமை அலுவலகத்தில் பணியாற்றுகின்றனர்.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு மண்டலங்களில் மண்டல இணை இயக்குநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் சார்நிலை அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

துறையின் செயல்பாடுகள் *48* சார்நிலை அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில், தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள், இரண்டு தொழில்சார் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் (சென்னை மற்றும் மதுரை), மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், சென்னை, ஐந்து மாவட்டங்களில் ஆதிதிராவிடர்

மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் (கோயமுத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர்), பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் மையம், உதகமண்டலம் மற்றும் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம், சென்னை ஆகியவைகள் அடங்கும். வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாக அமைப்பு பின்வருமாறு:



### *3.1.* துறையின் செயல்பாடுகள்

1. வேலைநாடுநர்களை பதிவு செய்தல் மற்றும் பதிவினை புதுப்பித்தல்.
2. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களுக்கு அறிவிப்பு செய்யப்படும் பொதுத்துறை பணிக்காலியிடங்களுக்கு வேலைநாடுநர்களை பரிந்துரை செய்தல்.
3. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல்.
4. தன்னார்வ பயிலும் வட்டத்தின் வாயிலாக பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்காக போட்டித் தேர்வுகளுக்கு

இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.

5. அனைத்துவகை போட்டித் தேர்வுகளுக்குமான மென்பாடக்குறிப்புகளை துறையின் மெய்நிகர் கற்றல் இணையம் வாயிலாக வழங்குதல்.

6. தனியார் துறையில் பணியமர்த்தம் செய்வதற்காக பெரிய மற்றும் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல்.

7. தனியார் துறை வேலை இணையம் வாயிலாக தனியார் துறை வேலைவாய்ப்பு வழங்குதல்.

8. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தை செயல்படுத்துதல்.

9. வேலை நிலவர தகவல் தொடர்பிலான புள்ளி விவரங்களை சேகரித்து தொகுத்தல்.

### *3.2.* வேலைவாய்ப்பு இணையதளம்
*(www.tnvelaivaaippu.gov.in)*

வேலைவாய்ப்பு பணிகளான வேலைவாய்ப்பு பதிவுகள் மேற்கொள்ளுதல், புதுப்பித்தல், அறிவிக்கப்பட்ட பணிக்காலியிடங்களுக்கு தகுதியான மனுதாரர்களை பரிந்துரை செய்தல் உள்ளிட்ட அனைத்து வேலைவாய்ப்பு செயல்பாடுகளும், இணைய வழியில் மேற்கொள்ளும் பொருட்டு 15.09.2010 அன்று அப்போதைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் வேலைவாய்ப்பு இணையதளம் துவக்கி வைக்கப்பட்டது.

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்து, துறையின் உயிர்ப்பதிவேட்டில் *67,55,466* பதிவுதாரர்கள் உள்ளனர். இவர்களில் *31,47,605* பேர் ஆண்கள், *36,07,589* பேர் பெண்கள் மற்றும் *272* பேர் மாற்றுப் பாலினத்தவர்கள் ஆவர்.

உயிர்ப் பதிவேடு விவரங்கள் :

*(28.02.2023 அன்றுள்ளவாறு)*

| விவரங்கள் | பதிவுதாரர்கள் |
|---|---|
| மொத்த பதிவுதாரர்கள் | *67,55,466* |
| *18* வயதிற்கு உட்பட்ட பள்ளி மாணவர்கள் | *18,74,522* |
| *18* முதல் *30* வயதுக்கு உட்பட்ட உயர்கல்வி பயிலும் மாணவர்கள் | *28,09,940* |
| *30* முதல் *45* வயதிற்குட்பட்ட வேலை நாடுநர்கள் | *18,34,217* |
| *45* முதல் *60* வயதிற்கு உட்பட்ட பதிவுதாரர்கள் | *2,30,976* |
| *60* வயதிற்கு மேற்பட்ட பதிவுதாரர்கள் | *5,811* |

## *3.3.* தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள்

உயர்கல்வி, உயர்கல்விக்கான நுழைவுத்தேர்வுகள், பொதுத் துறை வேலைவாய்ப்பு,

தனியார் வேலைவாய்ப்பு, அயல்நாட்டு வேலைவாய்ப்பு, திறன் பயிற்சி வாயிலாக திறன் மேம்பாட்டு தொழில் முனைவோர்க்கான திட்டங்கள், உதவித் தொகை, போட்டித் தேர்வுகள் வாயிலாக பொதுத் துறை வேலைவாய்ப்பு போன்றவை குறித்து தனியர்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் மற்றும் கல்வி நிறுவனங்களிலும் தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. ஆண்டு தோறும் தொழில்நெறி வழிகாட்டல் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளும் கல்வி நிறுவனங்களில் நடத்தப்படுகின்றன.

### *3.4.* தன்னார்வ பயிலும் வட்டங்கள்

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம், இரயில்வே தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் போன்ற

தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக திறமையான பாடவல்லுநர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன. மாதிரி தேர்வுகள் மற்றும் மாதிரி நேர்காணல்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. போட்டித்தேர்வுகளுக்கு தேவையான புத்தகங்கள், தினசரி, வாராந்திர மற்றும் மாதாந்திர இதழ்கள் மற்றும் முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் ஆகியவை தன்னார்வ பயிலும் வட்டங்களில் பராமரிக்கப்படுகின்றன. இந்திய அரசு துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களால் அறிவிக்கப்படும் தேர்வுகளுக்கு சிறப்பு கவனம் அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னை (கண்ணகி நகர் மற்றும் மாநிலக் கல்லூரி - சேப்பாக்கம்), திண்டுக்கல் (ஒட்டன்சத்திரம்), திருப்பூர் (உடுமலைப்பேட்டை), ஈரோடு (தாளவாடி மற்றும் பர்கூர்) மற்றும் திருநெல்வேலியில் (முண்டந்துறை) ஆகிய இடங்களில் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்காக தேவை அடிப்படையிலான சிறப்பு பயிற்சி மையங்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்காக செயல்பட்டு வருகின்றன.

தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக 2022–2023 - ஆம் நிதியாண்டில் 446 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதில், 18,218 தேர்வர்கள் கலந்து கொண்டனர். அதில் 2,216 தேர்வர்கள் பல்வேறு போட்டித்தேர்வுகளில் பல்வேறு நிலைகளில் தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாகத் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இதற்கென அரசால் ஆண்டுதோறும் ரூ.4.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### 3.5. கல்லூரிகளில் இலவச பயிற்சி வகுப்புகள்

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்களின் அரசுப்பணி கனவை நனவாக்கும் வகையில் இந்திய அரசு மற்றும் மாநில அரசுப் பணிகளுக்கான போட்டித்தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்காக அரசால் ஆண்டுதோறும் ரூ.50.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2022-2023-ஆம் நிதியாண்டில் கல்லூரிகளில் நடத்தப்பட்ட 90 இலவச பயிற்சி வகுப்புகளில் 5,294 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

### 3.6. மெய்நிகர்கற்றல் இணையதளம்

***(https://tamilnaducareerservices.tn.gov.in)***

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால்

நடத்தப்படும் நேரடி பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள இயலாத போட்டித் தேர்வு ஆர்வலர்களுக்காக மெய்நிகர் கற்றல் இணையதளம் *22.02.2019* அன்று துவக்கப்பட்டது. போட்டித்தேர்வுகளுக்கு அனைத்து பாடக்குறிப்புகளையும் இலவசமாக இணைய கற்றல் வாயிலாக வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், ஒன்றிய அரசு பணியாளர் தேர்வாணையம் மற்றும் வங்கிப்பணியாளர் தேர்வு நிறுவனம், போன்ற தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கான காணொளி காட்சிப்பதிவுகள், ஒலிப்பதிவுகள் மென்பாடக்குறிப்புகள், அலகுத் தேர்வுகள், மாதிரித் தேர்வுகள், மற்றும் பாடத்திட்டம் ஆகியவை இவ்விணையதளத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. பதிவுதாரர்கள் இவ்வனைத்து பாடக்குறிப்புகளையும் இலவசமாக

பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். போட்டித் தேர்வுகளுக்கான பாடத்திட்டம், எதிர்வரும் தேர்வுகளுக்கான வருடாந்திர கால அட்டவணை, தேர்வு முகமைகளால் அறிவிப்பு செய்யப்படும் பணிக்காலியிடங்கள் இவ்விணையதளத்தில் தொடர்ச்சியாக பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இதுவரை, இவ்விணையதளத்தில் *2,25,118* தேர்வர்கள் பதிவு செய்துள்ளனர். இதுவரை *347* மென் பாடக்குறிப்புகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், இவ்விணையதளத்தை இதுவரை *59,59,318* நபர்கள் பார்வையிட்டுள்ளனர்.

### *3.7.* மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள்

மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்பு உதவிகள் வழங்குவதற்காக சென்னையில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இயங்கி வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான இந்த சேவையினை பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் வகையில் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. போட்டித்தேர்வுகளுக்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள், தனியார் துறை வேலைவாய்ப்பு பெற உதவுதல், திறன் பயிற்சிகள், உதவித் தொகைகள், சுயவேலைவாய்ப்பிற்கான திட்டங்கள் மற்றும் பல்வேறு வேலைவாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தல் ஆகிய பணிகள் இப்பிரிவுகளால் மேற்கொள்ளப்படுகின்றன. வேலைவாய்ப்பற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை வழங்குதல் ஆகியவைகளும் இப்பிரிவுகள் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.

## 3.8. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள்

கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல், வேலைவாய்ப்பிற்கான திறனை உயர்த்தும் வகையில் பயிற்சிகள் வழங்கி சுய வேலைவாய்ப்புக்கு ஊக்குவித்தல் ஆகிய செயல்பாடுகள் வாயிலாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பதிவுதாரர்களது தேவைகளை இம்மையங்கள் நிறைவு செய்கின்றன. இம்மையங்களின் செயல்பாட்டிற்காக அரசு

ஆண்டுதோறும் ரூ.20.46 இலட்சம் ஒதுக்கீடு செய்கிறது.

## 3.9. பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்

உதகமண்டலத்தில் செயல்பட்டு வரும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையமானது, பழங்குடியினரிடையே பல்வேறு தொழில் / உயர்கல்வி வாய்ப்புகள், பொதுத்துறை வேலைவாய்ப்பு, தனியார்துறை வேலைவாய்ப்பு, குறுகிய மற்றும் நீண்ட கால திறன் பயிற்சி, பொதுத் துறை வேலைவாய்ப்புக்கான பல்வேறு போட்டித்தேர்வுகள் மற்றும் சுயவேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இயங்கி வருகிறது.

## *3.10.* வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைத் திட்டம்

மாநிலத்தில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு நிதி உதவி அளிக்கும் வகையில் *25.08.*2006 அன்று வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்து, உயிர்ப்பதிவேட்டில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் காத்திருக்கும் வேலைநாடுநர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு இவ்வுதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற, பெற்றோரது ஆண்டு உச்ச வருமான வரம்பு ரூ.*72,000/-* ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வயது வரம்பு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கு 45-ஆகவும் இதர பிரிவினருக்கு *40*-ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 10-ஆம் வகுப்பு

தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.200/-, 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.300/-, மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.400/-, பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.600/- என்ற வீதத்தில் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது 2022-2023-ஆம் நிதியாண்டில் (டிசம்பர் 2022 வரை) 55,417 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.23.68 கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

### 3.11. அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டம்

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகையானது மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்களுக்கும் வழங்கப்படுகிறது. இவ்வுதவித்தொகையானது வேலைவாய்ப்பக உயிர்ப்பதிவேட்டில் ஓராண்டிற்கு

மேல் காத்திருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு, வயதுவரம்பு மற்றும் பெற்றோர் வருமானம் போன்ற நிபந்தனைகள் ஏதுமின்றி வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகையானது பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. 10-ஆம் வகுப்பு தேர்ச்சி வரை கல்வித்தகுதி உடையவர்களுக்கு ரூ.600/-. மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.750/- பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.1,000/- என்ற வீதத்தில் மாதந்தோறும் வழங்கப்படுகிறது. 2022-2023-ஆம் நிதியாண்டில் (டிசம்பர் 2022 வரை) 13,886 பயனாளிகளுக்கு ரூ.9.98 கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால் வழங்கப்படுகிறது.

### 3.12. மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்

தேசிய வேலைவாய்ப்பு சேவையானது 2014-ஆம் ஆண்டு தேசிய தொழில்நெறி சேவையாக

மாற்றம் அடைந்ததை அடுத்து, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தொழில் நெறி வழிகாட்டும் மையங்களாக மாற்றப்பட்டன. ஒன்றிய அரசின் மிஷன் மோடு திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு நிதி உதவியுடன் தமிழ்நாட்டில், வேலூர், கோயம்புத்தூர், சேலம், திருவள்ளூர், உதகமண்டலம், விழுப்புரம், விருதுநகர், மதுரை, இராமநாதபுரம், காஞ்சிபுரம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, நாகர்கோவில் மற்றும் ஈரோடு ஆகிய *15* மாவட்டங்களில் மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் இயங்கி வருகின்றன. அதன் பின்னர் *2022-2023*-ஆம் நிதியாண்டில் அரியலூர், கடலூர், கரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலும் மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் அமைப்பதற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. வேலைநாடுநர்கள் மற்றும் மாணவர்களுக்கு உளவியல் பகுப்பாய்வு சோதனைகள் செய்து அதன் முடிவுகளின் அடிப்படையில் அவர்களது திறன்கள், விருப்பங்கள்,

நடத்தைகளுக்கு ஏற்ப தொழில்நெறி மற்றும் வேலைவாய்ப்பு ஆலோசனைகள் வழங்குவது இம்மையங்களின் முக்கிய நோக்கமாகும். தனியார்துறையில் வேலையளிப்போர்களை ஒருங்கிணைத்து தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி பணி நியமனங்களை வழங்குவதும், மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்களின் பணிகளின் ஒரு பகுதியாக உள்ளது.

### *3.13.* தனியார்துறை பணியமர்த்தல்

தனியார்துறை நிறுவனங்களின் மனிதவளத்தேவையினை பூர்த்தி செய்வதுடன் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்காக அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் மூலம், வேலைவாய்ப்பு முகாம்கள், மாதம் ஒருமுறை சிறிய அளவிலும் வருடத்திற்கு இருமுறை பெரிய அளவிலும் நடத்தப்படுகிறது. இதன் வாயிலாக

அதிக எண்ணிக்கையில் தனியார் துறையில் வேலைநாடுநர்களுக்கு பணிநியமனங்கள் பெற்று வழங்கப்படுகிறது. இம்முகாம்கள் வேலையளிப்பவர் தகுதியான மனிதவளத்தைத் தேர்வு செய்யவும், வேலைநாடுநர்கள் பணிவாய்ப்புகளை பெறுவதற்கும் உதவிபுரிகின்றன. இப்பணிநியமனங்களில் மாதம் ரூ.10,000/– மற்றும் அதற்கு மேலும் கண்ணியமான ஊதியம் பெறுவது உறுதி செய்யப்படுகிறது. சிலர் ரூ.50,000/–க்கு மேற்பட்ட ஊதியத்திலும் பணிநியமனம் பெற்றுள்ளனர். அரசு இதற்கென ஆண்டுதோறும் ரூ.3.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்கிறது.

### ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் விவரம்

| | | |
|---|---|---|
| வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | : | 731 |
| வேலையளிப்பவர்களின் எண்ணிக்கை | : | 12,203 |
| வேலைநாடுநர்களின் எண்ணிக்கை | : | 2,93,578 |
| பணிநியமனம் பெற்றவர்களின் எண்ணிக்கை | : | 63,206 |

## *3.14.* தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம் *(www.tnprivatejobs.tn.gov.in)*

தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையமானது, இணைய வழியாக தனியார் துறை வேலைவாய்ப்புகளை வேலைநாடுநர்களுக்கு பெற்று வழங்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தனியார்துறை வேலையளிப்போரும் இவ்விணையதளத்தில் இலவசமாக பதிவு செய்து கொள்ளலாம். வேலையளிப்பவர்கள் தங்களது தேவைக்கேற்ப வேலைநாடுநர்களை தேர்வு செய்து கொள்ளவும், வேலைநாடுநர்கள் தங்களது தகுதி மற்றும் எதிர்பார்க்கும் ஊதியம், ஆகியவற்றிற்கு ஏற்ப வேலையளிப்பவரை தேர்வு செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்விணையதளத்தில் தனியார்துறை மனிதவளத்தேர்வு முகமைகள் மற்றும்

ஆலோசனை நிறுவனங்களும் பதிவு செய்து கொள்ளலாம். இதுவரை *12* மனிதவளத் தேர்வு நிறுவனங்கள் இவ்விணையதளத்தில் பதிவு செய்துள்ளன .

**தனியார்துறை வேலை இணையம் - செயலாக்கம்**

***(28.02.2023 அன்றுள்ளபடி)***

| | |
|---|---|
| பதிவுசெய்துள்ள வேலைநாடுநர்கள் | *2,46,822* |
| பதிவுசெய்துள்ள வேலையளிப்பவர்கள் | *5,568* |
| அறிவிக்கப்பட்ட பணிக்காலியிடங்கள் | *1,17,922* |
| வழங்கப்பட்ட பணி நியமனங்கள் | *36,052* |

## *3.15.* கல்வித் தொலைக்காட்சி வாயிலாக போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள்

ஒன்றிய / மாநில அரசுகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்று அரசுப்பணி பெற விரும்பும் வேலைநாடுநர்கள் தங்கள் இருப்பிடத்தில் இருந்தபடியே அத்தேர்வுகளுக்கு தயார் செய்ய உதவும் வகையில், போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி

வகுப்புகளை கல்வித் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் *20.03.2022* அன்று துவக்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம், வங்கிப்பணியாளர் தேர்வு நிறுவனம், இரயில்வே பணிகள் தேர்வு வாரியம் போன்றவற்றால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள், அனுபவம் வாய்ந்த சிறந்த வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன. சிறந்த பேச்சாளர்களைக் கொண்டு ஊக்கமூட்டும் உரைகள் நிகழ்த்துதல், குழு கலந்துரையாடல்கள், நடப்பு நிகழ்வுகள் முந்தைய ஆண்டு வினாத்தாள்களை ஆராய்தல் மற்றும் ஆளுமைத்திறனை மேம்படுத்துதல் குறித்த சிறப்பு

நிகழ்ச்சிகளும் பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன.

இப்பயிற்சி வகுப்புகள் திங்கள் முதல் வெள்ளி வரை காலை *7.00* மணி முதல் *9.00* மணி வரை ஒளிபரப்பப்படுவதுடன், மாலை *7.00* மணி முதல் *9.00* மணி வரை மறுஒளிபரப்பும் செய்யப்படுகிறது. இதுவரை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணையம் ஆகியவற்றால் நடத்தப்படும் போட்டித்தேர்வுகளுக்காக *504* மணிநேர வகுப்புகள் ஒளிப்பரப்பப்பட்டுள்ளன.

இந்த காணொளிப் பதிவுகள் இத்துறையின் *YouTube* சேனலிலும் *("TN Career Services Employment")* பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்த சேனலுக்கு இதுவரை *1,21,000* சந்தாதாரர்கள் உள்ளனர்.

## பயிற்சிப் பிரிவு

ஒரு மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு திறன் பயிற்சி இன்றியமையாததாகும். வேலை பெறும் திறனை அதிகரிப்பதற்கும், உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் இது ஒரு முக்கிய உந்து சக்தியாகும். தொழிற்சாலைகளுக்குத் தேவையான திறன்கள் சமீப காலங்களில் வேகமாக மாறிவருகிறது. அதற்கேற்ப தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் இளைஞர்களுக்கு நவீன தொழில் திறன்களை வழங்க வேண்டியுள்ளது.

தமிழ்நாடு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் வாயிலாக பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத, ஆறு மாத, ஒரு வருட மற்றும் இரண்டு வருட நீண்டகால தொழிற்பிரிவுகளில் இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது.

தமிழ்நாட்டில் விரிவான பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் மாணவர்கள் மற்றும்

தொழில் வல்லுநர்களின் திறனை மேம்படுத்தவும், புதிய உருவாக்கங்களை ஊக்கப்படுத்திடவும் அதிவேக உற்பத்திக்கு தேவையான மேம்பட்ட திறன்களை அதிக அளவில் கிடைத்திடச் செய்யவும் தமிழ்நாடு அரசு மாநிலத்திலேயே முதன்முறையாக டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் தலைமையிலான தொழில் குழுமத்துடன் இணைந்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழில் *4.0* தொழில்நுட்ப மையங்களை உருவாக்கி வருகிறது.

### *3.16.* நிர்வாக அமைப்பு

இத்துறையின் தலைமை அலுவலகத்தில் மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலரான வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரின் தலைமையில் மூன்று கூடுதல் இயக்குநர்களும், ஒரு இணை இயக்குநரும் செயல்படுகின்றனர்.

மண்டல அளவில் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சி, தொழிற் பழகுநர் பயிற்சி, தொழிற்பள்ளிகள்,

ஒன்றிய மற்றும் மாநில அரசால் அறிமுகப்படுத்தப்படும் பல்வேறு திறன் மேம்பாட்டுத் திட்டங்களைக் கண்காணிப்பதற்கு 7 மண்டல இணை இயக்குநர் (பயிற்சி) அலுவலகங்கள் முறையே சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் முதல்வர்களாலும் மாவட்ட அளவில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் உதவி இயக்குநர்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

### *3.17.* கைவினைஞர் பயிற்சித் திட்டம் (*CTS)*

கைவினைஞர் பயிற்சித் திட்டம், ஒரு வருட மற்றும் இரண்டு வருட நீண்டகால பயிற்சிகளை உள்ளடக்கியதாகும். தற்போதைய மற்றும் எதிர்காலத் தொழில்துறையின் பயிற்சி பெற்ற மனிதவள தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில்

இளைஞர்கள் முறையான துறையில் வேலைவாய்ப்பைப் பெற்றிடவும், முறைசாரா துறையில் உற்பத்தியை அதிகரிக்கவும் நீண்டகாலத் திறன் பயிற்சி வழங்கப்படுகிறது. தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் நீண்டகாலத் திறன் பயிற்சி என்பது செய்முறைப் பயிற்சியும் கருத்தியல் தொடர்பான பணிமனைக் கணக்கு மற்றும் அறிவியல், பொறியியல் வரைபடம் மற்றும் வேலை வாய்ப்புத் திறன்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

நீண்டகால திறன் பயிற்சி தேசிய திறன் தகுதிக் கட்டமைப்பில் *(NSQF) 4* மற்றும் 5-ஆம் நிலைகளில் உள்ளது.

### *3.17.1.* அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்

தமிழ்நாட்டில் *102* அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலம் நீண்டகாலத் திறன் பயிற்சி ஃபிட்டர், எலக்ட்ரீசியன், வெல்டர், மெக்கானிக் மோட்டார் வெகிக்கிள், டர்னர், மெஷினிஸ்ட் போன்ற

55 பொறியியல் தொழிற் பிரிவுகள் மற்றும் கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர் அன்டு புரோகிராமிங் அசிஸ்டெண்ட், டிஜிட்டல் போட்டோகிராபி, சூயிங் டெக்னாலஜி, ஃபுட் புரொடக்சன் (ஜெனரல்), ஃபேஷன் டிசைனிங், டெஸ்க்டாப் பப்ளிசிங் ஆபரேட்டர் போன்ற 24 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளிலும் வழங்கப்படுகிறது.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், பிரபலமான தொழிற்பிரிவுகளான ஃபிட்டர், வெல்டர், எலக்ட்ரீசியன் போன்ற தொழிற்பிரிவுகளில் பயிற்சி வழங்குவதோடு மட்டுமல்லாமல் இன்பிளான்ட் லாஜிஸ்டிக்ஸ், ஆர்க்கிடெக்சுரல் அசிஸ்டெண்ட், டெக்னீசியன் மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ், ஆட்டோபாடி ரிப்பேர், ஆட்டோபாடிபெயிண்டிங், ஆபரேட்டர் அட்வான்ஸ்டு மெஷின் டூல், ஸ்மார்ட் போன் டெக்னீசியன், டெக்னீசியன் பவர் எலக்ட்ரானிக்ஸ், ஃபயர் டெக்னாலஜி அன்டு இண்டஸ்ட்ரியல் சேஃப்டி

மேனேஜ்மென்ட் போன்ற நவீன கால தொழிற்பிரிவுகளிலும் பயிற்சி வழங்குகிறது. பயிற்சிக் காலம் 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரை ஆகும். 14 முதல் 40 வயதுக்குட்பட்ட மாணவர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஜூலை / ஆகஸ்ட் மாதங்களில் சேர்க்கை தொடங்கும். நடைமுறையில் உள்ள இடஒதுக்கீடு விதிகளைப் பின்பற்றி சேர்க்கை, தகுதி அடிப்படையில் நடத்தப்படுகிறது. மாநில அளவில் இணையவழிக் கலந்தாய்வு *URL: www.skilltraining.tn.gov.in* இணையதளம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மாணவர்கள் தங்கள் விருப்பப்படி அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவினைத் தேர்வு செய்யலாம்.

*2022*-ஆம் ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், இது வரை இல்லாத அளவிற்கு

25,707 மாணவர்களைச் சேர்க்கை செய்து 92.68% சேர்க்கையை பதிவு செய்துள்ளது.

### 3.17.2. பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி

நீடித்த வளர்ச்சி இலக்கு 4.5-இல் 2030-ஆம் ஆண்டுக்குள், கல்வியில் பாலின வேறுபாடுகளைக் களைந்து, மாற்றுத் திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் உள்ள குழந்தைகள் உட்பட, பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு அனைத்து நிலை கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான சம அணுகலை உறுதி செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வகையில் இந்த இலக்கின் நோக்கம் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு திறன்பயிற்சி அளித்து அதன் மூலம் பயன் பெறத்தக்க வேலைவாய்ப்பைப் பெறவும், ஏற்றத்தாழ்வுகளை அகற்றவும், தரமான உயர்கல்விக்கான உலகளாவிய

அணுகலை அடையவும் வழிவகை செய்து நிறைவேற்றப்படுகிறது.

**பட்டியலின மாணவர்களை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி**

மாநிலத்தில் உள்ள பட்டியலின மாணவர்களுக்காக பிரத்யேகமாக இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. *2022*-ஆம் ஆண்டில், இந்த அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 272 மாணவர்கள் சேர்க்கப்பட்டு *100%* சேர்க்கை செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **மாவட்டம்** | **அரசு தொழிற்பயிற்சி நிலையம்** | **ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்** | **சேர்க்கப்பட்ட மாணவர்கள்** |
|---|---|---|---|---|
| *1* | கடலூர் | சிதம்பரம் | *148* | *148* |
| *2* | திருவள்ளூர் | வடகரை | *124* | *124* |
| **மொத்தம்** | | | ***272*** | ***272*** |

பட்டியல் இனத்தவருக்கென 18% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் இந்த ஆண்டில்

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 7,860 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 30.6% பட்டியலின மாணவர்கள் சேர்ந்துள்ளது மாநிலத்தின் சமூக உட்சேர்க்கையை மேலும் வலுப்படுத்துகிறது.

**பட்டியல் பழங்குடியின மாணவர்களை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி**

மாநிலத்தில் பழங்குடியின மாணவர்களுக்காக பிரத்யேகமாக ஆறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2022-ஆம் ஆண்டில், இந்த அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 904 மாணவர்கள் சேர்ந்துள்ளார்கள்.

| வ. எண் | மாவட்டம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | சேர்க்கப்பட்ட மாணவர்கள் |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | சங்கராபுரம் | 188 | 188 |
| 2 | கோயம்புத்தூர் | ஆனைக்கட்டி | 124 | 124 |
| 3 | சேலம் | கருமந்துறை | 152 | 133 |
| 4 | திருவண்ணாமலை | ஜமுனாமரத்தூர் | 152 | 139 |

| வ. எண் | மாவட்டம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | சேர்க்கப்பட்ட மாணவர்கள் |
|---|---|---|---|---|
| *5* | நாமக்கல் | கொல்லிமலை | *168* | *168* |
| *6* | நீலகிரி | கூடலூர் | *152* | *152* |
| மொத்தம் | | | ***936*** | ***904*** |

### *3.17.3.* மாற்றுத்திறனாளி மாணவர்களை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி

3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஃபிட்டர் தொழிற்பிரிவில் காது கேளாத மற்றும் வாய் பேச முடியாத மாற்றுத் திறனாளி இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2022-ஆம் ஆண்டில், *33* மாணவர்கள் இந்த 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுகின்றனர்.

### *3.17.4.* மாணவிகளை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி

மகளிர் மேம்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்கில், இத்துறை *10* அரசுதொழிற்பயிற்சி நிலையங்களை பிரத்யேகமாக மகளிருக்கென நடத்தி வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | மாவட்டம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | ஒப்பளிக்கப்ட்ட இடங்கள் | சேர்க்கப்பட்ட மாணவர்கள் |
|---|---|---|---|---|
| *1* | சென்னை | கிண்டி | *380* | *292* |
| *2* | சென்னை | அம்பத்தூர் | *184* | *150* |
| *3* | தேனி | ஆண்டிப்பட்டி | *204* | *204* |
| *4* | திண்டுக்கல் | திண்டுக்கல் | *288* | *288* |
| *5* | மதுரை | மதுரை | *232* | *232* |
| *6* | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | *348* | *289* |
| *7* | சேலம் | சேலம் | *284* | *247* |
| *8* | கன்னியாகுமரி | நாகர்கோயில் | *228* | *228* |
| *9* | கடலூர் | கடலூர் | *364* | *323* |
| *10* | திருச்சிராப்பள்ளி | புள்ளம்பாடி | *316* | *245* |
| **மொத்தம்** | | | ***2,828*** | ***2,498*** |

### *3.17.5.* சிறைவாசிகளுக்கு திறன் பயிற்சி

சிறையில் உள்ள சிறைவாசிகள் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ளும் வண்ணம் திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் 5 தொழிற் பிரிவுகளில் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. *2022*-ஆம் ஆண்டில், *168* சிறைவாசிகள் திறன் பயிற்சிக்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.

### *3.18.* மாணவர்களுக்கான நலத்திட்டங்கள்

மாநிலத்தில் உள்ள இளைஞர்கள் திறன் பயிற்சி பெறுவதை ஊக்குவிப்பதற்காக அரசு தொழிற்பயிற்சி நிலைய மற்றும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு பின்வரும் நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

- வருடாந்திர கல்விக் கட்டணம் தள்ளுபடி.
- பேருந்து பயணச் சலுகை.

- *2* இணை சீருடை மற்றும் *1* இணை காலணிகள்.
- மாதம் ரூ.750/- உதவித்தொகை.
- பாடப் புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள்.
- மிதிவண்டி.
- பயிற்சிக்கான மூலப்பொருட்கள் மற்றும் கச்சாப்பொருட்கள்.

### *3.19.* அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்கள்

மாநிலத்தில் 10 அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன. இதில் பெரும்பாலான தொழிற்பயிற்சி நிலையங்கள் சிறுபான்மையினத்தவருக்காக நடத்தப்படுகிறது. பின்தங்கிய சமூகத்திலிருந்து வரும் மாணவர்களின்

வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் பொருட்டு திறன்பயிற்சி அளிப்பதற்காக இத்தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அரசின் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. *2022*-ஆம் ஆண்டில் அரசு உதவிபெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் 766 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். 2022-*2023*-ஆம் நிதியாண்டில் இத்தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ரூ.1.65 கோடி பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### *3.20.* தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்

திறன்பெற்ற மனிதவளத் தேவை அதிகரித்து வருவதை பூர்த்தி செய்ய, தமிழ்நாடு அரசு திறன்பெற்ற மனிதவளத்தை உருவாக்குவதில் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் தீவிர பங்களிப்பினை ஊக்கப்படுத்துகிறது. தற்போது மாநிலம் முழுவதும் தேசிய தொழிற்பயிற்சிக் குழும அங்கீகாரத்துடன் கூடிய 326 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒவ்வொரு ஆண்டும்

30,276 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. *2022*-ஆம் ஆண்டில், 13,653 மாணவர்கள் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### *3.21.* தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மானியம்

மாநிலத்தில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள், அதிக திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதை ஊக்கப்படுத்திட 50% அரசு ஒதுக்கீட்டு இடங்களை அரசுக்கு ஒப்புவித்து இணையதள சேர்க்கை மூலம் பூர்த்தி செய்திடும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு, மாநில அரசு பயிற்சிக் கட்டணத்தை திரும்ப வழங்குகிறது. கிராமப்புறங்களில், பயிற்சி பெறும் ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ரூ.*10,000/*-மும், நகர்ப்புறங்களில் ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு, ரூ.*12,000/*-மும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இத்திட்டத்தின்

கீழ் திரும்ப வழங்கப்படுகிறது. *2022*-ஆம் ஆண்டில் *7,430* மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். இதுவரை ரூ*5.00* கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

### *3.22.* தேசிய அளவிலான தொழிற் தேர்வு மற்றும் சான்றிதழ்

பயிற்சிக் காலத்தின் முடிவில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள மாணவர்களுக்கு தேசிய அளவிலான பொது தொழிற் தேர்வு தலைமை பயிற்சி இயக்குநரகத்தால் நடத்தப்படுகிறது. 2020-*2021*-ஆம் ஆண்டு முதல் புதுடில்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்குநரகத்தால் நியமிக்கப்பட்ட நிறுவனம் மூலம் அனைத்து தொழிற்பிரிவுகளுக்கும் கணினி அடிப்படையிலான தொழிற்தேர்வு நடத்தப்படுகிறது. *2022*-ஆம் ஆண்டில் தேசிய தொழிற்பயிற்சி குழும

முறையில் *23,617* மாணவர்கள் தொழிற்தேர்வில் கலந்து கொண்டதில் *20,489 (87%)* மாணவர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தின் மூலம் தேசிய தொழிற் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மாநில தொழிற்பயிற்சி குழும முறையில் *1*,509 மாணவர்கள் தொழிற் தேர்வில் கலந்து கொண்டதில் *1*,401 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இத்துறையால் மாநில தொழிற்பயிற்சி குழும சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி வழங்குநர்களால் குறுகிய கால பயிற்சி வழங்கப்படுகிறது, இப்பயிற்சியாளர்களும் மாநிலத் தொழிற்பயிற்சி குழுமத்தால் *(SCVT)* மதிப்பீடு

செய்யப்படுகின்றனர். 2022-ஆம் ஆண்டில், 25,114 இளைஞர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மாநில தொழிற்பயிற்சி குழும சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஒரு பயிற்சியாளருக்கு ரூ.1,000/- மதிப்பீட்டு கட்டணமாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதன் மூலம் ரூ.2.51 கோடி வருவாய் ஈட்டப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

### 3.23. வளாகப் பணியமர்வு நிலவரம்

பணியமர்வு என்பது தொழிற்பயிற்சி நிலையங்களின் ஒரு முக்கியமான பணியாகும். அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுத் தர அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பணியமர்த்தும் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் ஆதரவுடன் வளாக நேர்காணல் நடத்தப்பட்டு வருகிறது.

*2022*-ஆம் ஆண்டில், தேர்ச்சி பெற்ற மாணவர்களில் *76%* மாணவர்களுக்கு பல்வேறு தொழிற்சாலைகளிலும் நிறுவனங்களிலும் பணியமர்வு வழங்கப்பட்டுள்ளது.

### *3.24.* பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு *(PPP)* முறை மூலம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்

இத்திட்டம் 2007-ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் *32* அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.80.*00* கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு அரசு தொழிற்பயிற்சி நிலையத்திலும் நம்பகமான தொழில்துறை பங்குதாரரின் தலைமையில் ஒரு நிறுவன மேலாண்மைக் குழு (*IMC*) அமைக்கப்பட்டு இக்குழு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-இன் கீழ் சங்கமாக

பதிவு செய்யப்பட்டுள்ளது. வட்டியில்லா கடன் தொகையாக ரூ.2.50 கோடி ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

புதுடெல்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்குநரால் நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, ஒவ்வொரு நிலைய மேலாண்மை குழுவும் நிலையத்தின் வளர்ச்சிக்கென ஒரு நிலைய மேம்பாட்டு திட்டத்தை தயாரித்துள்ளது. இந்த நிலைய மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில், ஒன்றிய அரசு நிலைய மேலாண்மைக்குழு சங்கத்திற்கு நேரடியாக ரூ.2.50 கோடியை வட்டியில்லா கடன் தொகையாக வழங்கியுள்ளது. அனுமதிக்கப்பட்ட கடன் தொகையில், ரூ.50 லட்சம் நிரந்தர வைப்புத் தொகையாக கருதப்பட்டு நிலைய மேலாண்மைக்குழு சங்கத்தால் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வைக்கப்பட்டுள்ளது.

நிலைய மேலாண்மைக்குழு சங்கத்தால் பெறப்பட்ட கடனை வழங்கப்பட்ட நாளிலிருந்து *11*வது வருடம் முதல் *20* வருடாந்திர சம தவணைகளாக ஒன்றிய அரசுக்கு திரும்ப செலுத்த வேண்டும். நிலைய மேலாண்மை குழு சங்கத்திற்கு கடன் விடுவிக்கப்பட்ட ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் கடனை திருப்பி செலுத்த கால அவகாசம் உள்ளது. கடன் தொகையின் முதல் தவணை ரூ.400 லட்சம் (ஒவ்வொன்றும் ரூ.12.50 லட்சம்) அனைத்து நிலைய மேலாண்மைக்குழு சங்கங்கள் மூலம் ஒன்றிய அரசுக்கு திருப்பி செலுத்தப்பட்டுள்ளது.

### ***3.25.*** **தொழில் மதிப்பை மேம்படுத்துவதற்கான திறன்களை வலுப்படுத்துதல் (*STRIVE)***

இந்த திட்டம் 2017-ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு உலக வங்கி நிதி உதவியுடன் *100%* ஒன்றிய அரசின் நிதியால்

செயல்படுத்தப்படுகிறது. இது சிறு மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள், வணிக சங்கங்கள், தொழில் கூட்டமைப்புகள் ஆகியவற்றில் தொழிற் பழகுநர் பயிற்சி வழங்கப்படுவதுடன் திட்ட தொழில் பயிற்சி நிலையங்களின் ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்துவதற்கு ஊக்குவிக்கிறது. இத்திட்டம் கீழே விளக்கப்பட்டுள்ளபடி நான்கு கோட்பாடுகளின் மூலம் செயல்படுத்தப்படுகிறது:

**கோட்பாடு *1:* தொழிற்பயிற்சி நிலையங்களின் மேம்பட்ட செயல்திறன்**

அம்பத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கடலூர், மதுரை, திண்டுக்கல், தூத்துக்குடி, விருதுநகர், நாமக்கல், சேலம், கோயம்புத்தூர் மற்றும் சிவகங்கை ஆகிய 13 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், டான் போஸ்கோ தனியார் தொழிற்பயிற்சி நிலையம், லால்குடி, பிஏசிஆர் தனியார் தொழிற்பயிற்சி நிலையம்,

அரியலூர், ராம்கோ தனியார் தொழிற்பயிற்சி நிலையம், விருதுநகர் ஆகிய மூன்று தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இத்திட்டத்தின் கீழ் ரூ.29.01 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டு, அதில் ரூ.13.98 கோடி ஒன்றிய அரசால் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் சிறந்த செயல்பாட்டின் அடிப்படையில் திருவண்ணாமலை, கடலூர் (மகளிர்), ஓசூர், உளுந்தூர்பேட்டை, கோயம்புத்தூர் (மகளிர்), மேட்டூர் அணை, ஆண்டிபட்டி (மகளிர்), நாகப்பட்டினம், மதுரை (மகளிர்), புதுக்கோட்டை, திண்டுக்கல் (மகளிர்), கிண்டி, சிதம்பரம், அரியலூர், தஞ்சாவூர் மற்றும் குன்னூர் ஆகிய 16 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இந்தத் திட்டத்தின் 3-ஆம் கட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**கோட்பாடு *2:* தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற் பழகுநர் பயிற்சிக்கு உதவிடும் வகையில் மாநில அரசின் திறன்களை அதிகப்படுத்துதல்**

இத்திட்டம் மாநில அளவில் தொழிற்பயிற்சி நிலையங்களின் ஒட்டுமொத்த ஒழுங்குமுறை மற்றும் செயல்பாட்டு சூழலை மேம்படுத்தவும் தொழில் கூட்டமைப்புகளை உருவாக்கிடவும் மாநில அரசுக்கு உதவுகிறது.

1. செயல்திறன் அடிப்படையிலான நிதியுதவி மூலம் திறன் சுற்றுச்சூழல் அமைப்பிற்குள் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த மாநிலங்களை ஊக்குவிக்கிறது.
2. மாநில அளவில் கண்காணிப்பு வழிமுறைகளை வலுப்படுத்துவதன் மூலம் இந்தியாவில் திறன் பயிற்சியின் செயல்திறனை மேம்படுத்துகிறது.

இந்த திட்ட நிதி ரூ.10.20 கோடியில் ஒன்றிய அரசு செயல்திறன் அடிப்படையிலான நிதி உதவி ஒப்பந்தத்தின்படி 30% முன்மானியமாக ரூ.3.06 கோடியினை வழங்கியுள்ளது.

**கோட்பாடு *3* : மேம்படுத்தப்பட்ட கற்பித்தல் மற்றும் கற்றல் திறன்கள்**

புதுடெல்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்குநரகத்தால் தொழிற்பயிற்சி நிலையங்களில் நிர்வாக சீர்திருத்தங்களை அமல்படுத்த மேற்கொள்ளப்படும் செயல்கள் இக்கோட்பாட்டில் வரையறுக்கப்பட்டுள்ளன.

**கோட்பாடு 4: மேம்படுத்தப்பட்ட மற்றும் விரிவுபடுத்தப்பட்ட தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்**

தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்பு திட்டமானது ஒரு கூட்டமைப்பு முறையில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவன கூட்டமைப்புகளில்

தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் அமைப்பை உருவாக்கும் ஒரு புதிய முயற்சியாகும்.

இத்திட்டத்தின்படி தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்பினை, செயல்படுத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு தொழில் கூட்டமைப்பிற்கும் ரூ.*1.00* கோடி திட்ட மானியமாக வழங்கப்படுகிறது.

தேசிய கூட்டமைப்பு மதிப்பீட்டுக் குழும *(NCEC)* பரிந்துரையின் அடிப்படையில் அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் - *(AIEMA)*, கோயம்பத்தூர் மாவட்ட சிறுதொழில் சங்கம் *(CODISSIA)*, மதுரை நகை உற்பத்தியாளர் கூட்டமைப்பு பிரைவேட் லிமிடெட், மதுரை, இன்ட்கோசெர்வ், நீலகிரி மற்றும் ஈத்தாமொழி காயர் கூட்டமைப்பு ஆகியவை நமது மாநிலத்தில், கோட்பாடு நான்கின்

கீழ் தொழில் கூட்டமைப்புகளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை செயல்படுத்த, ஒன்றிய அரசு முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் 40% முன்பண மானியமாக, ஒவ்வொரு தொழில் குழுமத்திற்கும் ரூ.40.00 லட்சத்தை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 3 தொழில் கூட்டமைப்புகளுக்கு ஒன்றிய அரசு இதுவரை ரூ.120.00 இலட்சம் வழங்கியுள்ளது.

தேசிய கூட்டமைப்பு மதிப்பீட்டுக் குழுமம் *(NCEC)* தமிழ்நாட்டில் பின்வரும் 8 தொழில் கூட்டமைப்புகளை *2022*-ஆம் ஆண்டில் கூடுதலாக தெரிவு செய்துள்ளது.

| வ. எண் | தொழிற்கூட்டமைப்பின் பெயர் |
|---|---|
| *1* | திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் |
| *2* | ஓசூர் சிறு மற்றும் குறு தொழிற்சாலைகள் சங்கம் *(HOSTIA)* |

| வ. எண் | தொழிற்கூட்டமைப்பின் பெயர் |
|---|---|
| *3* | மதுரை மாவட்ட குறு மற்றும் சிறு தொழிற்சாலைகள் சங்கம் *(MADITSSIA)* |
| *4* | கோயம்புத்தூர் தொழிற்சாலை உள்கட்டமைப்பு சங்கம் *(COINDIA)* |
| *5* | நாமக்கல் மாவட்ட சிறு தொழிற்சாலைகள் சங்கம் |
| *6* | நிஃப்ட்டீ பின்னலாடை வடிவமைப்பு நிலையம் |
| *7* | தென்னிந்திய ஆலைகள் சங்கம் |
| *8* | இந்திய ஜவுளி தொழில் முனைவோர் கூட்டமைப்பு |

இதன் தொடர்ச்சியாக தொழிற்சாலை கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசு ஆகியவற்றிற்கிடையே முத்தரப்பு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு தொழில் கூட்டமைப்பில் உள்ள உறுப்பினர் தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர் பயிற்சி அமல்படுத்திட ஒவ்வொரு தொழிற்சாலை கூட்டமைப்பிற்கும் ரூபாய் ஒரு கோடி நிதி ஒன்றிய அரசால் வழங்கப்படும்.

## *3.26.* மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக மேம்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ், கோயம்புத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையம், மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக தரம் உயர்த்த தேர்வு செய்யப்பட்டுள்ளது. மொத்த திட்ட மதிப்பீடான ரூ.10.00 கோடியில் 70:30 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே செலவினம் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. ஏனைய தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு முன்மாதிரியாக செயல்படும் வண்ணம் தொழிற்சாலையுடன் இணைந்து செயல்படுவதில் ஒரு தர அளவை எட்டுவதற்கு நிலைய மேலாண்மைக்குழு மூலம் இந்த நிதி வழங்கப்படுகிறது.

மொத்த திட்ட மதிப்பீடு ரூ.10.*00* கோடியில் (ஒன்றிய அரசு பங்கீடு ரூ.*7.00* கோடியில் ரூ.3.*50* கோடியும், மாநில அரசின் பங்கீட்டில்

ரூ.3.00 கோடியில் ரூ.1.50 கோடியும்) ரூ 5.00 கோடி இதவரை ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் விடுவிக்கப்பட்டுள்ளது. ரூ.2.50 கோடி கட்டடம் கட்டப்படுவதற்கும், புதுப்பிக்கப்படுவதற்கும் செலவளிக்கப்பட்டுள்ளது. இயந்திரங்கள், கருவிகள், உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கு ரூ.2.16 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## *3.27.* தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம் (*ATS*)

### *3.27.1.* தொழிற்பழகுநர் பயிற்சி

தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டத்தின் முக்கிய நோக்கம், நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில், பகுதி திறன் கொண்ட தொழிலாளர்களுக்கும் முறையான பயிற்சி பெறாதவர்களுக்கும் செய்முறை பயிற்சி அளிப்பதற்காக, தொழிற்சாலைகளில் உள்ள வசதிகளைப் பயன்படுத்துவதாகும்.

8வது / 10வது தேர்ச்சியுடன் குறைந்தபட்சம் 14 வயதுடைய தேசிய தொழிற் சான்றிதழைப் பெற்றுள்ள பகுதித் திறன் பெற்ற தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர் பயிற்சி பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். தமிழ்நாட்டில் தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம் 56 வரையறுக்கப்பட்ட தொழிற்பிரிவுகளில் செயல்படுத்தப்படுகிறது. பயிற்சி காலம் 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரை ஆகும். புதுதில்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்குநரகத்தால் பரிந்துரைக்கப்பட்டபடி குறைந்தபட்சம் ரூ.7,000/- தொழிற்பழகுநர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. தற்போது, 622 தொழிற்சாலைகளில் 9,710 தொழிற்பழகுநர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்சி முடிந்தவுடன் தொழிற்பழகுநர்களுக்கு தேசிய அளவில் தொழில் தேர்வு நடத்தப்படுகிறது.

தொழிற்பயிற்சி நிலையத்தில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு அகில இந்திய தொழிற்பழகுநர் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. தொழிற்பழகுநர் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தவுடன், புதுடெல்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்குநரகத்தால் *(DGT)* தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் *(NAC)* வழங்கப்படுகிறது.

### *3.27.2.* தேசிய தொழிற் பழகுநர் பயிற்சி ஊக்குவிப்பு திட்டம் (*NAPS)*

தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர்களின் சேர்க்கையை அதிகரிக்க, *2016*-ஆம் ஆண்டில் இருந்து ஒன்றிய அரசு இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், தொழிற்பழகுநர்கள் மற்றும் தொழிற்சாலைகள் / நிறுவனங்கள் பின்வருமாறு பயனடைகின்றன.

*(i)* தொழிற்பழகுநர் பயிற்சி பெறுபவருக்கு ஒரு மாதத்திற்கு அதிகபட்சமாக ரூ.1,*500/*-க்கு

மிகாமல் நிர்ணயிக்கப்பட்ட உதவித் தொகையில் 25%-ஐ ஒன்றிய அரசு தொழில் நிறுவனங்களுக்கு பங்களிப்பாக வழங்குகிறது.

*(ii)* அடிப்படைப் பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு ரூ.*7,500/-* மிகாமல் அதிகபட்சமாக 500 மணிநேரங்கள் / *3* மாதங்களுக்கான பயிற்சி கட்டணத்தை ஒன்றிய அரசு வழங்குகிறது.

இத்திட்டத்தில் பட்டதாரி மற்றும் பட்டய பயிற்சி பெற்றவர்களை தவிர அனைத்து வகையான தொழிற்பழகுநர்களும் இடம்பெறுவர்.

**3.27.3. முறையான பயிற்சி பெறாதவர்களை நிறுவனங்களில் தொழிற்பழகுநர்களாக நியமித்தல்**

தொழிற்பழகுநர் பயிற்சி திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட மற்றும் விருப்பத்

தொழிற்பிரிவுகளில் முறையான பயிற்சியின்றி *8, 10,* +2 தேர்ச்சி பெற்றவர்களை தொழிற்பழகுநர்களாக சேர்க்கை செய்வது ஒரு முக்கிய சீர்திருத்தமாகும். ஒருவர் தொழிற்பழகுநராக சேருவதற்கு முக்கிய அளவுகோல் 14 வயதை நிறைவு செய்வதாகும். தொழிற்சாலையில் தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சியில் ஈடுபடுவதற்கு முன் அவர்களுக்கு அடிப்படைப் பயிற்சி வழங்குநர்களால் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படுகிறது. தொழிற்பழகுநர் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவர்கள் தொழிற்பழகுநர்களாக சேருவதற்கு அதிகபட்ச வயது வரம்பு இல்லை.

### *3.27.4.* மாநில தொழிற்பழகுநர் பயிற்சி கண்காணிப்பு பிரிவு (*SAMC)*

மாநிலத்தில் தொழிற்பழகுநர்களின் சேர்க்கையை திறம்பட கண்காணிப்பதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மாநில தொழிற்பழகுநர் பயிற்சி கண்காணிப்பு பிரிவு இயக்குநரின் தலைமையில் ஒரு இணை இயக்குனர், மூன்று ஆலோசகர்கள் மற்றும் ஆறு துணை பணியாளர்களுடன் இயங்குகிறது. மாநில தொழிற்பழகுநர் பயிற்சி கண்காணிப்பு பிரிவின் முக்கிய நோக்கம் மாநிலத்தில் தொழில் மதிப்பை மேம்படுத்துவதற்கான திறன்களை வலுப்படுத்தும் திட்டத்தின் *(STRIVE)* கீழ் தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்பை திறம்பட செயல்படுத்துவதாகும். இந்த நோக்கத்திற்காக இப்பிரிவு தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்பை

செயல்படுத்தும் நிறுவனங்களை தேர்ந்தெடுப்பதிலும், கண்காணிப்பதிலும் ஈடுபட்டு வருகிறது.

### *3.28.* சுயநிதி தனியார் தொழிற்பள்ளிகள்

தமிழ்நாட்டில் 187 சுயநிதி மற்றும் 21 அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பள்ளிகள் உள்ளூர் தொழிற்சாலைகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் செயல்பட்டு வருகின்றன. *2022*-ஆம் ஆண்டில், தொழிற்பள்ளிகளில் *6,485* மாணவர்கள் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் எலக்ட்ரிக்கல், மெக்கானிக்கல், ஆட்டோமொபைல், எலக்ட்ரானிக்ஸ், ஹாஸ்பிடாலிட்டி, அப்பேரல், தகவல் தொழில்நுட்பம், ஆபிஸ் ஆட்டோமேஷன் மற்றும் கன்ஸ்ட்ரக்சன் ஆகிய துறைகளில் ஒரு வருடம் முதல் மூன்று ஆண்டுகள் வரை பயிற்சி காலத்துடன் கூடிய *57* தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. *8*-ஆம் மற்றும் *10*-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சி

பெற அனுமதிக்கப்படுகிறார்கள். பள்ளிகளில் தொழில்நுட்ப ஆசிரியர்களாக சேருவதற்கான கல்வி தகுதியான தொழில்நுட்ப ஆசிரியர் சான்றிதழ் பயிற்சி *18* தொழிற்பள்ளிகளில் வழங்கப்படுகிறது. தொழிற்பயிற்சிக்கான மாநிலத் தேர்வு வாரியத்தால் *(SBEVT)* பொதுத் தேர்வுகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு மாநில தொழிற்பயிற்சி குழுமத்தால் *(SCVT)* சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 21 தனியார் தொழிற்பள்ளிகள் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன. *2022-2023*-ஆம் நிதியாண்டில் ரூ.2.27 கோடி பராமரிப்பு மானியமாக அரசு உதவி பெறும் தொழிற்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## *3.29.* டாக்டர்.இராதாகிருஷ்ணன் சிறந்த பயிற்றுநர் விருது

நீண்டகால திறன் பயிற்சியில் சிறந்த முறையில் செயலாற்றிய 12 சிறந்த பயிற்றுநர்களை

(முதல்வர் - 2, பயிற்சி அலுவலர் - 2, உதவிப் பயிற்சி அலுவலர் - 4 மற்றும் இளநிலைப் பயிற்சி அலுவலர் - 4) கௌரவிக்கவும் ஊக்கப்படுத்திடவும் சிறந்த பயிற்றுநர் விருது 'டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருது என்ற பெயரில் வழங்கப்படுகிறது. இந்த விருது ரூ.10,000/- ரொக்கப் பரிசுடன் ஒரு தகுதிச் சான்றிதழை உள்ளடக்கியதாகும்.

### 3.30. மாநில திறன் பயிற்சி நிலையம்

மாநில பயிற்சிக் கொள்கை, 2022 - இல் ஒவ்வொரு துறையும் தங்கள் துறையின் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க முறையான அணுகுமுறையைக் கடைபிடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய கொள்கையின்படி இத்துறையின் பயிற்றுநர்களுக்கு தொழில்துறையின் சமீபத்திய தொழில்நுட்பங்களில் அவர்களின் திறன்களை மேம்படுத்தும் வண்ணம் பயிற்சியளிக்க, மாநில திறன் பயிற்சி நிலையம்

சென்னையில் நிறுவப்பட்டு வருகிறது. இந்த நிலையம் துறையின் தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு புத்தாக்க மற்றும் பணி தொடர்பான பயிற்சி அளிக்கும் ஒரு தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை பயிற்சி நிலையமாக செயல்படும். இந்த நிலையம் ஒவ்வொரு தொழில் துறையிலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு பயிற்சிக்கான செய்முறை சார்ந்த கற்பித்தலுக்கு வழிவகுக்கிறது.

இந்த நிலையத்தில் பின்வரும் பயிற்சிகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது

- கற்பித்தல் முறைக்கான கருத்தியல் வகுப்புகள்.
- தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி.
- பணியமர்த்தும் அலுவலர்களுக்கு பயிற்சி.
- அலுவலர்களுக்கு மேலாண்மை பயிற்சி.

- தொழிற்பிரிவு சார்ந்த தொழில்நுட்பத்தில் செய்முறைப் பயிற்சி
- இத்துறையின் பணியாளர்களுக்கு நிர்வாகப் பயிற்சி.

### *3.31.* பயிற்றுநர்களுக்கு பயிற்சி

மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. பயிற்றுநர்கள் சிறந்த பயிற்றுவிப்பு முறைகள் மற்றும் மாதிரிகளை பயிற்சியில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது.

இதற்கேற்ப பின்வரும் முன்னணி நிறுவனங்கள் / தொழிற்சாலைகளில் பயிற்றுநர்களுக்கு தொடர்புடைய பிரிவுகளில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

1. தேசிய திறன் பயிற்சி நிலையம், சி.ட்டி.ஐ. வளாகம், கிண்டி, சென்னை.
2. சீமென்ஸ் திறன் மிகுமையம், குரோம்பேட்டை, சென்னை.
3. மாருதி சுசுகி பிரைவேட் லிமிடேட், குருகிராம், புது டெல்லி.
4. அசோக் லேலண்ட் பிரைவேட் லிமிடெட், சென்னை.
5. இந்தோ – ஜெர்மன் தொழிற்பயிற்சி மற்றும் கல்வி நிறுவனம், ஜெர்மனி.
6. அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, சென்னை.

- கொஸ்ட் அலையன்ஸ், பெங்களூரு நிறுவனத்தின் மூலம் சென்னையில் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்களுக்கும், பணியமர்த்தும் அலுவலர்களுக்கும் தலைமைப் பண்புகள் குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.

- டாடா டெக்னாலஜிஸ், புனே நிறுவனத்துடன் இணைந்து *71* அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில் *4.0* தொழில்நுட்ப மையங்களாக உருமாற்றும் முத்திரை பதிக்கும் திட்டத்தில் முதன்மை பயிற்றுநர்களுக்கு தொழில் *4.0* தரத்திலான தொழிற்பிரிவுகளில் பயிற்சி வழங்கும் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. *180* பயிற்றுநர்களை முதன்மை பயிற்றுநர்களாக பயிற்சியளிக்கும் இத்திட்டம் ஜூலை *2023*-இல் முடிவடையும்.

## 3.32. குறுகிய காலப் பயிற்சி

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்களுக்கு குறுகிய கால பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் தினமும் வீட்டிலிருந்து வருபவர்களுக்கு போக்குவரத்து கட்டணமும், விடுதியில் தங்கி பயிற்சி பெறுபவர்களுக்கு உணவு மற்றும் இருப்பிடக் கட்டணமும் வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலம் மூன்று மாதங்கள் ஆகும். வெற்றிகரமாக பயிற்சி முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு திறன்மேம்பாட்டுக் கழகத்தால் பயிற்சி மையங்களாக அங்கீகரிக்கப்பட்டு, ஆட்டோமொபைல், புரடக்சன், எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ், இன்பர்மேஷன் டெக்னாலஜி மற்றும் கன்ஸ்ட்ரக்சன் போன்ற துறைகளில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

*470* இளைஞர்கள் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### *3.33.* தொழிற்சாலைகளில் நேரடிப் பயிற்சி

தொழிற்சாலைகளில் நேரடிப் பயிற்சி என்பது மாணவர்களுக்கு தொழிற்சாலை சூழ்நிலைகளில் செய்முறை பயிற்சி அளிக்கும் ஒரு அவசியமான திட்டம் ஆகும். மாணவர்கள் தொழிற்சாலை பணிகளுக்கு தயாராவதற்கு இப்பயிற்சி உதவுகிறது. மாணவர்களுக்கு தொழிற்சாலைகளில் நேரடிப்பயிற்சி வழங்குவதற்கும், தொழிற்சாலை சூழல்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், உடனடி வேலைவாய்ப்புக்கான திறன்களை வழங்குவதற்கும் இத்திட்டத்தின் மூலம் தொடர்புடைய தொழிற்சாலைகளில் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

## *3.34.* இரட்டைப் பயிற்சி முறை

இரட்டைப் பயிற்சி முறை தொழிற்சாலைகளின் தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம் மிகுந்த வேலைவாய்ப்புள்ள பிரிவுகளில் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு தொழிற்சாலைகள் தொழிற்பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வழிவகுக்கிறது.

இத்திட்டத்தில் தொழிற்பயிற்சி நிலையங்களில் கருத்தியல் பாடங்களும், இயந்திரங்கள், தளவாடங்கள், கருவிகள் பற்றிய அடிப்படை அறிவு மற்றும் பாதுகாப்பு முறைகள் குறித்து பயிற்சி வழங்கப்படும். தொழில் தொடர்பான செய்முறை பயிற்சி தொழிற்சாலைகளில் வழங்கப்படும். மாணவர்களுக்கு தொழிற்சாலை பயிற்சி வழங்கும் நிறுவனத்துடன் தொழிற்பயிற்சி நிலையம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்கிறது. இந்த ஆண்டில் *20* அரசு

தொழிற்பயிற்சி நிலையங்களும் 5 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் 45 தொழிற்சாலைகளுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு இரட்டைப் பயிற்சி முறையை செயல்படுத்திவருகின்றன. 841 மாணவர்கள் இப்பயிற்சி திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 3.35. தமிழ் வழியில் பாடப் புத்தகங்கள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் சிறந்த முறையில் பயிற்சியளிக்க, சென்னையில் உள்ள தேசிய தொழிற்பயிற்சி ஊடக தயாரிப்பு நிறுவனம் *(NIMI)* மூலம் ரூ.6.80 கோடி செலவில் தமிழில் பாடப் புத்தகங்கள் தயாராகி வருகின்றன. இதன் மூலம் கற்றல் முறை மேலும் மேம்படுத்தப்படும்.

## 3.36. தொழிற்பிரிவுகளை தேவைக்கேற்ப மாற்றியமைத்தல்

தொழிற்சாலைகளின் தேவையை பூர்த்தி செய்வதற்கு தேவையான திறன் பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் மாநில இளைஞர்களை வேலைவாய்ப்பு பெறத்தக்கவர்களாக மாற்றுவதற்கும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இருந்த பிரபலமற்ற மற்றும் குறைந்த சேர்க்கை உடைய தொழிற்பிரிவுகள் மாற்றப்பட்டு இன்டீரியர் டிசைன் அன்டு டெக்கோரேஷன், ஸ்மார்ட் போன் டெக்னிஷியன் கம் ஆப் டெஸ்டர், ஐ.ஓ.டி டெக்னீஷியன் *(Smart Health Care)*, டூரிஸ்ட் கைடு, வாட்ச் அன்டு கிளாக் ரிப்பேர் ஆகிய தொழிற்பிரிவுகள் புதிதாக துவங்கப்பட்டுள்ளன.

### *3.37.* தகவல் தொழில்நுட்ப கண்காணிப்புப் பிரிவு

இத்துறையின் அனைத்து தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செயல்பாடுகளை மேற்கொள்ளவும் கண்காணிக்கவும் தலைமையகத்திலும் மண்டல அளவிலும் தகவல் தொழில்நுட்ப கண்காணிப்புப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. மெய்நிகர் வகுப்பறைகள், ஸ்மார்ட் வகுப்பறைகள், மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியை இப்பிரிவு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இப்பிரிவு சேர்க்கையில் வெளிப்படைத்தன்மை மற்றும் தேர்வு மதிப்பீட்டில் துல்லியத்தை உறுதிப்படுத்த இணையதள சேர்க்கை மற்றும் கணினி அடிப்படையிலான தேர்வு (*CBT)* ஆகியவற்றை ஒருங்கிணைத்து வருகிறது.

## *3.38.* அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை பிரபலப்படுத்துதல்

தொழிற்பயிற்சி நிலைய பட்டதாரிகளை கௌரவிக்கும் வண்ணம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர்கள், தொழில்துறை வல்லுநர்கள் மற்றும் உயர் பதவியில் உள்ளோர் ஆகியோரை அழைத்து பட்டமளிப்பு விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விழாக்கள் மூலம் தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கென தர அடையாளம் உருவாக்கப்பட்டு சேர்க்கை அதிகரித்து இடை நிற்றல் குறைந்துள்ளது. பட்டமளிப்பு விழாக்களை தவிர ஆண்டு விழாக்கள், பெற்றோர் ஆசிரியர் கூட்டங்கள், தொழிற்சாலை மற்றும் முன்னாள் மாணவர் கூட்டங்கள் ஆகிய பல்வேறு நிகழ்வுகள் மாநிலம்

முழுவதிலும் உள்ள அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட நிகழ்வுகளை நடத்திட ஒவ்வொரு அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் ரூ.1.00 இலட்சம் மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

### *3.39.* விளையாட்டு நிகழ்ச்சிகள்

மாணவர்களின் தனித்தன்மையினை முழுமையாக மேம்படுத்தும் நோக்கில் விளையாட்டு நிகழ்ச்சிகள் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் விளையாட்டு நிகழ்ச்சிகள் தொழிற்பயிற்சி நிலைய அளவிலும், மண்டல அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கிடையே மண்டல அளவில் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றவர்கள் மாநில அளவிளான விளையாட்டு

போட்டிகளில் பங்குபெறுகின்றனர். மண்டல அளவில் விளையாட்டு போட்டிகளை நடத்துவதற்கு ரூ.15.00 இலட்சமும், மாநில அளவில் விளையாட்டு போட்டிகளை நடத்துவதற்கு ரூ.2.00 இலட்சமும் மாநில அரசால் வழங்கப்படுகிறது.

## 3.40. தொழிற்பயிற்சி நிலையங்கள் இல்லாத இடங்களில் புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்குதல்

மாநிலத்தில் தொழிற்பயிற்சி நிலையங்கள் இல்லாத கீழ்காணும் இடங்களில் திறன் பயிற்சி அளிப்பதற்காக புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.97.55 கோடி செலவில் துவங்கப்பட்டுள்ளன.

| வ. எண் | மாவட்டம் | தொழிற்பயிற்சி நிலையம் |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | வால்பாறை |
| 2 | கடலூர் | மங்களூர் |
| 3 | தருமபுரி | அரூர் |

| வ. எண் | மாவட்டம் | தொழிற்பயிற்சி நிலையம் |
|---|---|---|
| 4 | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் |
| 5 | கிருஷ்ணகிரி | தேன்கனிக்கோட்டை |
| 6 | பெரம்பலூர் | குன்னம் |
| 7 | இராமநாதபுரம் | கடலாடி |
| 8 | சிவகங்கை | மானாமதுரை |
| 9 | திருவள்ளூர் | கும்மிடிப்பூண்டி |
| 10 | திருவண்ணாமலை | செய்யாறு |
| 11 | விருதுநகர் | திருச்சுழி |

## 3.41. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு நவீன இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்

தொழிற்சாலைகளில் மாறிவரும் தொழில் நுட்பத்திற்கு ஏற்றவாறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் நவீன இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களுடன் பயிற்சி அளிக்கும் நோக்கில் பயன்படுத்த முடியாத, உபயோகமற்ற இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை மாற்றி

ரூ.20.00 கோடி செலவில் 57 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு புதிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

### **3.42. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களாக மாற்றுதல்**

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களாக மாற்ற அரசு எடுக்கும் நடவடிக்கைகள் நவீனமயமாக்குதலுக்கான புதிய முனைப்புகளாக உள்ளன. மாநில அரசு, டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் தலைமையிலான சர்வதேச முன்னணி நிறுவனங்கள் இணைந்த குழுமத்துடன் ஒருங்கிணைந்து இத்திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.

இதுவரை இல்லாத புதுமையான இத்திட்டம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஒரு தர அளவை நிர்ணயித்துள்ளது. இத்திட்டம் நவீன தொழில்நுட்ப மையங்களை

அமைப்பதன் மூலம் புத்தாக்கங்களை உருவாக்குவதையும் மாணவர்கள் மற்றும் தொழிற்சாலை பணியாளர்களின் திறனை வளர்ப்பதன் மூலம் அவர்களை உற்பத்தி தொழிற்சாலைகளின் திறன் பெற்ற மனித வளமாக மாற்றுவதையும் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதையும் நோக்கமாக கொண்டுள்ளது.

இந்த நவீன தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களில் உள்ள இயந்திரங்கள், கருவிகள், தளவாடங்கள், வன்பொருள், மென்பொருள் மற்றும் சேவைகளை பயன்படுத்தி பின்வரும் 5 நீண்ட கால தொழிற்பிரிவுகள் மற்றும் 23 குறுகிய கால தொழிற்பிரிவுகளில் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

## நீண்ட கால தொழிற்பிரிவுகள்

| வ. எண் | தொழிற்பிரிவின் பெயர் | பயிற்சிக்காலம் |
|---|---|---|
| ***1.*** | மேனுஃபேக்சரிங் பிராசஸ் கன்ட்ரோல் அன்டு ஆட்டோமேஷன் | 1 வருடம் |
| ***2.*** | இன்டஸ்ட்டிரியல் ரோபோடிக்ஸ் அன்டு டிஜிட்டல் மேனுபேக்சரிங் டெக்னீசியன் | 1 வருடம் |
| ***3.*** | மெக்கானிக் எலெக்ட்ரிக் வெகிக்கிள் | 2 ஆண்டுகள் |
| ***4.*** | பேசிக் டிசைனர் அன்டு விர்ச்சுவல் வெரிஃபையர் (மெக்கானிக்கல்) | 2 ஆண்டுகள் |
| ***5.*** | அட்வான்ஸ்டு சி.என்.சி மெஷினிங் டெக்னீசியன் | 2 ஆண்டுகள் |

## குறுகிய கால தொழிற்பிரிவுகள் – *3* மாதங்கள் பயிற்சி காலம்

| வ. எண் | தொழிற்பிரிவின் பெயர் | வ. எண் | தொழிற்பிரிவின் பெயர் |
|---|---|---|---|
| *1.* | இன்னோவேஷன் அன்டு டிசைன் திங்கிங் | *13.* | எலக்ட்ரிகல் வெஹிக்கிள் |
| *2.* | ஃபண்டமென்டல்ஸ் ஆஃப் புராடெக்ட் டிசைன் | *14.* | இண்டர்நெட் ஆஃப் திங்ஸ் |
| *3.* | புராடக்ட் டிசைன் *&* டெவலப்மெண்ட் | *15.* | அட்வான்ஸ்டு மிஷினிங் *(*மில்*)* |

| வ. எண் | தொழிற்பிரிவின் பெயர் | வ. எண் | தொழிற்பிரிவின் பெயர் |
|---|---|---|---|
| *4.* | ஆட்டோ எலக்ட்ரிக்கல் டிசைன் & டெவலப்மெண்ட் | *16.* | அட்வான்ஸ்டு மிஷினிங் (சிஎன்சி லேத்) |
| *5.* | புராடக்ட் வெரிஃபிகேஷன் அன்டு அனாலஸிஸ் | *17.* | அட்வான்ஸ்டு மிஷினிங் (ரோட்டரி *4* ஆக்ஸிஸ் மில்) |
| *6.* | கம்ப்யூட்டர் எய்டட் மேனுஃபேக்சரிங் | *18.* | அட்வான்ஸ்டு அடிட்டிவ் மேனுஃபேக்சரிங் |
| *7.* | அட்வான்ஸ்டு கம்ப்யூட்டர் எய்டட் மேனுஃபேக்சரிங் | *19.* | அட்வான்ஸ்டு வெல்டிங் |
| *8.* | பிராசஸ் கண்ட்ரோல் அன்டு ஆட்டோமேஷன் | *20.* | அட்வான்ஸ்டு பெயிண்டிங் டெக்னாலஜி |
| *9.* | ஃபண்டமெண்டல்ஸ் ஆஃப் ஆட்டோமொபைல் என்ஜினியரிங் | *21.* | இண்டஸ்ரியல் ரோபோடிக்ஸ் *I* |
| *10.* | அட்வான்ஸ்டு ஆட்டோமொபைல் என்ஜினியரிங் | *22.* | இண்டஸ்ரியல் ரோபோடிக்ஸ் *II* |
| *11.* | ஆட்டோமொபைல் மெயின்டனன்ஸ், ரிப்பேர் அன்டு ஓவர்ஹால் | *23.* | அட்வான்ஸ்டு பிளம்பிங் |
| *12.* | ஆட்டோ எலக்ட்ரிகல் மெயின்டனன்ஸ் | | |

இந்த உன்னதமான திட்டத்தை செயல்படுத்திட பணிமனைகள் கட்டுமானத்திற்கான செலவினம் ரூ.264.83 கோடியை உள்ளடக்கி ரூ.2,877.43 கோடியை அரசு ஒப்பளித்துள்ளது. இயந்திரங்கள், கருவிகள், தளவாடங்கள், வன்பொருள் ஆகியவை கொள்முதல் செய்தல் மற்றும் தொடர்புடைய மென்பொருள் சேவைகளை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றுடன் கூடிய பயிற்சி கட்டமைப்பினை உருவாக்குவதற்கான செலவினம் மாநில அரசு மற்றும் டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்திற்கு இடையே 12.5 : 87.5 என்ற விகிதத்தில் பங்கிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இதர பயன்களை தவிர 5,140 கூடுதல் இருக்கைகளையும் உருவாக்கியுள்ளது.

தொழில்நுட்ப மையங்களின் கட்டுமானம் மற்றும் உருவாக்கம் நிர்ணயிக்கப்பட்ட கால

அளவுக்குள் - அதாவது *2023* ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, பயிற்சிகள் ஆகஸ்டு 2023 முதல் துவங்கப்படும். இத்திட்டம் தொழிற்சாலை தேவைகளுக்கும் திறன் பெற்ற மனிதவள எண்ணிக்கைக்கும் இடையிலான இடைவெளியை பூர்த்தி செய்யும் விதமாக நீண்ட காலத்திற்கு செயல்படும்.

## *3.43.* தொழிற்சாலை மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இடையிலான நட்புறவு

தொழிற்பயிற்சி நிலையங்கள் தொழிற்சாலைகளின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் தொடர்ச்சியாக திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்கி வருவதால் பயிற்சி நடைமுறைகளில் தொழிற்சாலைகளின் பங்களிப்பு நவீன தொழில்நுட்பங்களில் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு உதவிகரமாக இருக்கும். இது தொழில் அறிவு மற்றும் அனுபவத்தை

பரிமாறிக்கொள்வதற்கும் வழிவகை செய்யும். இத்தகைய நோக்கத்தை அடைய கீழ்க்காணும் முன்னணி நிறுவனங்கள் நவீன தொழில்நுட்பங்கள் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு சென்றடையும் வண்ணம், பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் ஆதரவு அளிக்கிறது. இது தவிர தொழிற்சாலை பணிமனை பயிற்சி, தொழிற்சாலைகளை பார்வையிடல், தொழிற்சாலைகளில் நேரடிப் பயிற்சி, தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு தொழிற்சாலை பணியாளர்கள் மூலம் பயிற்சி அளித்தல் ஆகியவற்றினால் தொழிற்சாலை தேவைகளுக்கும் பயிற்சி முடித்துச் செல்லும் மாணவர்களுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புகின்றன. மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் தொடர்புடைய தொழிற்சாலைகளுக்கும்

இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

- சாம்சங் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை.
- பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை.
- இந்தியா பிஸ்டன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
- ஹைடெக் அராய் லிமிடெட், மதுரை.
- ஜேபிஎம் ஆட்டோமொபைல்ஸ் லிமிடெட், சென்னை.
- இசட்எஃப் டெக்னாலஜிஸ் லிமிடெட், சென்னை.
- இகராஷி மோட்டார்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை.
- பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா, சென்னை.
- கார்போரண்டம் யுனிவர்சல் லிமிடெட், ராணிப்பேட்டை.

- **வீனஸ் ஹோம் அப்ளையன்சஸ், தூத்துக்குடி.**
- **வாப்கோ இந்தியா லிமிடெட், சென்னை.**
- **சிம்சன் அண்ட் கோ லிமிடெட், சென்னை.**
- **டைகின் ஏர் கண்டிஷனிங் பிரைவேட் லிமிடெட், சென்னை.**

### *4.* மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

### (தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் *(*தொ.அ.ஈ.*)* என்பது அமைப்பு சார்ந்த துறைகளில் பணிபுரியும் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம், *1948*-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தொ.அ.ஈ. சட்டப்படி, "தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம்" என அழைக்கப்படும் நிறுவன அமைப்பின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் *1955* ஜனவரி *23*-ஆம் தேதி முதல் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு உடல்நலக் குறைவு, மகப்பேறு, உடல் ஊனம் மற்றும் பணியிடத்தில் ஏற்படும்

விபத்துகள் அல்லது தொழில்சார் நோய்களினால் மரணம் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் தமிழ்நாடு முழுவதும் *35.60* லட்சம் தொழிலாளர்கள் மற்றும் *1.07* கோடி தொழிலாளர்களைச் சார்ந்தோர்களுக்கு (அதாவது அவர்களது மனைவி, குழந்தைகள் மற்றும் தொழிலாளர்களின் பெற்றோர்) மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மருத்துவத்தை முழுமையாக வழங்குவதோடு மட்டுமல்லாமல், காப்பீட்டாளருக்கு ஊதிய இழப்பு அல்லது உழைக்க இயலாத நிலை ஏற்படும்போது அதனை ஈடுசெய்யும் வண்ணம், பண உதவியும் வழங்கப்பட்டு வருகிறது.

## *4.1.* தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள்

1. தொ.அ.ஈ. திட்டம் *10* அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களை கொண்ட தொழிற்சாலைகள் மற்றும் இதர நிறுவனங்களுக்குப் பொருந்தும்.

2. ரூ.*21,000/-* வரை மாத ஊதியம் பெறும் தொழிலாளர்கள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் இணைக்கப்படுவதற்கு தகுதியுடையவர்கள்.

3. ரூ.*25,000/-* வரை மாத ஊதியம் பெறும் அனைத்து மாற்றுத் திறனாளி தொழிலாளர்களுக்கும் தொ.அ.ஈ.திட்டம் பொருந்தும்.

4. நாள் ஒன்றுக்கு ரூ.*176/-* வரை வருமானம் ஈட்டும் பணியாளர்கள் தங்கள் பங்களிப்பு

பங்குத்தொகையிலிருந்து விலக்களிக்கப் படுகிறார்கள்.

## *4.2.* திட்டத்தின் நிதி ஆதாரம்

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்களைப் பெறுவதற்கு (*01.07.2019* முதல்) ஊதியத்தில் முறையே *0.75%* மற்றும் *3.25%* மாதாந்திர பங்களிப்பை தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்போர் தத்தமது பங்களிப்பாக வழங்குகின்றனர்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமும் மாநில அரசும் முறையே *7:1* என்ற விகிதாச்சார அடிப்படையில் செலவுகளை பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மாநில அரசு செலவழிக்கும் மொத்த செலவினத்தில் *7/8* பங்கினை தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம் திரும்ப செலுத்துகிறது.

## *4.3.* தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்

தமிழ்நாட்டில், *235* தொ.அ.ஈ மருந்தகங்கள் மற்றும் *10* தொ.அ.ஈ மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது.

| வ. எண் | தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் / தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மருத்துவமனைகள் விவரம் | துறைத் தலைவர் |
|---|---|---|
| *1.* | தொ.அ.ஈ மருத்துவமனைகள் அயனாவரம், மதுரை, சிவகாசி, சேலம், ஓசூர், திருச்சிராப்பள்ளி, மற்றும் வேலூர். | மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ) இயக்குநரகம், தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. |
| *2.* | அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் தொ.அ.ஈ. மருத்துவமனை, கோயம்புத்தூர். | மருத்துவ கல்வி இயக்குநரகம், தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. |
| *3.* | தொ.அ.ஈ மருத்துவமனைகள் கே.கே.நகர் மற்றும் திருநெல்வேலி | புதுதில்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம் மூலம் நேரடியாக நிர்வகிக்கப்படுகிறது. |

மேலும், காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் மூலம் உயர்சிறப்பு மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### *4.4.* தமிழ்நாடு தொ.அ.ஈ. திட்ட நிர்வாக அமைப்பு

தமிழ்நாடு முழுவதும் தொ.அ.ஈ. திட்டத்தின் நிர்வாகத்திற்கு, சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் *(*தொ.அ.ஈ.*)* இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார்.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் *7* மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்களின் தலைமையில் மாநிலம் முழுவதும் *235* தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ.) இயக்குநரின் கீழ் மருத்துவக் கண்காணிப்பாளர்கள் தலைமையில் தற்போது 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

## 4.5. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் (*AYUSH*) பிரிவுகள்

காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஆங்கில முறை சிகிச்சை வசதிகளுடன், கூடுதலாக ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய சிகிச்சை முறைகள் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த "ஆயுஷ்" (AYUSH) சிகிச்சை வசதியும் வழங்கப்படுகின்றன.

| வ. எண் | ஆயுஷ் பிரிவுகள் | தொ.அ.ஈ. மருத்துவமனைகள் | தொ.அ.ஈ. மருந்தகங்கள் |
|---|---|---|---|
| 1. | ஆயுர்வேதா | 8 | 13 |

| வ. எண் | ஆயுஷ் பிரிவுகள் | தொ.அ.ஈ. மருத்துவமனைகள் | தொ.அ.ஈ. மருந்தகங்கள் |
|---|---|---|---|
| *2.* | யோகா | *8* | - - |
| *3.* | யுனானி | *3* | *3* |
| *4.* | சித்தா | *8* | *43* |
| *5.* | ஹோமியோபதி | *3* | *3* |

## ***4.6.*** **தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்கள்**

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் தொழிலாளர் மற்றும் வேலையளிப்போரின் பங்களிப்பாக செலுத்தப்படும் பங்களிப்பானது, அவசர மருத்துவ தேவை மற்றும் பிற இடர்களின்போது காப்பீட்டாளரின் வருவாய் மற்றும் சேமிப்புகளில் கூடுதல் நிதிச்சுமை ஏற்படாவண்ணம் அவர்களுக்கு உதவுகின்றது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் பின்வரும் பல்வேறு சமூக பாதுகாப்பு பயன்களை

காப்பீட்டாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் வழங்குகிறது.

### *1.* மருத்துவ உதவி

காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் (அ) முதற்கட்ட சிகிச்சை *(*புறநோயாளி*)* மற்றும் இரண்டாம் நிலை பராமரிப்பு *(*உள்நோயாளி*)* (ஆ) உயர்சிறப்பு சிகிச்சை போன்றவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் மூலம் வழங்கப்படுகின்றன.

### *2.* மகப்பேறுகால உதவி

பெண் காப்பீட்டு நபர்களுக்கு முந்தைய இரண்டு பங்களிப்பு காலங்களில்

70 நாட்களுக்கு பங்களிப்பு இருப்பின் பிரசவம் மற்றும் கர்ப்பகாலத்திற்கான மகப்பேறுகால உதவி முழு ஊதிய வீதத்தில் 26 வாரங்களுக்கு வழங்கப்படும். மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மேலும் ஒரு மாத காலத்திற்கு இவ்வுதவி நீட்டிக்கப்படும்.

***3.*** **சார்ந்துள்ளோருக்கான உதவி**

காப்பீட்டாளர் வேலை செய்யும் போது ஏற்படும் விபத்து அல்லது அவர் செய்யும் தொழில் மூலம் ஏற்படும் நோயினால் இறக்க நேர்ந்தால், அவரின் சம்பளத்தில் *90* சதவீதம் அவரைச் சார்ந்தவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

***4.*** **உடல் நலமின்மைக்கான உதவி**

ஒரு வருடத்தில் அதிகபட்சமாக *91* நாட்களுக்கு சான்றளிக்கப்பட்ட நோயால்

பாதிக்கப்பட்ட காப்பீட்டாளர்களுக்கு ஊதியத்தில் *70%* ரொக்க இழப்பீடாக உடல்நலமின்மை பலன் வழங்கப்படும். உடல் நலமின்மை உதவித்தொகைக்கு தகுதி பெற, காப்பீட்டாளர்கள் *6* மாத காலத்தில் *78* நாட்களுக்கு பங்களிப்பு செய்திருக்க வேண்டும்.

## *5.* நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவி

*34* வீரியமிக்க மற்றும் நீண்ட கால நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள காப்பீட்டாளர்களுக்கு ஊதியத்தில் *80%* அதிகரிக்கப்பட்ட விகிதத்தில் நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவி இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிப்பு செய்யப்படும்.

**6. அதிகரிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி**

உற்பத்தி வயதில் உள்ள காப்பீட்டாளர்களுக்கு வாசக்டமி / ட்யூபக்டமி போன்ற கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்து கொள்ளும் போது, அதிகரிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி வழங்கப்படும்.

கருத்தடை மேற்கொள்ளும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு முறையே 7 நாட்கள் மற்றும் 14 நாட்களுக்கு முழு ஊதியத்திற்கு சமமான அதிகரிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி வழங்கப்படும்.

**7. இயலாமைக்கான உதவி**

**(அ) தற்காலிக இயலாமைக்கான உதவி**

காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல், பணியில் இருக்கும்போது

காயம் ஏற்பட்டால் எவ்வித பங்களிப்பு செய்வதை பொருட்படுத்தாமல் இயலாமை தொடரும் வரை, ஊதியத்தில் *90* சதவீதம் மாதாந்திர தொகையாக தற்காலிக இயலாமை உதவி வழங்கப்படும்.

**(ஆ) நிரந்தர இயலாமைக்கான உதவி**

காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல், பணியில் இருக்கும்போது நிரந்தர இயலாமை ஏற்படின் நிரந்தர இயலாமைக்கான உதவி வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.

மருத்துவ குழுவின் பரிந்துரையின்படி சம்பாதிக்கும் திறன்

இழப்பிற்கு ஏற்ப மாத ஊதியத்தில் 90% மாதாந்திர தொகையாக வழங்கப்படும்.

### 8. வேலையின்மைக்கான உதவி

#### (அ) ராஜீவ் காந்தி சிரமிக் கல்யாண் யோஜனா

காப்பீட்டாளர், தொழிற்சாலை மூடப்படுவதாலோ, ஆட்குறைப்பு செய்யப்படுவதாலோ, பணியில் இல்லாத நேரத்தில் நிரந்தரமாக இயலாமை ஏற்படுவதாலோ அல்லது இதர எதிர்பாராத காரணங்களால் சுயவிருப்பின்றி வேலை இழக்க நேரிட்டால், வேலையின்மைக்கான உதவி வழங்கப்படும். வேலையின்மைக்கான உதவியானது 24 மாதங்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதுடன் அவரது சராசரி தினசரி ஊதியத்தில் 50 சதவீதத்தை முதல்

*12* மாதங்களுக்கும் அடுத்த *12* மாதங்களுக்கு *25* சதவீதமும் வழங்கப்படும்*.*

**(ஆ) அடல் பீமித் வ்யக்தி கல்யாண் யோஜனா**

தொழிலாளர் அரசு காப்புறுதி கழகமானது *01.07.2018* முதல், காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் பணியமர்த்தப்பட்ட காப்பீட்டாளர் இரண்டு ஆண்டுகள் பணி நிறைவு மற்றும் தொடர்ச்சியாக *4* பங்களிப்பு காலங்களில் *78* நாட்களுக்கு குறைவில்லாமல் பணிபுரிந்திருந்தால் வருவாயில் *25* சதவீதத்திற்கு மிகாமல் *90* நாட்கள் வரை இழப்பீட்டு தொகையினை பணப்பயனாக வாழ்நாளில் ஒருமுறை வழங்கப்படும்.

## 4.7. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் இதர உதவிகள்

### ❖ இறுதிச் சடங்கு உதவி

காப்பீட்டாளர் இறக்க நேரிட்டால், ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.15,000/- வேலையில் சேர்ந்த முதல் நாளிலிருந்து அவரைச் சார்ந்தவர்களுக்கோ அல்லது இறுதிச் சடங்குகளைச் செய்யும் நபருக்கோ வழங்கப்படும்.

### ❖ மகப்பேறுகால செலவுகள்

காப்பீட்டாளரின் மனைவி அல்லது பெண் காப்பீட்டாளருக்கு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலையங்களில் பிரசவ வசதிகள் இல்லாதிருந்தால் ரூ.7,500/- மகப்பேறுகால படியாக வழங்கப்படும்.

❖ **முதியோர் மருத்துவப் பராமரிப்பு**

முதியோர் மருத்துவ பராமரிப்பு உதவியானது, வயது முதிர்வு ஓய்வு அல்லது விருப்ப ஓய்வு / பணியாளர் ஓய்வுத் திட்டம் ஆகியவற்றின் மூலம் ஓய்வு பெறும் காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டம் நிரந்தர இயலாமை காரணமாக பணியை விட்டுச் செல்லும் காப்பீட்டாளர்களுக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

❖ **வழங்கப்படும் உதவிகள்**

➢ ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள், பல்செட்கள், மூக்குக் கண்ணாடிகள் மற்றும் காது கேளாதோருக்கான கருவி போன்ற உதவி சாதனங்கள் இத்திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படுகின்றன.

- தடுப்பூசிகள், எச்ஐவி / எயிட்ஸ் நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் போன்ற நோய் தடுப்பு வசதிகளாக வழங்கப்படுகின்றன.
- தேசிய திட்டங்களான குடும்பநலம் மற்றும் காசநோய் கட்டுப்பாடு திட்டம் செயல்முறைப்படுத்தப்படுகின்றன.

## *4.8.* மருத்துவமனை மேம்பாட்டுக் குழு

மருத்துவமனை வளர்ச்சி குழு மூலம் தொ.அ.ஈ. மருத்துவமனை மற்றும் மருந்தகங்களின் பராமரிப்பு பணிகள், மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் மற்றும் பராமரிப்பு போன்றவற்றிக்கு மருத்துவமனை வளர்ச்சி நிதி வழங்கப்படுகிறது. இரு மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்படும், மருத்துவமனை வளர்ச்சி குழு கூட்டத்திற்கு தொ.அ.ஈ. கழகத்தால் நேரடியாக நிதி வழங்கப்படுகிறது.

## *4.9.* தொ.அ.ஈ. பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் மேற்கொண்ட மருத்துவ செலவினை மீளப்பெறுதல்

**தொகுப்பு ஒப்பந்தம் (ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவமனைகள்)**

தொகுப்பு ஒப்பந்த அடிப்படையின் *(CGHS Rate)* கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்ட *93* சிறப்பு மற்றும் *124* உயர்சிறப்பு சிகிச்சை வசதி கொண்ட தனியார் மருத்துவமனைகளில் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு பணமில்லாத மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் மருத்துவரின் பரிந்துரைகளின் பேரில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். தனியார்

மருத்துவமனைகளுடன் சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரால் (தொ.அ.ஈ) அங்கீகரிக்கப்பட்ட தொகுப்பு ஒப்பந்தத்தின் கீழ் காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சைக்கான பட்டிகள் நேரடியாக தீர்வு செய்யப்படுகின்றன.

## *4.10.* புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறப்பு

*2022* மற்றும் *2023*-ஆம் ஆண்டுகளில் புதிதாக திறக்கப்பட்ட தொ.அ.ஈ. மருந்தகங்கள் பின்வருமாறு

| வ. எண். | தொ.அ.ஈ. மருந்தகம் | தொடங்கப்பட்ட நாள் |
|---|---|---|
| *1.* | துரைசாமிபுரம் | *01.07.2022* |
| *2.* | பரமக்குடி | *01.09.2022* |
| *3.* | பர்கூர் | *01.10.2022* |
| *4.* | மண்ணச்சநல்லூர் | *01.10.2022* |

| வ. எண். | தொ.அ.ஈ. மருந்தகம் | தொடங்கப்பட்ட நாள் |
|---|---|---|
| *5.* | பெரம்பலூர் | *01.10.2022* |
| *6.* | ஏற்காடு | *01.11.2022* |
| *7.* | அரவக்குறிச்சி | *01.11.2022* |
| *8.* | ஒட்டன்சத்திரம் | *01.12.2022* |
| *9.* | அத்திப்பட்டு | *01.02.2023* |
| *10.* | ஊத்துக்கோட்டை | *01.02.2023* |

## *4.11.* காப்பீட்டாளர்களுக்கு உயிர் காக்கும் மருந்துகள் வழங்குதல்

தொ.அ.ஈ மருத்துவமனைகள் மற்றும் தொ.அ.ஈ மருந்தகங்களின் தேவைகளின் அடிப்படையில், அனைத்து அத்தியாவசிய மற்றும் துணை மருந்துகளும் மத்திய தொடர் ஒப்பந்தப்புள்ளி *(Central Rate Contract)* வழியாக கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

இவை தவிர, புற்றுநோயியல், குருதியியல் மற்றும் சிறுநீரகவியல் நோயாளிகளுக்கான உயிர் காக்கும் மருந்துகள் அனைத்தும் பரிந்துரைக்கப்பட்ட தேவைக்கேற்ப உடனடியாக வழங்கப்படுகின்றன.

## *4.12.* தொ.அ.ஈ மருத்துவமனைகளில் வசதிகள் வலுப்படுத்துதல்

அனைத்து 7 தொ.அ.ஈ மருத்துவமனைகளிலும் தேவைக்கேற்ப மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளின் செயல்திறனை மேம்படுத்தவும், காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு சிறந்த சேவையை வழங்கவும் அனைத்து இளங்கலை மருத்துவர்களுக்கு பதிலாக முதுகலை மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### *4.13.* திட்ட செயலாக்கத் திட்டத்தின் *(PIP)* கீழ் உபகரணங்கள் வாங்குதல்

புதுடெல்லி தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் *2020-2021*-ஆம் ஆண்டுக்கான திட்ட செயலாக்கத் திட்டத்தின் கீழ் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுக்கு உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ.*23* கோடி வழங்கிட தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இக்கருவிகள் தமிழ்நாடு மருத்துவ சேவைப் பணிகள் கழகம் *(TNMSC)* மற்றும் அரசின் இணைய வழி கொள்முதல் *(GeM Portal)* மூலம் சம்மந்தப்பட்ட தொ.அ.ஈ மருத்துவமனை மற்றும் தொ.அ.ஈ மருந்தகங்களுக்கு கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

## *4.14. 100* படுக்கைகள் கொண்ட புதிய தொ.அ.ஈ. மருத்துவமனைகள் கட்டுதல்

தமிழ்நாட்டில் திருப்பூர், ஸ்ரீபெரும்புதூர், கன்னியாகுமரி, வாணியம்பாடி, திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் *100* படுக்கைகள் கொண்ட புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் கட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருப்பூர், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

## *4.15.* நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினம்

| வ. எண் | வருடம் | வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூபாயில்) | செலவிடப்பட்ட தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| *1.* | *2019-2020* | *572,06,81,000* | *571,96,33,000* |
| *2.* | *2020-2021* | *606,07,73,000* | *603,49,67,000* |
| *3.* | *2021-2022* | *542,56,07,122* | *542,06,76,340* |

| வ. எண் | வருடம் | வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூபாயில்) | செலவிடப்பட்ட தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| *4.* | *2022-2023* | *638,44,07,000* | *469,41,80,000* *(28.02.2023* வரை*)* |


## *4.16.* தொ.அ.ஈ. கழகத்தின் கோவிட்-19 நிவாரணத் திட்டம்

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி சட்டம், *1948*-இன் கீழ் வரும் காப்பீட்டு நபர்கள் கோவிட்-*19* காரணமாக இறந்துவிட்டால் அவர்களின் குடும்பத்தினருக்கு, காப்பீட்டாளரின் சராசரி ஊதியத்தில் 90 சதவீதம் ஒவ்வொரு மாதமும் செலுத்தப்படும். இறந்த காப்பீட்டாளரின் வாழ்க்கைத் துணைவரும் ஆண்டுக்கு ரூ.*120/-* பெயரளவிலான பங்களிப்புடன் மருத்துவச் சேவைக்குத் தகுதியுடையவர் ஆவார்.

| கோவிட் நிவாரணத் திட்டம் | | | |
|---|---|---|---|
| வருடம் | இறந்த காப்பீட்டாளர்களின் எண்ணிக்கை | பயனாளர்களின் எண்ணிக்கை | பயனாளிகளுக்கு ஆண்டொன்றிற்கு வழங்கப்பட்ட தொகை (ரூபாயில்) |
| ***2021*** *(ஜூன் 2021 முதல் டிசம்பர் 2021 வரை)* | *335* | *730* | *3,47,89,197/- (730 பயனாளிகளுக்கு)* |
| ***2022*** *(ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2022 வரை)* | *76* | *255* | *5,37,71,724/- (985 பயனாளிகளுக்கு)* |
| ***2023*** *(ஜனவரி 2023 முதல் 17.02.2023 வரை)* | *2* | *5* | *1,22,93,266/- (990 பயனாளிகளுக்கு)* |
| **மொத்தம்** | ***413*** | ***990*** | ***10,08,54,187/-*** |

**சி.வி. கணேசன்**
**தொழிலாளர் நலன் மற்றும்**
**திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்**

## தொழிலாளர் துறை




விருதுநகர் மாவட்ட பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் சங்க பிரதிநிதிகள், தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நலவாரியத்திற்கு ஒருமுறை பங்களிப்பு (நிதியம்) ரூ.5.02 கோடியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் 04.02.2023 அன்று வழங்கினர்.

## தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்




"கொத்தடிமைத் தொழிலாளர்கள் முறை ஒழித்தல் – தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்" மற்றும் "குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் – தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்" ஆகிய இரண்டு புத்தகங்கள் அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.02.2023 அன்று வெளியிடப்பட்டன.

## தொழிலாளர் துறை




தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 5 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்ட நிதியுதவி, 15.11.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
## (வேலைவாய்ப்புப் பிரிவு)



சென்னை, புதுக்கல்லூரியில் 15.10.2022 அன்று நடைபெற்ற பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாமில் ஒரு இலட்சமாவது பணி நியமன ஆணையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## (வேலைவாய்ப்புப் பிரிவு)



சென்னை, புதுக்கல்லூரியில் 15.10.2022 அன்று நடைபெற்ற பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாமில், வேலை அளிப்போர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடினார்கள்.



சென்னை, புதுக்கல்லூரியில் 15.10.2022 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில், வேலை நாடுநர்கள் மற்றும் வேலை அளிப்போர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார்கள்.

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

**(பயிற்சிப் பிரிவு)**



அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில்நுட்ப மையங்களாக மாற்றுவதற்காக தமிழ்நாடு அரசு மற்றும் புனேவில் உள்ள டாடா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 14.06.2022 அன்று கையெழுத்தானது.

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

**(வேலைவாய்ப்புப் பிரிவு)**



சென்னை மாநிலக் கல்லூரியில் போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகளை 18.01.2023 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்.

**தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்**




"விருதுநகர் மாவட்டத்திலுள்ள பட்டாசு தொழிற்சாலைகளில் நிகழும் விபத்துக்களை தடுப்பதற்கான செயல் திட்டம்" மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் அரசு தலைமைச் செயலர் ஆகியோரின் முன்னிலையில் 28.09.2022 அன்று விவாதிக்கப்பட்டது.



பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம் 12.12.2022 அன்று விருதுநகர் மாவட்டம் ஆமத்தூரில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோரது தலைமையில் நடைபெற்றது.

## தொழிலாளர் துறை



மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் 16.08.2022 அன்று வழங்கப்பட்டன.

## மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொ.அ.ஈ.தி.)



மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் 05.01.2023 அன்று அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் நடத்தப்பட்ட திறனாய்வுக் கூட்டம்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## (வேலைவாய்ப்புப் பிரிவு)



சென்னை கண்ணகி நகரில் 23.11.2022 அன்று SSC (CGL)-2022 போட்டித் தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகளை அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## (பயிற்சிப் பிரிவு)



திருச்சிராப்பள்ளி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில், மெஷினிஸ்ட் தொழிற்பிரிவில் செய்முறைப் பயிற்சி.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.